
# வடிவேல் ஐயா

## நினைவு மலர்




921
வடிவே
SL/PR

05-12-2004

உ

சிவமயம்




நிரைகழ லரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோதம் நித்திலங் கொளிக்கும்
கோணமாமலை அமர்ந்தாரே.

சுபம்

உ

சிவமயம்



பண்டிதர், சைவப்புலவர்

# இ. வடிவேல் ஐயா அவர்கள்

மலர்வு : 09-12-1919 உதிர்வு : 05-11-2004

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதியில்லை நுஞ்சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்துய்மினே"

# புகுமுன் .....

தமிழுக்கும், சைவத்திற்கும் பெரும் பணியாற்றிய செந்தமிழ்செல்வர் வடிவேல் ஐயா அவர்களின் பிரிவால் துயருற்றுத் துவண்டுபோன தமிழ் நெஞ்சங்களுக்கு.....!

**"எப்போ முடிந்த காரியம்"** என்று யோகர் சுவாமிகள் இயம்பிய திருமந்திர வாக்கு சற்று ஆறுதலைத் தந்தாலும்............... ஐயா அவர்கள் ஆற்றிய பெருஞ்சேவையைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றுமே நினைவு கூறிக்கொண்டே இருக்கும். கல்விக்கு ஆசானாக இருந்து ஏடுதொடக்கி எழுத்தறிவித்து அதிபராக உயர்ந்து நின்று நல் மாணாக்கர் பலரை இத்தரணிக்குத் தந்துதவினார்.

மறைந்திருந்த திருத்தலங்களின் வரலாற்றுச் சுவடிகளையும், அவற்றின் தொன்மையையும் தேடி அறிந்து **"திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள்"** என்னும் நூலை உருவாக்கி அச்சுவாகனமேற்றி சைவ உலகம் அறியவைத்தார். கதாப்பிரசங்கங்கள் மூலம் சைவத்தின் பெருமையையும், அதன் சிறப்பினையும் மக்கள் மனதில் பதியவைத்தார்.

திருக்கோணேசப் பெருமானின் பண்டைய திருத்தலம் பற்றி ஆராய்ச்சிகள் பலசெய்து **"திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்", "கோணேசர் கல்வெட்டு ஒரு கண்ணோட்டம்," "திருக்கோணேஸ் வரம்தான் தட்ஷிணகைலாயம்"** ஆகிய ஆராய்ச்சி நூல்களை உருவாக்கி ஈழவரலாற்றுக்கு அடிநாதமிட்டார்.

ஈழத்திருத்தலங்களுடைய மகிமையை அறிந்துபோற்றி தேவார திருவாசங்கள் பாடியும், ஊஞ்சல் பாட்டு, தேரடி சிந்து, திருப்பள்ளி எழுச்சி என்பவற்றைப் பண்ணுடன் இயற்றியும், அவற்றைப் பாடியும் வழங்கினார்.

திருக்கோணேஸ்வரர் ஆலய அறங்காவலர் சபை, சிவஜோகசமாஜம், திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைபோன்று சமய நிறுவனங்களில் எல்லாம் பதவிவழி பணி செய்தாலும், உள்ளத்தால் தொண்டனாகவே தொண்டாற்றி அவற்றின் வளர்ச்சிக்கு மெருகூட்டினார்.

பண்ணிசைச் செல்வராக இருந்து பண்ணிசையின் பால் பலரை பக்திகொள்ளச் செய்து பண்ணிசைவல்லார்களை உருவாக்கி மகிழ்ந்து நின்றார்.

மேலே கூறப்பட்டவை மட்டுமல்ல வேத, ஆகம விதிமுறைகளில் ஆழ்ந்த அறிவுடன் நின்று அனுட்டானங்களின் செயல்முறைகளில் நாட்டத்துடன் இருந்து திருத்தலத் திருப்பணிகள், குடமுழுக்கு என்பவற்றின்பால் உள்ள உள்ளார்ந்த அறிவை உரியவர்களுக்கு உரியமுறையில் உபதேசித்தும் உய்ய வழிசமைத்தார். காலன் அவரைக் கவர்ந்துசென்று மாதமொன்று சென்ற காலத்தின் வேளையில் அவரை நினைவுகூர்ந்து இச்சிறப்புமிகு **"நினைவு மலரை"** எம் இதயக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

இம்மலருக்கு ஆங்கங்கள் அளித்த பெருநெஞ்சங்களுக்கு முதற்கண் எமது உளமார்ந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வாழ்க தமிழ் ! வளர்க சைவம் !!
வடிவேல் ஐயா நாமம் என்றும் வாழ்க !!!

**"திருக்கோணேஸ்வரம் ஒரு வரலாற்றுச் சுரங்கம். கடந்த பல வருடங்களாக கோணேஸ்வரம் பற்றி அறிவதற்குக் கிடைத்த நூல்களிற் கூறப்பட்டுள்ளனவற்றையும், ஆங்காங்கே முதியவர்கள் செவிவழிச் செய்தியாக அறிந்து வைத்திருந்த விடையங்களையும், கற்சாசனங்கள், கல்வெட்டுக்கள் கூறுவனவற்றையும், பிறநாட்டவர்களும், பிறமதத்தவர்களும் கூறிய கருத்துக்களையும் ஒரு முகப்படுத்தி "ஆனையழகை" காண்பதுபோல 'திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்' என்ற நூலை வருங்கால சந்ததியினருக்குப் பயன்படும் வகையில் ஒரு சாசனமாக எழுதியுள்ளேன். தொன்மையுள் மிகப்பழைய வரலாறுகளும், வண்மையுள் மேன்மைச் சிறப்புக்களும் பேசப்படுகின்றன."**

**- பண்டிதர் இ. வடிவேல்**

# வடிவேல் ஐயாவின் பணிகள்

பண்டிதர், சைவப்புலவர் வடிவேல் ஐயா அவர்கள் தமது அகவை எண்பத்தைந்தில் பூவுலக வாழ்க்கையை விட்டு அழியாப் புகழுடன் புகழுடம்பு தேடிவிட்டார். மீன்பாடும் தேன் நாடாம் மட்டுநகர் ஈன்றெடுத்த தவப்புதல்வன். இராமக்கிருஷ்ண மடத்தால் ஞான ஒளிபெற்ற மானாக்கர், ஆரம்ப காலத்தில் களுதாவளையிலுள்ள தமிழ்ப்பள்ளி ஆசிரியராகப் பணிபெற்றுபின் "தட்ஷண கைலாயம்" எனப் புகழ்பெற்ற திருக்கோணமலை கோணேசர் பூமியில் காலடி எடுத்துவைத்து, இராமக்கிருஷ்ண மட இந்துக்கல்லூரியில் ஆசிரியப் பணிதொடர்ந்து, திருக்கோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபராகப் பதவியேற்று கல்வித் துறைக்குப் பெரும் பங்களிப்பை நல்கினார்.

சைவத்திற்கும், தமிழுக்கும் பெரும்பணி ஆற்றிய சான்றோர்களாகிய யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்த அடிகளார், பண்டிதமணி மு. கணவதிப்பிள்ளை, பண்டிதமணி பெரியதம்பிப்பிள்ளை போன்றோர்கள் வரிசையில் வைத்து எண்ணி மதிக்கக்கூடிய ஒரு பெருந்தகையாகத் திகழ்ந்தார். வடிவேல் ஐயா அவர்கள் ஆற்றிய பணிகள் ஏராளம். ஏராளம். அவற்றின் ஒருசில தடயங்களை உங்கள் பார்வைக்கு சமர்பிக்கிறோம்.

| | **பண்டிதர் வடிவேல் ஐயா அவர்கள் எழுதிய நூல்கள்** | **வெளிவந்த வருடம்** |
|---|---|---|
| 01. | திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள் | 1982 ஆம் ஆண்டு |
| 02. | திருக்கோணமலை கோணேசர் கோயில் வரலாறு | 1984 ஆம் ஆண்டு |
| 03. | சண்முகா சரணம் | 1986 ஆம் ஆண்டு |
| 04. | கோணமலை அந்தாதி | 1990 ஆம் ஆண்டு |
| 05. | திருமுறைப் பண்ணிசைத் திறனாய்வு | 1992 ஆம் ஆண்டு |
| 06. | கோணேசர் கல்வெட்டு ஒரு கண்ணோட்டம் | 1993 ஆம் ஆண்டு |

07. சுவாமி விவேகானந்தரின் ஞானக்குரல் 1994 ஆம் ஆண்டு

08. திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும் 1995 ஆம் ஆண்டு

09. 'ஞானக் கதம்பம்' 1ம், 2ம், 3ம், 4ம், 5ம், 6ம், 7ம், 8ம், 9ம் பாகங்கள் தொகுக்கப்பட்டு கையெழுத்துப் பிரதிகளாக இருக்கின்றன.

10. 'எனது வாழ்க்கை வரலாறு' (உண்மைத் தோற்றத்தின் வெளிப்பாடு, வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையின் நிதரிசன சத்தியம்) கையெழுத்துப் பிரதியாக இருக்கின்றது.

## ஆலயங்களுக்குப் பாடி வழங்கிய ஊஞ்சல் பாக்கள்

01. ஆலடி விநாயகர் கோயில் லெட்சுமி நாராயணர் திருவூஞ்சல்
02. அருள்மிகு இரத்தினசிங்கப் பிள்ளையார் திருவூஞ்சல்
03. கம்பனிப் பிள்ளையார் திருவூஞ்சல்
04. கேதாரீஸ்வர கௌரியம்மன் திருவூஞ்சல் - காளிகோவில்
05. துர்க்காம்பிகை திருவூஞ்சல் - காளிகோவில்
06. ஆரையம்பதி பரமநயினார் கோயில் திருவூஞ்சல்
07. முத்துக்குமார சுவாமிகோயில் - சண்முகப்பெருமான் திருவூஞ்சல்
08. மனையாவெளி - வல்லபைசக்தி அம்மன் திருவூஞ்சல்
09. கருமாரியம்மன் கோயில் திருவூஞ்சல்
10. சிவயோகபுரம் நடேசர் கோயில் திருவூஞ்சல்
11. மாங்கிணாய் மாரியம்மன்கோயில் திருவூஞ்சல்
12. கோணேசப் பெருமான் திருவூஞ்சல்
13. சுவிற்சலாந்து அடிஸ்வி திருமுருகன் கோயில் திருவூஞ்சல்
14. கந்தளாய் சிவன்கோயில் சதுர்வேதமங்களநாதர் திருவூஞ்சல்

# கவிதை ஆக்கங்கள்

01. வில்லூன்றி கந்தன் தேரடிச்சிந்து, 02. நெஞ்சுவிடுதூது, 03. கோணேஸ்வரா இந்துக்கல்லூரிப் பாடசாலைக் கீதம், 04. கோணேசப் பெருமான் அருள்வேட்ற் பதிகம், 05. குறளமுதக் கீர்த்தனை, 06. தென்கயிலைக் கோணேசர் கண்ணொளி ஈந்த பதிகம், 07. கதிர்காம யாத்திரை அனுபவங்கள், 08. குறளமுதக்கும்மி, 09. வில்லூன்றிக் கந்தன் பதிகம், 10. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் பள்ளியெழுச்சி, 11. பாபநாசத்திலாடும் கோணைநாதன், 12. அம்புலியாத்திரை அடங்கலாக இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கவிதை ஆக்கங்களையும் தான் வாழ்ந்த காலத்தில் யாத்துத் தந்துள்ளார். மேலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், பலவேறு விழா மலர்களுக்கு எழுதிய கட்டுரைகள், கவிதைகள் ஏராளம். ! ஏராளாம் !!

# கட்டுரைகள்

**அவற்றின் ஒரு சிலவற்றை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும்.**

01. திருமந்திரத்தில் ஒருமந்திரம்
02. திருமூலரும் திருமந்திரமும்
03. சிவவழிபாடு
04. திவ்யப் பிரபந்தங்களில் தமிழ்த்தேன்
05. ஈழநாட்டின் இணையற்ற ஆலயம் திருக்கோணேஸ்வரம்
06. இராவணனும் இலங்கையும்
07. வள்ளுவர் காட்டும் விருந்தோம்பல்
08. ரதோற்சவத் தத்துவம்
09. ஈழத்துத் தனிப்பாடல்கள்
10. சங்க இலக்கியங்கள் திருமுறையில் ஏற்படுத்திய தாக்கம்

மேலும் முப்பத்திஐந்துக்கு மேற்பட்ட கட்டுரைகளையும் தந்துள்ளார். இவைகளைத் தவிர கோணேசர் கோயில் கும்பாபிஷேக மலர்களை 1963ம் ஆண்டிலும் 1980ம் ஆண்டிலும் சிறப்பான முறையில் உருவாக்கி வெளியிட்டார். வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா மலருக்கு மலராசிரியர் பொறுப்பேற்று அமைத்துக் கொடுத்தார்.

# வடிவேல் ஐயா பெற்ற கௌரவப் பட்டங்கள்

| பட்டம் | | பெற்ற ஆண்டு |
|---|---|---|
| 01. சைவ சித்தாந்த சிகாமணி | - | 1976ம் ஆண்டு |
| 02. கதாப்பிரசங்க வாரிதி | - | 1983ம் ஆண்டு |
| 03. திருமுறைச் செல்வர் | - | 1988ம் ஆண்டு |
| 04. ஞானசிரோன்மணி | - | 1993ம் ஆண்டு |
| 05. கலைமாமணி | - | 1993ம் ஆண்டு |
| 06. தேசிகமணி | - | 1996ம் ஆண்டு |
| 07. கலாபூஷணம் | - | 2002ம் ஆண்டு |

மேலும் பண்ணிசைச் செல்வர், இயற்றமிழ் வித்தகர் திருக்குறள் திலகம் போன்ற பட்டங்களையும் பெற்றுள்ளார்.

**"ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பதுபோல, இறைவனுக்கும் இரண்டு பக்கங்களுண்டு. ஒன்று வெப்பம், மற்றொன்று தட்பம், வெப்பம் சிவம், தட்பம் சக்தி வெப்பமும், தட்பமும் சமமாக இருந்தால்தான் இந்த உடம்போடு உயிரிடை நட்புப் பொருந்திருக்கும். ஏதாவது ஒன்று கூடினால் குடம்பை தனித்தொழியப் புள் பறப்பதுபோல உடம்பை விட்டு உயிர் பிரிந்துவிடும். வெப்பமும், தட்பமும் சமமாக இருந்தால்தான் மலர் மலராக காட்சியளிக்கும். வெப்பம் மிகுந்தால் மலர் வாடும். தட்பம் மிகுந்தால் மலர் அழுகும்."**

**- பண்டிதர் இ. வடிவேல் -**

**அமரர் பண்டிதர் இ. வடிவேல் ஐயா (ஓய்வுபெற்ற அதிபர்)**
**அவர்களின் மறைவையொட்டி**
**திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்பாள்**
**தேவஸ்தான பிரதமகுருக்களும், ஆதீனகர்த்தாவுமாகிய**
**வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள்**
**அவர்களால் யாத்து வழங்கப்பட்டது.**

# " இரங்கற் பா "

" சொல்லிலே பொருளை வைத்து சோர்விலா கவிகள் தைத்து "
தொல் பொருள் யாவும் பேணி..... தோன்று நூல்நயமும் தேடி.....
நல்லதோர் ஆசானாக நவினுறு தொண்டனாக நாளெல்லாம் வாழ்ந்தார் பாரில்,
கல்லெனும் காலன் கடுகி கவர்ந்ததும்.. ஏனோ.....! ஏனோ..... !!

கண்ணென தமிழைப்போற்றி கருத்தெலாம் நிறைந்து வாழ்ந்தீர்
மண்ணிலே மகிமை கொள் நன்னெறிச் சைவம் வாழ நற்பல தொண்டு செய்தீர்
விண்ணெலாம் நும்புகழ் ஓங்க பண்ணோடு பாடம் சொன்னீர்
அண்ணலே அருமருந்தே ஐயனே பண்டிதர் ஐயா......
விண்ணிலே மையல் கொண்டோ மடிந்தனை பாரின்றும்
புண்படு அனலாய் சேதி புழுவென துடி துடித்தோம்
அண்ணலே அருமருந்தே ஐயனே பண்டிதர் ஐயா
பண்ணொடு பாடல் சொன்ன பாவலுப் பாவலனே.....
தென்படு கவிதையெல்லாம் தெளிந்தநல் வார்த்தையெல்லாம்
உன் வருசொல்லாய்த் தானே உலகத்தோர் காண்பாரிங்கே

தென்னவன் மீதுநீயும் தீராத காதல்கொண்டெ யாங்கே
அன்னவன் தாழ்பணிந்து கோணமாமலைப் பதிகம் யாத்தாய்
மன்னவன் சிவனின் மாண்பை மாபெரு தோற்றம் செய்தாய்
என்னதான் எவர்க்கு வேண்டும் அத்தனையாவும் தந்தாய்
உன்னவள் பத்திரகாளி உற்ற நல் ஊஞ்சல் தந்தாய்

குன்றிய ஊர்களெல்லாம் குறுநடை நீயும் சென்றே
நின்று நற்குவலயம் சிறக்கும் நீள்பல கவிகள் தந்தாய்
நின்னுடை நூல்கள் யாவும் நூலெனப் பெற்றோம் யாமே
உன் தனின் ஆவியய்யா அவை தனை அரணாய்க் காப்போம்

மண்ணிலே மட்டக்களப்பு வடிவேலன் பிறந்த நல்லூராம்
எண்ணத்தில் சித்தம்கொண்டு வாழ்ந்ததோ கோணமாமலையாம்
அன்னையாம் பத்திரகாளி அடியினில் அவர்தம் ஆவி
உன்னுனற் சாந்தி வேண்டி உருகுவோம் யாவரும் கூடி
அன்னவன் பிரிவால் வாடும் அனைவரைத் தேற்றியாமும்
மன்னவன் முத்திவேண்டி மறையவள் மலரடி பணிவோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**வேதாகமமாமணி**
**பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள்**
**சமாதான நீதவான்**
**ஸ்ரீ பத்திரகாளியம்பாள் தேவஸ்தானம்**
(ஆதீனகர்த்தா)
**திருக்கோணமலை**

# நிறைவான வாழ்க்கை வாழ்ந்தவர்

உயர்திரு பண்டிதர் வடிவேல் ஐயா அவர்களது மறைவு தமிழ்கூறும் நல்லுலகிற்கு ஓர் பேரிழப்பு என்பதில் ஐயமில்லை. சைவ சமயத்திலே ஆழ்ந்த பற்றும், ஞானமும் கொண்டிருந்த அவர் ஒரு சிறந்த இறைபக்தர். பண்டிதர் மட்டுமல்ல, எளிமையான சுபாவம் கொண்டவரும் கூட. அந்த எளிமை அவரது பெருமையை மேலும் சிறப்பிப்பதாக அமைந்ததோடல்லாமல் அனைவரையும் அவர்பால் ஈர்க்கவும் வழிவகுத்தது.

அமரர் வடிவேல் ஐயா அவர்கள் ஓர் ஓய்வு பெற்ற ஆசிரியர். அவர் தனது ஆசிரியப் பணியை முதலில் மட்டக்களப்பு மாவட்ட களுதாவளை கிராமத்திலுள்ள இராமகிருஷ்ணமிசன் பாடசாலையில்தான் தொடங்கினார் என்பதை இங்கு குறிப்பிடுவதில் பெருமையடைகின்றோம். பின்னர் திருக்கோணமலை இராமகிருஷ்ணமிசன் இந்துக்கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார். அர்ப்பணிப்பு மிகுந்த அவர்களது ஆசிரியப் பணியைக் குறித்து பிறர் கூறக்கேட்டுள்ளோம். அன்னார் திருக்கோணமலையிலுள்ள பல சமய, கல்வி ஸ்தாபனங்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு, சிறந்த முறையில் சமய, சமூகத் தொண்டுகளில் ஈடுபட்டு வந்தார். ஈழத்தின் பல பகுதிகளுக்குச் சென்று பண்ணிசை மூலமாகவும், சொற் பொழிவுகளின் வாயிலாகவும், சைவ சமயத்தின் பெருமைகளை மக்களிடையே எடுத்துக்கூறி வந்தார். அவ்வாறே பல சைவ சமய நூல்களையும் எழுதியுள்ளார். அவரது சமயத் தொண்டினைப் பாராட்டி, அரசும், இதரசமய, இலக்கிய மன்றங்களும் விருதுகள் பல அளித்து அவரை கௌரவித்துள்ளனர்.

அமரர் வடிவேல் ஐயா அவர்களது வாழ்க்கை உண்மையில் பெருமை மிக்கது.அவர் ஒரு நிறைவான வாழ்க்கையை வாழ்ந்தவர் என்பதில் ஐயமில்லை. அவரது ஆன்மா சாந்தியடையப் பிராத்திப்பதோடு அவர்களது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**சுவாமி ஆத்மகனானந்தா**
**இராமக்கிருஷ்ண மிசன்**
**கொழும்பு**

# கிழக்கில் உதித்த ஞான மலர்

சைவத்தையும், தமிழையும் இலங்கைத் திருநாட்டில் கட்டிக்காத்த பெருமை ஆறுமுகநாவலர் பெருமானுக்கே உரியது. அவரை வழிபடுவதும் அவர் வழி நடப்பதும் தமிழரின் சைவரின் தலையாய கடமையாகும். மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை அறிந்து கடவுளை வழிபட்டு கடவுளை அடைதலே ஆகும் என்று அருளினார் நாவலர் பெருமான். அவர் அருளியபடி கடவுளை அறிந்து கடவுளை வழிபட்டு கடவுளை அடைந்தார் பண்டிதர் ஐயா அவர்கள்.

பண்டிதர் ஐயா தனது நூலொன்றில் பின்வருமாறு எழுதியுள்ளார். திருக்கோணமலை ஒரு அற்புதமான பூமி. அருளாளர்களின் கண்களுக்கு அது லிங்க பூமி. பொருளாளர்களின் கண்களுக்கு அது சொர்ணபூமி. சித்த பூருஷர்களின் கண்களுக்கு என்றுமே லிங்க பூமிதான்.

கோணேஸ்வரத்தில் ஐயாவுக்கு இருந்த நம்பிக்கையும், பக்தியும், மதிப்பும் எல்லையற்றவை அதனால்தான் கோணேஸ்வரத்தைப் பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார். பெரிய ஆராய்ச்சிகள் செய்துள்ளார்கள். கோணேசர் கல்வெட்டு அறுபது பாடல்களுக்கும் உரை எழுதியுள்ளார்.

பட்டங்களுக்காக அவர் படிக்கவில்லை. ஞானம்பெற கடவுளின் அருளைப்பெற இறைபணி, மக்கட்பணி செய்வதற்காகவே படித்தார். இரவு பகலாகப் படித்தார். இந்தியா சென்றும் படித்தார். தள்ளாத வயதிலும் படித்தார். பிரிக்கமுடியாத தமிழையும், சைவத்தையும் ஒன்று சேர்த்து படித்துத் தொண்டுகள் பல புரிந்தார். இலங்கை வானொலியிலும் பிரபல ஆலயங்களிலும் சமய விழாக்களிலும் கதாப்பிரசங்கங்களை நடாத்தி மக்களைச் சமய வாழ்வில் ஈடுபடுத்தினார்.

பட்டங்கள் அவரை நாடி வந்தன. பண்டிதர், சைவப்புலவர், ஞானசிரோமணி, கலாபூஷணம், திருமுறைச்செல்வர், பண்ணிசைச் செல்வர், கதாப்பிரசங்கவாரிதி, சைவசித்தார்ந்த சிகாமணி இப்படிப்பல. புத்தகங்கள் எழுதுவது பண்டிதர் ஐயாவுக்குக் கைவந்தகலை. **"தாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"** என்றபடி எங்களுக்காகவே புத்தகங்களை எழுதினார். திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள், திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும், திருக்கோணேஸ்வரம்தான் தெட்சணகைலாசம். கோணேசர் கல்வெட்டு உரை, கோணேசர் கோயில் வரலாறு, சண்முகாசரணம், திருமுறை

பண்ணிசைத் திறனாய்வு, சுவாமி விவேகானந்தரின் ஞானக்குரல், கோணமலை அந்தாதி, வெருகல் சித்திரவேலாயுதர் காதல் என்பன எழுதி வெளியிடப்பட்ட நூல்களாகும். அச்சிட்டு வெளிவராத நூல்கள் சித்த சோதனைச் சிந்தனைகள், திருக்கரைசப் புராண உரை, மாணிக்கவாசகரும் விவேகானந்தரும், நற்சிந்தனைத் தொகுப்பு என்பனவாகும்.

வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிலில் ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினர் வழமையாக நடத்தும் சமய அறிவுப் போட்டியில் திருவாசகம் முற்றுமோதலையும் பன்னிரு திருமுறை முற்றுமோதலையும் திருக்கோணமலையில் தொடக்கி வைத்த பெரியார் யார் என்ற ஒரு வினாப் போட்டிருந்தது. பல பிள்ளைகள் பண்டிதர் வடிவேல் ஐயா என்று சரியான விடை எழுதினார்கள். இப்படித் தொண்டுகள் பல.

பண்டிதர் ஐயாவின் தொண்டுகளைப் பாராட்டி 24 - 05 - 1997ல் வெளியிட்ட **"கிழக்கில் உதித்த ஞானமலர்"** என்னும் நூல் எல்லா விபரங்களையும் தொகுத்துக் காட்டுகிறது. ஐயா மட்டக்களப்பு மண்ணில் வாழ்ந்தார் கோணேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபராக இருந்த காலத்தில் பாடசாலையின் வளர்ச்சி எல்லாத்துறைகளிலும் மேலோங்கியிருந்தது.

சைவமும், தமிழும் பண்டிதர் ஐயாவுக்கு இரு கண்களாக இருந்தது போன்று கோணேசர் கோயிலும் சிவயோகசமாஜமும் இருகண்களாக இருந்தன. கோணேசர் கோயிலில் பன்னிரண்டு ஆண்டுகள் செயலாளராக இருந்து ஆலய முன்னேற்றத்திற்காக உழைத்தார். சிவயோகசமாஜத்தில் பதினைந்து ஆண்டுகள் செயலாளராக இருந்து சமயத் தொண்டுகள் செய்தார். சமாஜத்தை நிறுவிய ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜீ அவர்களின் சீடராக இருந்து பணிகள் பலபுரிந்தார்.

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் போஷகராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். பன்னிருதிருமுறை முற்றுமோதலுக்குத் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் தினமும் நடந்து போய் படித்துவிட்டு நடந்து வருவார்கள். தன்னை இழந்து தொண்டு செய்தார் என்றுதான் கூறவேண்டும். வெருகல்வேல்நடை பஜனைக்குழுவுக்கும் தலைமை தாங்கி நடத்தினார்.

**"தாமின்புறுவது உலகு இன்புறக்கண்டு"** என்றபடி தன்னிடம் இருந்த ஆயிரக்கணக்கான நூல்களையும் ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரிக்கும்,

சிவயோக சமாஜத்துக்கும் சக்தி நிலையத்திற்கும் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைக்கும் கொடுத்து இன்புற்றார்.

**"தமிழே மூச்சு சிவமே வாழ்வு"** என்று வாழ்ந்த ஐயா சிவபூஜை செய்தே சாப்பிடுவார். காளிகோயிலுக்குத் தினமும் சென்று வழிபடுவார். ஆலயங்கள் தோறும் சென்று திருமுறைகள் பாடுவார். பிரசங்கங்கள் செய்வார். இறுதி நாட்களிலும் கந்தளாய் சிவன்கோயில் கும்பாபிஷேக மலருக்கு திருவூஞ்சல் பாடிக் கொடுத்தார். ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி வெளியிட்ட அருள் அயணம் நூலுக்கு வாழ்த்துரை எழுதிக்கொடுத்தார்.

பண்டிதர் ஐயா பழகுவதற்கு இனியவர். நற்குண நற்செய்கைகள் நிறைந்தவர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர். எண்ணமும் சொல்லும் செயலும் ஒன்றாக நடந்தவர். எந்த நேரமும் அவரைச் சந்தித்து சந்தேகங்களைத் தெரிந்து கொள்ளலாம். பாடங்களைக் கேட்டுப் படிக்கலாம்.

பண்டிதர் ஐயாவுக்கு சமூகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. அதற்கு நன்றிக் கடன் ஐயா எழுதிய நூல்களை அச்சிடுவதும், அவற்றைப் படிப்பதும் மாகும்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போமளவும்
எமக்கென்னென்று இட்டு உண்டு இரும்.

நல்வழி - ஔவையார்

ஐயாவின் பிரிவால் வருந்தும் உற்றார் உறவினர் அன்பர்கள் அனைவரும் ஆறுதல் அடையவும், ஐயா அவர்களின் ஆத்மா சாந்தி அடையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

இன்பமே சூழ்க ! எல்லோரும் வாழ்க !!

முத்துக்குமாரசுவாமி கோயிலடி,
திருக்கோணமலை.

**பொ. கந்தையா**
**(காந்தி ஆசிரியர்)**

# சைவப்புலவர் பண்டிதரின் நெஞ்சகலா நினைவலைகள்

தாயினும் நல்ல தலைவர் உறையும் திருக்கோணமலையில் தன் ஆன்மீக வாழ்க்கையை சமயப்பணிக்கும்,சமூகப்பணிக்கும் அர்பணம் செய்து இறைவனடி எய்திய எங்கள் சைவப்புலவர் பண்டிதர் இ.வடிவேலு அவர்களின் மறைவு திருக்கோணமலைக்கு ஓர் பேர் இழப்பாகும். திருக்கோணமலை ஸ்ரீகோணேஸ்வரா கல்லூரியில் தனது ஆசிரியப்பணியை ஆரம்பித்த பண்டிதர்அவர்கள் அக்கல்லூரியின் அதிபராக திறமையுடன்கடமை புரிந்து ஓய்வு பெற்றார்.

திருக்கோணமலையில் கதா கலாட்சேபம் செய்வதிலும் தேவாரப்பண்ணிசை ஓதுவதிலும் முன்னணியில் திகழ்ந்தார். இவரின் பல கதாப்பிரசங்கங்கள் இலங்கை வானொலியில் பல தடவைகள் ஒலிபரப்பி சகலரின் பாராட்டைப் பெற்றுள்ளார். சைவப்புலவர் பண்டிதர் ஐயா அவர்கள் திருக்கோணமலை மாவட்டத்தில் வெருகலம்பதி தொடக்கம் தென்னமரவாடி வரையுள்ள சைவத்திருத்தலங்கள் சென்று தரிசித்து அவ்வாலயங்களின் புராதன வரலாறுகளை நன்கறிந்து "திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள்" என்று எழுதிய இந்து ஆலயங்களின்வரலாற்று நூல் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியது. திருக்கோணேசர் ஆலய வரலாறு சம்பந்தமாக குளக்கோட்டன் கோணேசர் கல்வெட்டு, புராணசெப்புத்தகடுகள், ஏட்டுச்சுவடிகள் பலவற்றையும் ஆராய்ந்து எம்பெருமானின் வரலாற்றை நூலாகவெளியிட்டார்.

சைவப்புலவர் அவர்கள் திருக்கோணமலை சிவயோகசமாஜத்தின் செயலாளராக சுமார் 15 வருடங்களும் திருக்கோணேசர் ஆலயபரிபாலனசபையின் செயலாளராக நீண்டகாலமாகவும் மிகவும் திறம்பட சேவையாற்றினார். இறுதியாக தனது தள்ளாத வயதிலும் சுகயீனமுற்று இருந்தபோதிலும் கந்தளாய் பேராறு கிராமத்தின் பழம் பெரும் சிவன்கோயிலான சோழீஸ்வரர் ஆலயத்தின் பரிபாலனசபையினர் வேண்டுகோளுக்கிணங்க "சதுர்வேத நாயகரே மருங்கிலுறை மாதேவியோடும் ஆடீரூஞ்சல் என்று ஊஞ்சல் பதிகத்தை இயற்றி முடித்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மாதுமை அம்பாள் சமேத ஸ்ரீகோணேசப் பெருமானின் மலர் பாதங்களில் விழுந்து வணங்கி இறஞ்சுகின்றேன்.

**இரா. சம்பந்தன்**
பாரளுமன்ற உறுப்பினர்
திருக்கோணமலை மாவட்டம்.

*ஆத்ம சாந்திப் பிரார்த்தனை உரை*

# பண்டிதர் ஆர் வடிவேல் ஐயா அவர்களின் மறைவையொட்டி எழுதப்பெற்றது

ஈழத்தில் பாடல்பெற்ற இரு தலங்களில் ஒன்றாக விளங்குவது கோணேஸ்வரம். "தாயினும் நல்ல தலைவர்" என்று கோணேஸ்வரப் பெருமானை நாம் அல்லும் பகலும் போற்றுகிறோம். இப்பகுதியின் இனிய வளங்களை "கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை" என்று குறிப்பிடுகின்றார் ஞானசம்பந்தப் பெருமான். திருக்கோணமலையில் தமிழ்த்தாய் பெற்ற ஞானசெல்வராக விளங்கியவர் வடிவேல் ஐயா அவர்கள். நடையிலே ஒழுங்கு, உடையிலே ஒழுங்கு, பேச்சிலே ஒழுங்கு, நினைப்பிலே ஒழுங்கு யாவையும் சரிவரப் பெற்றவர் ஐயா அவர்கள். அத்துடன் ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபராக கடமை புரிந்து ஓய்வு பெற்றவர். தாம் வாழ்ந்த காலத்திலே, கல்வியிலும் கற்பித்தலிலும் நூல்கள் எழுதுவதிலும் பிரசங்கம் செய்வதிலும் தன்னிகரற்று விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பெரியாருடைய கட்டுரைகள் பல ஆணித்தரமானவை. எமது நாட்டுத் தினசரிகளில் அவை காலத்துக்குக் காலம் வெளிவந்ததை யாவரும் அறிவர்.

**"எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே"**

என்பது சங்கப்பாடல். இதனைப் மெய்ப்பிக்கின்ற ஒரு சிலராவது நம்மத்தியில் தோன்றுவதால் தான் உலகம் நிலைபெற்று பெரும் புகழ் அடைகிறது.

பண்டிதர் வடிவேல் ஐயா அவர்களின் மறைவு ஈழத்தமிழ் மக்களுக்கும் சிறப்பாக திருக்கோணமலை தமிழ் அறிஞர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். என்ன செய்வோம். இறைவன் கட்டளையை எவராலும் மீற முடியாது தானே. அந்த உண்மையை உள்ளதில் தேக்கி ஆறுதல் அடைவோம். அன்னாரின் ஆத்மா சுவர்க்க லோகத்தில் பண்டிதர்கள், புலவர்கள் மத்தியில் உலாவந்து கொண்டிருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆகவே துயரைத் தாங்குவோம். அமரரைப் போற்றுவோம். அவரை அறிந்த அனைவரையும் தேற்றுவோம் என்று கூறி அமைகின்றோன்.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**
**சமாதான நீதிபதி,**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை,**

# தொண்டனுக்குத் தொண்டன்
# தோழனுக்குத் தோழன்

சைவமும், தமிழும் ஒன்றையொன்று பிரிக்கமுடியாது பின்னிப் பிணைந்த ஒன்றாகும். இதேபோன்று சைவத்தின் புலவராகவும் பாண்டித்தியம் பெற்றவர்தான் அமரத்துவம் பெற்ற எங்கள் பண்டிதர், சைவப்புலவர், ஞானசிரோன்மணி, கலாபூஷணம் ஆர். வடிவேல் ஐயா அவர்கள். திருக்கோணமலை மாவட்டத்திலே சைவத்தின் விருட்சமாகத் திகழ்ந்த வடிவேல் ஐயா அவர்களின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டதும் பேரிடி ஒன்று விழுந்தது போன்ற உணர்வைப் பெற்று கண்கள் கலங்க, உளம் நெகிழ நாம் எமது சமூகத்தின் அரிய, பெரிய பொக்கிஷத்தினை இழந்து விட்டோம் என நினைந்து கவலையுற்றோம். அன்னாரின் சேவைகள், செயற்பாடுகள் பற்றி கணக்கிட்டு கூறமுடியாது.

நான் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் தேவஸ்தானத்தின் தர்மகர்த்தா சபையின் தலைவராக கடமையாற்றிய காலத்தில் எமது தேவஸ்தானத்துக்கு பல தடவை வருகை தந்து சமய சொற்பொழிவு, பண்ணிசை, கதாப்பிரசங்கம் ஆகியவை மூலம் எமது கிராம மக்களுக்கு நல்லறிவு புகட்டியும் வருடந்தோறும் நடைபெறும் சிவராத்திரி விழாவில் எம்மால் நடாத்தப்படும் சமய அறிவுப் போட்டிகளுக்கு நடுவராக இருந்து சிறப்பித்து வந்துள்ளது மட்டுமன்றி திருவாசகம் ஒருநாள் முற்றிலும் ஓதல் நிகழ்வினை எமது தேவஸ்தானத்தில் 2002ம் ஆண்டு தலைமை தாங்கி தொடக்கி வைத்தமையும் அவரது அளப்பரிய செயலாகும். ஆதிகோணநாயகர் தேவஸ்தானம் மட்டுமன்றி தம்பலகாமம் பட்டிமேடு சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்திலும் இவரது ஆர்வமும், ஈடுபாடும் இணையற்றது. 2001ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேக நிகழ்வுகளில் முழுமையான பங்களிப்பினைச் செலுத்தி சிறப்புற வைத்த பெருமையும் இவருக்கே உரித்தானதாகும்.

இவர் தேனீ ஒன்று பல மலர்களில் அமர்ந்து தேனை எப்படி சேரிக்கின்றதோ அதேபோல திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ஆலயங்கள் அனைத்திற்கும் சென்று அதன் வரலாறுகளைத் திரட்டி திருக்கோணமலை மாவட்டத்திருத் தலங்கள் என்ற நூலினை வெளியிட்டுள்ளார். இவ்விதமே இவரின் பெருமைகளை எடுத்துச் சொல்வதனால் தொடர்ந்து கொண்டே போகலாம். ஆதலால் நான் அவரின் மற்றுமொரு சம்பவத்தை மட்டும் கூறி நிறைவு செய்கின்றேன். இலண்டன் மாநகரிலே ரூட்டிங் **(TOOTING)** சாலையில்

அமைந்துள்ள அருள்மிகு முத்துமாரியம்மன் மண்டபத்தில் நடைபெற்ற **" திருக்கோணேஸ்வர திருத்தல யாத்திரை "** என்னும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ளச் சென்ற நான் அம்மண்டபத்தில் எமது வடிவேல் ஐயாவின் உருவப்படம் தொங்க விடப்பட்டிருந்ததைப் பார்த்து எமது நாட்டின் தலைசிறந்த சைவப்புலவர் பண்டிதர் ஐயா அவர்களின் பெருமையும் புகழும் கடல்கடந்து போற்றப்படுவதை எண்ணி உளம் மகிழ்ந்தேன். இவ்வாறான ஒரு பெரும் மனிதரை இழந்து நிற்கின்றோம். இறப்பு எல்லோருக்கும் பொதுவானது இது பிறப்பின்போதே நிட்சயிக்கப்படுகின்றது. ஆகவே இதனை உணர்ந்த நாம் ஆறுதல் அடைவதே நியதியாகும். எம்மை விட்டுப்பிரிந்த வடிவேல் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடையவும் அன்னாரின் குடும்பத்தார் ஆறுதல் அடையவும் ஸ்ரீ ஹம்சஹமனாம்பிகாதேவி சமேத ஆதிகோணநாயகப் பெருமானை எனது சார்பிலும், எனது கிராம மக்கள் சார்பிலும் வேண்டி நிற்கின்றேன்.

" அறிவுடையோர் என்றும் பெரியாரே "

**- சுபம் -**

**முன்னாள் தலைவர்**
**ஆதிகோணநாயகர் தேவஸ்தானம்**
**சு. கா. சிவசுப்பிரமணியம் ச. நீ**

**" இச்சைக்கு எல்லை இல்லாததாலும், அறிவுக்கு வரம்பில்லாததாலும் இயற்கை அற்புதங்களுக்கு முடிவு காணததாலும் மனத்திலே சாந்தியோ அமைதியோ ஏற்படாமல் வாழ்வில் துன்பத்தையே பெரும்பாலும் சந்திக்கின்றான் மனிதன். "**

**- பண்டிதர் இ. வடிவேல் -**

# ஆத்ம அஞ்சலி

திருக்கோணமலை மண்ணில் நல்லாசிரியனாக வாழ்ந்து அமரத்துவம் எய்திய அமரர் திரு. இ. வடிவேல் ஐயா அவர்களின் பிரிவு ஆழ்ந்த வருத்தத்தை தருகின்றது. சொல்லாலும் செயலாலும் பண்பாளனாக வாழ்ந்து திருக்கோணமலை மண்ணுக்கு பெருமை சேர்த்த பெருந்தகையாளன். அவர் எச்சங்களாக விட்டுச் சென்றிருக்கும் அவரது படைப்புகள் காலத்தால் அழியாத புகழை அவருக்கு வழங்குவதோடு திருக்கோணமலை குறித்த வரலாற்று ஆய்வுகளுக்கு அடிப்படையாகவும் அமைகின்றது. அவர் கோணேசர் கல்வெட்டிற்கு எழுதியுள்ள விளக்க உரையும், திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள் குறித்து எழுதிய வரலாற்றுக் குறிப்புகளும் அவரது புலமைக்கு மிகச் சிறந்த உதாரணங்களாகும்.

திருக்கோணமலையின் ஆரம்பகால வரலாற்றுச் சான்றுகளில் மிக முக்கியமானது கோணேசர் கல்வெட்டாகும். இந்நூல் திருக்கோணமலை வரலாற்று ஆய்வுக்கு மாத்திரமல்ல திருக்கோணமலைச் சமூகத்தின் வழக்காறுகளையும், மொழியில் மரபுகளையும் கண்டறிய உதவுகின்றது. இதுவே திருக்கோணமலைச் சமூக வரலாற்றை எழுத முனைகின்றவர்களுக்கு மிக முக்கிய நூலாகக் கருதப்படுகின்றது. இந்நூல் 1887, 1916, 1950 ஆகிய ஆண்டுகளில் அச்சில் வெளிவந்த போதும் இதனை வெளியிட்டவர்கள் உரைநடை எழுதப்படாத காரணத்தால் சாதாரண மக்களைச் சென்றடையாமல் இருந்தது. முதலில் பண்டிதர் ஐயா அவர்களே 1993இல் எளிய தமிழில் உரைநடை எழுதி திருக்கோணேஸ்வர வரலாற்றின் ஒரு பகுதியையும், குளக்கோட்டன் கால சமூக மரபுகளையும் சாதாரண குடிமக்களும் அறிந்து கொள்ள வழி ஏற்படுத்தினார்.

கோணேசர் கல்வெட்டுப் போன்ற காலத்தால் முந்திய வரலாற்று இலக்கியங்களுக்கு உரை எழுதுவதற்கு தமிழ் மொழி அறிவு மட்டுமன்றி சாசன வழக்காற்றுப் பயிற்சியும், ஆலய மரபுகள் தொடர்பான அறிவும் மிக அவசியமானவையாகும்.

சாசன வாசகங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கோணேசர் கல்வெட்டு, கைலாச புராணம், திரிகோணாசல புராணம் போன்ற வரலாற்று இலக்கியங்களில் ஐயா அவர்கள் பெற்றிருந்த ஆழ்ந்த புலமையும், இலக்கிய அறிவும் அவரது திருக்கோணமலை குறித்த வரலாற்று, ஆய்வுக்கு உதவியது. அவருடைய ஆற்றல் சைவம், தமிழ், வரலாறு, கல்வி என நான்கு துறைகளையும் ஒருங்கிணைத்திருந்த காரணத்தால் கோணேசர் கல்வெட்டுப் போன்ற அரிய நூலுக்கு எளிதாக உரைநடை எழுதக்கூடியதாக அமைந்தது. குளக்கோட்டனால் திருக்கோணமலையில் பூபாலக்கட்டு என்னுமிடத்தில் குடியமர்த்தப்பட்ட வன்னியர்கள் தமிழகத்தின் மருங்கூர், காரைக்கால், திருநெல்வேலி, மதுரை ஆகிய இடங்களில் இருந்து வரவழைக்கப்பட்டனர். இதன் காரணமாகத் தற்கால அகராதிகளில் பொருள் கூறப்படாத பல சோழநாட்டுச் சொற்களும், மரபுகளும் கோணேசர் கல்வெட்டுப் பாடல்களில் பல இடங்களில் சேர்ந்து கொண்டன. பண்டிதர் ஐயா அவற்றிற்கான பொருள்களையும் விளக்கங்களையும் கண்டறிய பல ஏடுகளைத் தேடி வாசித்து அறிந்து கொண்டதோடு திருக்கோணமலையில் வாழ்ந்த மூத்த குடிமக்களை அணுகி விளக்கங்களைத் தெரிந்து கொண்டார். அவருடைய எழுத்துக்களே குளக்கோட்டன் காலச் சமூக வழக்குகளை வெளி உலகத்திற்கு கொண்டு வந்தன. திருக்கோணமலை வரலாறு பற்றி எழுத முனைகின்றவர்களுக்கு பண்டிதர் ஐயாவின் பணி என்றும் அடிப்படையாக அமையும்.

அவருடைய படைப்புக்களின் வரிசையில் திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள் என்ற நூல் காலத்தால் அழியாத வரலாற்று ஆவணம் என்றும் போற்றப்படுகின்றது. அவர் அழிவடையும் நிலையில் இருந்த ஆலயங்களின் தோற்ற வரலாறுகளைத் தேடித் தந்த தமிழ்ச் செம்மல். அவர் பல ஆலயங்களின் தோற்றம் பற்றிய வரலாற்று ஆவணங்கள் கிடைக்கப் பெறாத நிலையில் தலைமுறைகளாக காப்பாற்றப்பட்டுவரும் தகவல்களுக்காகத் திருக்கோணமலை மாவட்டம் முழுவதும் தேடி அலைந்த நாட்கள் என்றும் நினைவு கூறப்படும். சோழர் காலத்தில் சதுர்வேதி மங்கலம் என அழைக்கப்பட்ட கந்தளாய், மற்றும்

தம்பலகாமம் கட்டுக்குளம் பற்று, கொட்டியாரம் ஆகிய பகுதிகளின் சமூக வழக்காறுகளைத் தேடித் தெரிந்து கொண்ட காரணத்தால் அவருடைய ஆய்வில் வரலாற்றுத் திருக்கோணமலையை முழுமையாக தரிசிக்க முடிகின்றது.

அவரது அனைத்துப் படைப்புக்களையும் மதிப்பிடும் போது இரு தெளிவான உண்மைகள் தெரிகின்றன. அவர் திருக்கோணமலை மாவட்டத்தின் வரலாற்று ஆவணங்களைக் காப்பாற்ற விரும்பியதோடு சைவநெறி தழைத்தோங்க வேண்டும் என்பதிலும் அக்கறை கொண்டிருந்தார். திருக்கோணமலைக்கான வரலாற்றைக் கோணேசர் ஆலயம் சார்ந்த இலக்கியங்களுக்கு ஊடாக மட்டுமே பார்க்க முடியும். திருக்கோணமலை வரலாறும் கோணேசர் ஆலய வரலாறும் பிரித்துப் பார்க்க முடியாதவை. அவருடைய வெற்றிகரமான ஆய்வுகளுக்கு அவரிடம் இருந்த தெளிவான தமிழ் அறிவும், சைவநெறிப் புலமையும் துணை நின்றன. சாசன அறிவும், தமிழ் அறிவும், சைவ நெறிப் புலமையும் கைவரப் பெற்ற பண்டிதர் அவர்களிடம் கடின உழைப்பும் இறுதி மூச்சு வரை இருந்தது. எனவே தான் அவருடைய மறைவு திருக்கோணமலை மண்ணில் உருவாக்கி இருக்கும் வெற்றிடம் இலகுவில் நிரப்பக்கூடியதொன்றல்ல. அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்வோம். அவருடைய ஆத்மா சாந்தியடைவதாக!.

**கனகசபாபதி சரவணபவன்**
**அன்புவழிபுரம்**

> **“திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்று அம்சங்களையும், திருக்கோணமலை வன்னிமைகளின் (சிற்றரசுகள்) வரலாறு பற்றிய சில செய்திகளையும் சமுதாய வழமைகளையும் ஒருங்கு சேர்த்து, இணைத்துக் கூறும் அரிய நூல், ‘கோணேசர் கல்வெட்டு’. இலங்கை வரலாற்றின் பிரதானமான அத்தியாயம் ஒன்று இதிலே பொதிந்து கிடக்கின்றது.”**
>
> **- பண்டிதர் இ. வடிவேல் -**

# பணிந்து போற்றுகிறேன்!

ஆலயங்கள் தோறும் அரிய பண்ணிசை ஓதி
மூலை முடுக்கெல்லாம் முத்தமிழ் கலை வளர்த்த
காலைக் கதிரான கலாபூஷணத்தின்
தாழைப் பணிந்தெனது தமிழ்"பா"வை சூட்டுகிறேன்!

அன்னைத் தமிழும் அழியாநற் சைவமும்
தன்னுயிராய் பேணி தான்வளர்த்த பண்டிதரை!
பண்ணிசையில் சிறந்த பண்பான பாவலரை!
இன்று நாமிழந்தாலும் இவர் தொண்டு மறைந்திடுமா?

அன்பருக்கு அன்பராய் தொண்டருக்கு தொண்டராய்!
என்றுமெப்போதும் எல்லோர்க்கும் ஏற்றவராய்!
வண்ணத்தமிழ் தந்த வடிவேல் ஐயா போல்
மண்ணுலகில் மற்றுமொரு மாமேதை கிடைப்பாரோ?

இன்ன செயலுக்கு இவர் பொருத்தமெனத் தேடி
என்ன உதவிகளை எப்போது கேட்டாலும்
தன்னால் முடிந்தவற்றை தளராமற் செய்கின்ற
அன்னலவர் போன்று அவனியிலே யாருண்டு?

ஞானக் கடலாக நல்லறிவுச் சுடராக
போன திசையெல்லாம் புகழ்பூத்த மணியாக
கானக் குயிலாக கலையருவி மலராக(திருக்)
கோணமலை தந்த கோமானுக்கிணையேது?

முதிர்ந்த கதிர்போல முழுமை அறிவோடு
எதிர்ப்புப் பகையில்லா இனிய பணிவோடு
பதித்த சேவைகளால் பட்டம் பல பெற்று!
துதிக்கும் புலமைக்கும் தொண்டுக்கும் ஈடேது?

நூல்கள் பலகற்று நுண்ணறிவைத் தான் பெற்று
ஆல்போல் அறிவான ஆக்கம் பலதந்த
வேல்போல் ஒளிஞான வடிவேல் ஐயாவை
பால்போல் மனம்கொண்டு பணிந்து போற்றுகிறேன்!

**கவிஞர் - வி. சிகண்டிதாசன்**

# கிழக்கில் உதித்த ஞானமலர் ஞானசிரோன்மணி பண்டிதர் வடிவேல் ஐயா என்றும் எம்முடன் இருப்பார்.

மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பிலே பிறந்து தேவாரம் பாடப்பெற்ற தெய்வத் திருநகராம் திருக்கோணமலையிலே வாழ்ந்து எமக்கெல்லாம் ஆத்மீக வழிகாட்டியாக இருந்து எம்மை இறைபணியில் நெறிப்படுத்திச் சென்ற எமது ஆசான் ஞானசிரோன்மணி பண்டிதர் வடிவேல் ஐயாவின் மறைவு சைவ உலகுக்கு ஓர் பேரிழப்பாகும். சைவமும் தமிழும் தழைத்தோங்க தளராது பணியாற்றிய இப்பெரியாரின் வெற்றிடத்தை நிரப்ப எவருமிலர். சேவையைத் தனது இலட்சியமாகக் கொண்டு செயலாற்றிய கர்மவீரர் வடிவேல் ஐயா அவர்கள். திருக்கோணேஸ்வரப் பெருமானின் அனுக்கத் தொண்டரான ஐயா அவர்கள் பல நூல்களின் ஆசிரியராவார். அன்னாரால் எழுதப்பட்டு எமது பேரவையால் வெளியிடப்பட்ட "திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்" இன்றும் என்றும் அன்னாருடைய ஆராய்ச்சித் தன்மையையும் ஆய்வையும் வெளிக்காட்டும் என்றால் அது மிகையாகாது.

கிழக்கிலங்கையிலேயே முதன்முதலாக திருவாசகம் முற்றும் ஓதுதலையும், பன்னிரு திருமுறை முற்றும் ஓதுதலையும் நாம் ஆரம்பித்து தொடர்ந்து பதின்மூன்று வருடங்களாக பக்தி சிரத்தையுடன் நடத்துவதற்கு அச்சாணியாகஇருந்து செயற்பட்டவர் ஐயா அவர்கள். அன்னாருடைய குரல் வளம் இனிமையானதும் தனித்துவம் வாய்ந்ததுமாகும். பண்ணிசைச் செல்வரான ஐயாவின் பெயரால் நாம் ஓர் அறக்கட்டளையை ஏற்படுத்தி அன்னாரை என்றும் நினைவிற் கொள்வோம்.

எமது பேரவையின் காப்பாளர்களில் ஒருவரான பண்டிதர் ஐயா அவர்கள் எமக்கு விருப்புடன் அளித்த அருந்தமிழ் நூல்களை எமது பேரவையின் தி.த.க நினைவு நூலகத்தில் என்றும் அன்பர்களுக்குப் பயன்பட ஆவன செய்வோம் என்பதையும் அறியத் தருவதோடு இந்நூல்களின் மூலம் ஐயாவின் நினைவலைகள் என்றும் எம்முடன் இருக்கும் என்ற திருப்தியுடன் நாம் எமது பணிகளை ஐயாவின் நினைவால் முன்னெடுத்துச் செல்வோம் என்பதையும் குறிப்பிடுவதில் மனநிறைவடைகின்றோம். ஐயா அவர்களை இழந்து நிற்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை வேதனையுடன் தெரியத்தருவதோடு ஐயாவின் ஆத்மா சாந்தியடைய கோணமாமலைப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

சிவஞானச்செல்வர்
**செல்லப்பா சிவபாதசுந்தரம்**
மதிப்பார்ந்த பொதுச்செயலாளர்

# அமரர் இ. வடிவேலனார்

சின்னஞ் சிறுவர்களாய் மட்டக்களப்பு சிங்களவாடியின் கிறவல் பரவிய வீதிகளில் ஆடிப் பாடித் திரிந்த காலமுதல் என் இனிய நண்பன், பாடசாலை ஆசிரியனாய் பண்டிதனாய் இசைப்புலவனாய் சைவசமயாசாரியனாய் இறுதியில் ஒரு ஞானமலராக மலர்ந்து உதிர்ந்து போம்வரை எங்கள் நட்பு நீடித்தது.

ஸ்ரீராமகிருஷ்ண சங்கப் பாடசாலையில் கற்று அப்பாடசாலையில் ஆசிரியனாகப் பணிபுரிந்த காலத்தில் சுவாமி விபுலானந்தரினதும் மட்டக்களப்புக்கு அடிக்கடி வரும் ஸ்ரீராமகிருஷ்ண சங்கப் பெருந்துறவிகளினதும் ஆசிகளைப் பெற்றமை பிற்காலத்தில் சமய சமூகப் பணிகளில் ஈடுபடத் தூண்டுதலளித்தது.

கா.அருணாசல தேசிகர் அவர்களிடம் அரிச்சுவடி கற்று தமது கல்வியை ஆரம்பித்த நண்பர் அவர்கள் தமிழ் இயல் இசைத்துறைகளிலும் சைவத்துறையிலும் திறமை மிக்க குருமார்களை வலியச் சென்றடைந்து இத்துறைகளில் சிறப்பான அறிவை வளர்த்துக் கொண்டார்.

திருக்கோணமலை கோணேஸ்வர வித்தியாலயத்திற்கு ஓர் ஆசிரியனாக வந்து சேர்ந்தது நண்பரின் வாழ்வில் திருப்பு முனையாக அமைந்து விட்டது. அன்றிலிருந்து கோணேஸ்வரரின் பெருமையையும் கோணேஸ்வரத்தின் பழமையையும் வெளிக் கொணர்வதை தமது வாழ்வின் இலட்சியமாக அமைத்துக் கொண்டார். தமது நுண்ணிய ஆய்வின் மூலம் கண்டறிந்த உண்மைகளை நூல்களாக வெளியிடத் தொடங்கினார். தாமே சுயமாக எழுதிய நூல்களைத் தவிர கோணமலை சம்பந்தமான பழைய பல நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

கவிபாடுந்திறனும் பக்தியால் உருகும் சிந்தையும் கொண்ட பண்டித வேலனார், கோணேசப் பெருமான் மீதும் ஏனைய தெய்வ மூர்த்திகள் மீதும் அற்புதமான பாடல்களைப் பாடியுள்ளார்.

இவர் இறுதியாக வெளியிட்ட நூல் "திருக்கோணேஸ்வரம்தான் தெட்சணகயிலாயம்" என்பது முன்பு தாம் செய்த ஆய்வுகளை மீண்டும் ஒருமுறை திரும்பிப்பார்ப்பது போல் அமைந்துள்ள இந்நூலின் பிற்சேர்க்கையாக நம்மவர்களும், பிறநாட்டவர்களும் எழுதி வைத்த குறிப்புகளை தொகுத்துத் தந்துள்ளார். இக்குறிப்புகள் ஆய்வு செய்வார்க்கு அருந்துணையாக அமைந்துள்ளன.

இயல்பாகவே வடிவேலனார் குடும்பத்துக்கு இனிய குரல் வளம் வாய்த்திருந்தது. இவரும் இவரது தமையனார் "பண்ணிசை வேந்தர்" குழந்தைவேல் அவர்களும் தனித்தும், சேர்ந்தும் தேவாரங்களை அவற்றிற்குரிய பண்ணிசையுடன் மட்டக்களப்பிலும் திருக்கோணமலையிலும் பாடிப் பரப்பினர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தமிழ் நாட்டில் சில இசைவாணர்கள் கதாப்பிரசங்கங்கள் (கதாகாலேட்சபம்) மூலம் இந்து சமயக் கருத்துக்களைப் பரப்பிவந்தனர். சாதாரண மக்களிடையே சமய அறிவை ஊட்டுவதற்கு இக்கலை சிறந்த ஊடகமாக அமைந்திருந்தது. எமது இளமைக் காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து மட்டக்களப்புக்கு வந்து சில மாதங்கள் தங்கியிருந்து பல கதாப்பிரசங்கங்கள் புரிந்த சங்கர சுப்பையர் என்ற மதப் பெரியாரின் கதாகாலேட்சபங்களை சிறுவர்களாகிய நாங்கள் ஆர்வத்தோடு செவிமடுத்தோம். இந்தச் சம்பவமே பிற்காலத்தில் நண்பரின் கதாகாலேட்சப நிகழ்ச்சிகளுக்கு வித்திட்டிருக்கலாம். நாளடைவில் பல சைவ ஆலயங்களில் வடிவேலனாரின் கதாப்பிரசங்கங்கள் நடைபெற்றன.

இவைதவிர சொற்பொழிவுகள், பத்திரிகைக்கட்டுரைகள், அருட்பாக்களை முற்றுமோதல் முதலிய பணிகள் மூலமும் அவர் சிவமதக் கருத்துக்களைப் பரப்பி வந்தார். கடவுளை ஏற்றுக் கொள்ளாமை அறிவுக்கு அடையாளம் என்று கருதும் சில பேராசிரியர்கள் வாழுகின்ற இந்த நாட்டில் அவரது மறைவு பேரிழப்பாகும்.

அவரது தூயவாழ்வை உருவாக்கிய பல பெரியார்களில் திருக்கோணமலை சிவயோக சமாஜத்தைச் சேர்ந்த சுவாமி கங்காதரானந்தா குறிப்பிடத்தக்கவர். வடிவேலனாரை ஒரு கரும யோகியாக உருவாக்கிக் கொண்டுவந்த அடிகளாரின் மறைவு சைவ சமயிகளுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

வாழ்வு முற்றிலும் பிரம்மச்சாரியாக வாழ்ந்த இப்பெருமகன் "நோயுற்றடராமல் நொந்து மனம் வாடாமல் பாயிற் கிடவாமல் - காயத்தை ஓர் நொடிக்குள் நீக்கி" கோணேசர் பெருமான் திருவடியை அடைந்து விட்டார்.

"உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்று கோணேசப் பெருமானிடம் முறையிடுவது தவிர நம்மால் என்ன செய்ய முடியும். அவர் நம்பியவாறு, "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

முவ்வகையிலும் சாந்தி நிலவுக.

**வ. சிவசுப்பிரமணியம்**
**மட்டக்களப்பு**

# ஆசானுக்கு ஒரு ஆஞ்சலி

எம்மைப்பிரிந்து எம் தமிழைப்பிரிந்து அண்மையில் இயற்கை எய்திவிட்ட தமிழறிஞர் திரு. வடிவேலு ஐயா அவர்களையோ அல்லது அவரது இலக்கியப்பணிகளைப் பற்றியோ விமர்சிக்கும் அறிவோ அனுபவமோ எனக்கில்லையென்றாலும், அவரைப்பற்றி என்னை எழுதப்பணித்தவர்களின் அன்புக்கட்டளைக்குப் பணிந்து சில வரிகள் எழுத முனைகிறேன். எனக்கு அகரத்தை அறிமுகப்படுத்திய எனது ஆசான் தமிழறிஞர் திரு.வடிவேலு ஐயா அவர்கள் ஈழத்தில் தமிழை வளர்க்கத் தன் வாழ்வையே அர்ப்பணித்த ஒரு மகான் என்பது மறுப்பதற்கு முடியாத ஒரு பேருண்மை.

தமிழைப்போலவே அநாதியானவையும், இன்றைய பல உலகமொழிகளுக்குத் தாய் போன்றவையுமான இலத்தீன் சமஸ்கிருதம் போன்ற மொழிகள் இன்று வழக்கிழந்த மொழிகளாகக் கருதப்படுகையில் தமிழ்மொழி மட்டும் இன்னும் மெருகு குறையாமல் வாழ்கிறதென்றால் அதற்குக் காரணம் ஆசான் திரு. வடிவேலு ஐயா போன்ற பெரியோர்களின் கடும் உழைப்புத் தானென்று கூறினால் அது மிகையானதொன்றல்ல.

காலத்தின் கட்டாயத்தால் பல்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் பல்வேறு மொழிகளைக் கற்றாலும் இன்னமும் தமிழின் பாலுள்ள பற்று அதிகரித்துக் கொண்டுதானிருக்கிறதே தவிர எள்ளளவும் எனக்குக் குறையாதிருக்கும் காரணங்களில் ஒன்று எனக்கு ஏடு தொடக்கி 'அ' முதல் ஆய்த எழுத்து வரை அறிவித்த எனது ஆசானது பணி என்பது எனது உறுதியான நம்பிக்கை.

ஆசானின் மறைவுக்குப் பின்பும் அவர் ஆரம்பித்துவைத்த தமிழாராய்ச்சியும் அவர் தம் பணிகளும் தொடரும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

வணக்கம்

**வரன்**
சிக்காகோ, **U.S.A**

# அறிவொளித்தீபம் அணைந்தது

ஞானசிரோன்மணி பண்டிதர் இ. வடிவேலு ஐயா அவர்கள் தனது 86 வயது நெருங்கும் நேரத்தில் எம்மைவிட்டுச் சிவபதம் அடைந்தார் என்ற செய்தி கேட்டு நானும் எனது குடும்பத்தினரும் துக்கப்பட்டோம். ஐயா அவர்களை 1990 ஆண்டு முதல் தெரியும். எங்கள் தொடர்பு நெருக்கமானது. சென்ற ஆடி மாதம் ஐயா நோய்வாய்ப்பட்டு இருந்தபோது நாம் அவர்களை அவரின் இல்லத்தில் காந்தி ஐயா உடனிருக்கச் சந்தித்தோம்.

ஐயா அவர்களின் தொடர்பால் அவரை நன்கு அறிவேன். கல்வி, கேள்வி, அநுபவம் சேர்ந்த அறிவாளி. முப்பால் முதிர்ச்சியால், ஆன்மீகத்தால் உயர்வுற்று எல்லோரும் நாடும் வகையில் சிறப்புற்று வாழ்ந்தார். என் அறிவை வளர்க்க ஐயாவும் உதவினார். இதனை ஒரு பாக்கியமாகக் கருதுகின்றேன். சாதி, சமய, இன, மதம் எனும் குறுகிய வேறுபாடுகளுக்கு அப்பாலே மனித விழுமியங்களைக் கொண்டு, தனக்கென்ற நோக்கு, வாக்கு, எழுத்து, செயல் என்ற வழியில் வாழ்வாங்கு வாழ்ந்த உத்தம புருஷர். சமய அநுஷ்டானங்களைப் பொறுத்தமட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வழியில் வாழ்ந்தார். சுாவமி விபுலானந்தர், சுவாமி கெங்காரானந்தர், யோகர்சுவாமி, மாதாஜிஅம்மா அவர்களின் ஆசி பெற்றவர், தொடர்பு கொண்டவர்; அவர்களின் தாஸனும்கூட.

கல்விச்சேவைக்கும், தமிழுக்கும், சைவத்திற்கும் அரியபல சேவைகளைச் செய்தார். அத்துடன் சமூக சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்தினார்.

சைவசமயம் சம்பந்தமாக சில அரிய ஆராய்ச்சி நூல்களை எழுதி வெளியிட்டார். அரசாங்கத்தாலும் கௌரவிக்கப்பட்ட பெருந்தகை, வாய்மை, தூய்மை, நேர்மையை அணிகலங்களாகக் கொண்டு ஒரு சிவபக்தனாக இனிது வாழ்ந்தார். ஐயா அவர்கள் சிவபூஜை செய்து எல்லோரிடத்தும் தான் கொண்ட அன்பு, நற்குணம், இன்சொல் பேச்சு, காருண்யம், உதவிடும் விசால மனப்பான்மை கொண்டதனாலே எல்லா வயதினராலும், சமூகத்தினராலும் வேண்டப்பட்ட வராகவும், போற்றி மதிக்கப்பட்டவராகவும் திகழ்ந்தார். தன் அறிவால், ஆற்றலால், அணுகும் முறைகளால், அரவணைக்கும் தன்மையால் சமூகம் நன்மைபெறக் கூடியதாக வாழ்ந்து சென்றார். உலகம் உய்ய தன் பங்களிப்பைத் தவறாது செய்தார்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து இறுதி நேரத்தில் தான் அரும்பாடுபட்டுக் களஞ்சியப்படுத்திய புத்தகங்களை கோயில்களுக்கும், கல்லூரிகட்கும், நூலகங்களுக்கும் உவப்புடன் பகிர்ந்தளிந்த பெருவள்ளல் - பெரு மனத்தினர்.

திருக்கோணமலையில் நான் அறிய தமிழர், சைவ சமயத்தினர் மத்தியில் பண்டிதர் ஐயா, காந்தி ஐயா, திருக்குறள் வினாயகசோதி மக்களின் நன்மதிப்பெற்று வரும்போது, பண்டிதர் ஐயா என்னும் அகல்விளக்கு அணைந்து விட்டது. ஐயாவின் மறைவு திருக்கோணமலையில் வாழ்பவர்களுக்கு மட்டுமன்றி, ஈழத்தவர்கட்கும், உலகெலாம் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கட்கும் சைவர்கட்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இந்த இடைவெளியை நிரப்புவது கஷ்டமாகும்.

அமரத்துவம் அடைந்த சிவநெறிச் செம்மல் பண்டிதர் ஐயா விட்டுச் சென்ற பணிகளைத் தொடரவும், அபிலாசைகளை நிறைவேற்றவும் புதியதோர் சமுதாயம் படைக்கவும் ஐயாவின் திருநாமத்தில் ஓர் ஆய்வு மன்றத்தை நிறுவுவது அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

ஐயாவின் குடும்பத்தினரின் துயரிலும் நாமும் பங்குகொள்கிறோம். குடும்பத்தாருக்கு எல்லா ஆறுதல்களையும் அளிக்கும்படி மாதுமை அம்பாள் சமேதராக வீற்றிருந்து அருள்பாலிக்கும் கோணேஸ்வரப் பெருமானை வேண்டுகின்றோம். ஐயாவின் ஆத்மா ஈசன் இணையடி நிழலில் மோட்சம் அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சி. த. மார்க்கண்டு**

**" நல்ல சிந்தனையாளனுக்கு அறிவு, செல்வம், ஆற்றல் மூன்றும் கிடைக்கும். எங்கு ? எப்போ? எப்படி? என்ற கேள்விக்கு விடைகள் நல்ல சிந்தனையிற் பிறக்கின்றது."**

**- பண்டிதர். இ. வடிவேல் -**

# பண்டிதர் வடிவேல் ஐயாவுக்கு ஒரு மடல்

**அன்புள்ள ஐயா,**

தங்களால் எழுதப்பட்டு இந்து சமய திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட திருமலை மாவட்டத்தின் திருத்தலங்கள் நூல் என்கையில் இன்று வந்தடைந்தது. மிக்க நன்றி. அறுபத்தைந்து கோயில்கள் திருமலை மாவட்டத்தில் பிரபல்யமான கோயில்கள் இருக்கின்றன. என்பதைத் தங்கள் திருநூலில் இருந்து நான் இன்றுதான் அறிந்தேன். வித்துவான் பண்டிதர் கந்தையா **"மட்டக்களப்பு சைவக்கோவில்கள்"** என்னும் நூலில் அவர் முப்பது கோயில்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரபல்யமான கோவில்களென எழுதியுள்ளார். ஆனால் தங்களது நூலில் **அறுபத்தைந்து** கோவில்களைக் காணும்போது நானும் அவ்அவ் கோவில்களுக்குப் போய் வணங்குவதாகத் தென்படுகிறது.

எனவே, பிற்காலச் சந்ததியினர் இப்படிப்பட்ட நூல்களைப் படிப்பார்கள் என்பது திண்ணம்; அதுவே எனது எண்ணமும் கூட. படித்து சைவசீலர்களாக வரவேண்டுமென்பது எனது ஆசை. தங்களது நூலில் தங்களால் பாடிய பொன்னூஞ்சல் பாடலைப் பாடும்போது நடராஜப் பெருமானும் சேர்ந்து ஊஞ்சல் ஆடுகிறார்போல் என்முன் தோன்றிற்று; எல்லோராலும் திருவூஞ்சல் இயற்ற முயடிாது. இயற்றினாலும் பொருட்சுவையின்றியே இருக்கும்.

எனவே, கடைசியாகத் தங்களுக்கு நான் எழுதுவது யாதெனின் தொடர்ந்து நீங்கள் சைவத் தொண்டு ஆற்ற கோணேசர் பெருமான் தங்களுக்கு நற்சுகத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்தித்து முடிக்கின்றேன்.

சுகம்

இப்படிக்கு,
தங்களன்புள்ள
**கா.தங்கவடிவேல்**

**கா. தங்கவடிவேல் J.P.U.M.**
சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்
மட்டக்களப்பு.

**✱ மிகப்பழைய இம்மடலை பண்டிதர் ஐயாவின் கோவையில் கண்டோம்.**

# திருக்கோணமலை வாழ் சைவபெருமக்களின் மனதில் நீங்கா நினைவு பெற்ற தொண்டன் அமரத்துவம் அடைந்த
# பண்டிதர் வடிவேல் அவர்கள்

எங்கள் வடிவேல் அண்ணர் ஒரு பிரம்மச்சாரி. சமூகத்தொண்டர். சமயநெறி தவறாதவர். ஒழுக்கசீலர். வெள்ளை வேட்டியும், வெள்ளை நசனலும் அணிந்த கம்பீரமான உயர்ந்த தோற்றம் உடையவர். நீண்ட நாசி, புன்னகை தவழும் முகம், கம்பீர நடை, கணீரெனப் பேசும் குரல் பண்ணோடு பண்ணிசை பாடும் பாவலன், கதாப்பிரசங்கம் செய்யும் நாயகன். தம்மோடு பழகும் பண்பாளரை ஈர்க்கும் குணாளன். பாடிப்பாடி பரவசமுறும் பண்டிதர் சமயநெறிவழுவாப் புலவர்மணி. கல்வி கற்பிப்பதில் மகாமேதை. அதிபராக இருந்த காலத்தில் சக ஆசிரியரோடு பழகும் விதமே ஒரு தனிக்கலை. சமய வரலாறு எழுதுவதில் அவருக்கு நிகர் யாருமே இல்லை. திருக்கோணமலையிலுள்ள ஆலயங்களுக்கு ஊஞ்சல் பாட்டுப்பாடி ஆக்கிய பெருமை அவருக்கே உரியது.

திருக்கோணமலை ஆலயங்களில் பஞ்சபுராணம் பாடும் அந்த இனிய குரலை இனி எப்போ கேட்போம். மார்கழித் திருவெண்பாவைக் காலங்களில் அருள்பாலிக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் அதிகாலை நான்கு மணிக்கு திருப்பள்ளி எழுச்சி பாடி எழுப்பும் அந்த இன்குரலை இனி எப்போ கேட்போம். அண்ணர் அடிக்கடி என்னிடம் கூறுவார். கயிலாய பூமியாகிய திருக்கோணமலையில் இறக்க வேண்டும். இந்த உடலைப் புதைக்க வேண்டும். புழு உண்ண வேண்டும் என்பார். அதே மாதிரி அண்ணர் 2004 - 11 - 05ல் அமரத்துவம் அடைந்து விட்டார். அவரது உடல் அழிந்தாலும் அவர் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும். வாழ்க அவர் புகழ். அன்னாரை இழந்த குடும்பத்தினருக்கு எனது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.

**திருமதி. சவுந்தரி தெய்வநாயகம்**
(ஓய்வுபெற்ற உப அதிபர்
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி)
திருக்கோணமலை.

# ஞானமலர்தன்னை மறந்திடப்போமா ?.......

நம் திருமலை மண்ணில், தமிழும், சைவமும் பண்ணிசையும், வேரூன்றி வளர்ந்தோங்கிடத் தன் வாணாளினை முழுமையாய் நல்கி வாழ்ந்த கலா பூஷணம், பண்டிதர் வடிவேல் இன்று நம்மிடையே இல்லை. தனது 85ஆவது அகவையில் 05 - 12 - 2004இல் இவ்வுலக வாழ்வை நீத்த பண்டிதர் அவர்களின் சீரிய வாழ்வினைப் பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்போமானால்........

நைஷ்டிகப் பிரமச்சாரியாய் ஆசிரியப் பணியில் ஆரம்பித்த அவர் வாழ்வு ஆன்மீக நாட்டத்தின் விருப்பினால், மலையளவு சாதனைகளைப் படைத்த மாமனிதராய் நம்மை வியப்பில் ஆழ்த்தி நிற்கிறது. ஓர் மனித ஆயுளில் சாதித்திடக் கூடிய சாதனைகளாய் அவர் பணியை மதிப்பிடமுடியாது. பண்டிதர் அவர்களை உண்ணின்றியக்கிய சக்தி எதுவென ஆராய்பவர்க்கு அன்னார் ஆத்மீகக் குருவாய் வரித்துக் கொண்ட ஞானசிரேஷ்டர், அருட்குருநாதர், ஸ்ரீமத் கெங்காதரானந்தாஜி அவர்களின் அருள்வடிவம் தோற்றம் அளித்திடவே செய்யும்.

ஆம்! வடகரை வீதியிலே - 1953 ஆம் ஆண்டிலே இந்த குருசீட சந்திப்பு நிகழ்ந்தது. குருநாதரின் ஞானாலயமாய்த் திகழ்ந்த திருக்கோணேச்சரத்தின் மகிமை பண்டிதர் அவர்கள் நெஞ்சில் அருள் நிறைந்த திருவிடமாய் நிலைத்திருந்தது. அவ்வாலயத்தில், வழமையாய் ஒலிக்கும் பண்டிதரின் தேவாரப் பண்ணிசையில் வயமாகி அவரை தன்னிடம் வரும்படி, அழைப்பொன்றை அனுப்பினார் சுவாமிஜி;பண்டிதர் வந்தார்; அருட்குருவைக் கண்டார்; அருட்குருவின் பணிகளிலே தன்னையே கரைத்துக் கொண்டார். பண்டிதரின் இசையாற்றல், மொழியாற்றல், ஆன்மீக நாட்டம் அத்தனையும், திருமலையின் சிவயோக சமாஜம் என்ற அருள் நிலையத்தை வளர்த்தெடுப்பதில் பயன்படும் வகையில் இத்தாபனத்தின் செயலாளராக - அருட்குருவினால் நியமனம் பெற்றார். பண்டிதர் அவர்கள் காலத்தில் சுவாமிஜியின் எழுத்தாக்கங்கள், வாழ்த்துரைகள், அழகும் செம்மையும் கொண்டு வெளிவந்தன. ஆச்சிரம பஜனைகள் - சமய உரைகள், கலை நிகழ்ச்சிகள், இசை வகுப்புகள், சமய விழாக்கள், மிகச்சிறப்புற அரங்கேறின.

மாணவரில்லம், பன்மதவாச்சி வயற்செய்கை, நடேசராலயமும், அதன் சூழலில் நடேசபுரக் குடியேற்ற உருவாக்கமும் எனப்பலபட விரிந்த சமாஜ சமூக, சமுதாய சேவைகளில் எல்லாம், பண்டிதர் அவர்களின் முழுமனதான அர்ப்பணிப்பு, ஆச்சிரம வரலாற்றில் என்றும் நிலைத்திடும் என்பதில் ஐயமில்லை.

கொழும்பு, இரட்ணம் வைத்தியசாலையில் நம்குருநாதர், நலம்குன்றி, சமாதி அண்மித்திருந்த வேளையிலே, பண்டிதரை வருமாறு அழைப்பொன்றை விடுத்தார். அங்கு விடிகாலைப் போதிலே, எந்த இசைகேட்டு, பண்டிதரைத் தம் அருட்பெருக்கில் இழுத்துக் கொண்டாரோ. அதே தேவார பாராயணத்தைப் பாட வைத்து நீண்ட பொழுது அதில் மூழ்கித்திளைத்தார். அடுத்து ஓரிரு தினங்களில் சுவாமிஜியின் மாகாசமாதி இடம் பெற்றதை அறிந்தவேளை பண்டிதர் ஐயா பெற்ற பேற்றின் அருமையை, சமாஜ அன்பர்கள் உணர்ந்து உளம் நெகிழ்ந்தனர்.

'சைவசிகாமணி' அருட்குருநாதரினால் மனமுவந்து பண்டிதர் அவர்கட்கு சுவாமி வழங்கிய பட்டம் சமுகத்தில் அவர் சேவையின் மாண்பினால் அவர் ஈட்டிக் கொண்ட விருதுகள் எத்தனை எத்தனையோ! எனினும் ஆச்சிரமத்தில் அவர் பெற்ற விருது அத்தனைக்கும் முடிமணியாய்த் திகழ்ந்து நிற்கும் என்பது சமாஜ அன்பர்களின் உறுதியான நம்பிக்கையாகும். கிழக்கில் உதித்த ஞானமலராய் ஆன்மீக சுகந்தத்தை என்றும் தான்சென்றவிடமெல்லாம் பரிமளித்திடச் செய்த நம்பண்டிதர் இ.வடிவேல் அவர்களின் தூய ஆத்மா குருவடி நிழலில் அமைதி பெற்றிட கோணேசப் பெருமான் தாளினைத் தொழுது நிற்கிறோம்.

ஓம் சற்குரு கெங்காதரானந்தாய நமோ நம:

**சிவயோகசமாஜ அன்பர்கள்**
திருக்கோணமலை

**" சமயம் என்பது பக்தி உணர்வை வளர்ப்பதோடு நின்றுவிடாது மக்களின் பண்பாட்டு வளர்ச்சியையும் பேணவேண்டும். சமயநெறி நில்லாதுவிட்டால் சமுதாயம் கட்டுப்பாட்டை இழந்துவிடும். சமயநெறிகளை வளமாக்க வாய்ப்பான இடம் ஆலயம். எனவே ஆலயத்தை எப்போது புனிதமான இடமாகப் பாதுகாக்கவேண்டும். அர்ச்சகர், பணியாளர்கள், அரங்காவலர் அனைவரும் தூய வாழ்வு வாழ்பவர்களாக விளங்க வேண்டும். "**

**- பண்டிதர் இ. வடிவேல் -**

# பண்டிதர் வடிவேலு ஐயாவுக்கு பிரிவுபசாரம் !
# அவரின் ஆத்ம சாந்திக்கு ஓர் விண்ணப்பம் !!

குறிப்பாக திருகோணமலைக்கு பரவலாக இலங்கையின் வடக்கு கிழக்கில் சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய சேவையை பிரமாண்டமான அற்புதமான முறையில் 60 வருடங்களுக்கு மேலாக முழுமூச்சாக ஆற்றிவிட்டு வாழ்விலிருந்தது இளைப்பாறிச் சென்றுள்ள ஐயாவுக்கு நாம் பிரிவுபசாரம் நடாத்துவதில் ஈடுபட்டுள்ளோம்.

மானிடன் ஒவ்வொருவரும் மரணிக்கத்தான் வேண்டும் என்ற விதியின்படி அவர் மறைந்துள்ளார். 85 வருடங்கள் பிரமச்சரிய வாழ்விலிருந்து தனது உடல் பொருள் ஆவி யாவற்றையும் தமிழுக்கும் சைவத்திற்கும் அர்ப்பணித்துச் சென்றுள்ள பெருந்தகைக்கு ஆத்ம சாந்திக்காக விண்ணப்பிக்கின்றோம்.

நான் அவருடன் 20 வருடங்களாக பழகி வந்துள்ளேன். சிந்தனையில் ஆழமான, பேச்சில் இனிய, பண்பின் சிகரமாக, சிறிதளவேனும் சினம் கொண்டறியாத ஐயா அவர்கள் அண்மைக் காலத்தில் எனது குடும்பத்துடன் நெருங்கிப் பழகி துன்பத்திலும் துணை நின்று பகிர்ந்து கொண்டார். அவரோடு நான் பழகிய நீண்டகாலத்தில் நிகழ்ந்த பற்பல சம்பவங்களை எடுத்துரைக்க இக்குறிப்பு நிச்சயம் இடம் தராது. இருந்தும் ஓரிரு சம்பவங்களை குறிப்பிடத்தான் வேண்டும்.

நாம் இருவரும் சேர்ந்து விட்டால் மணித்தியாலக்கணக்கில் பேசுவோம். ஐயா நற்சிந்தனைகளை குடைந்து எடுப்பார் ஒரு முறை அவர் வெளியிட்ட நூல்களையும் நடாத்திய ஆராய்ச்சிகளையும் பற்றிப் பேசும் போது ஒரு பெரியாரின் கூற்றை அவரிடம் குறிப்பிட்டேன். " கல்வி அறிவு இல்லாத ஒருவருக்கு வயோதிபம் ஒரு மாரிகாலம், கல்வி அறிவு உள்ளவருக்கு வயோதிபம் ஒரு அறுவடைக் காலம் " என்றேன். ஐயா ஒரு நிமிடம் அசந்துபோய் இருந்தார். மேலும் நான் சொன்னேன் உங்களின் முயற்சியால் தியாகத்தால் விளைந்த அமோக சாகுபடியை இப்போது நீங்கள் அறுவடை செய்து வாரி வழங்குகின்றீர்களே என்று. மேற்குறிப்பிட்ட கூற்றை திரும்பக் கேட்டு அலாதியுடன் தனது மனதில் பதித்துக்கொண்டார்.

மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பு ஐயா சுகவீனமுற்று வீட்டில் படுக்கையில் இருந்தார். அவர் அப்போது படுக்கையில் விழவில்லை. அன்று அவரின் சுகம் விசாரிக்க சென்றிருந்தேன். அப்போதும் அவரது மேசையில் எழுதிக் கொண்டிருந்த குறிப்புக்களும், நூல்களும் இருந்தன. அவரது உடலில் சிறிது தளர்வு இருந்ததேயமல்லாமல் மனதில் அறிவில் தளர்ச்சி இருக்கவில்லை. நான் சென்னேன் - ஐயா உடல் சம்பந்தமான முறைப்பாடுகளை மனதிற்கு முறையிட்டுக் கொள்வது நல்லதல்ல. நாம் உடல் உபாதைகளை தீர்க்க வழிசெய்து கொண்டு மனதை நிதானமாக நிம்மதியாக இருக்க வழி செய்ய வேண்டும். மலை சாய்ந்து போனாலும் மனம் சாய்ந்து போக இடம் வைக்கக் கூடாது. உங்கள் மனதிற்கு இருக்கும் சுகம் நிதானம் பேணப்பட வேண்டும் என்றேன். ஐயா சொன்னார்கள் "என்னைப் பார்க்க வருபவர்கள் யாவரும் எனது உடல் நலம் பற்றியே அக்கறையுடன் பேசினார்கள். நீங்கள் மட்டுமே எனது மனம் பற்றி பேசுவது எனக்கு புத்துணர்ச்சியை புதிய சிந்தனையை தருகின்றது" என்றார்.

அவருடன் எமக்கு இருந்த அன்பு, பாசம், பிணைப்பு எங்களை ஆக்கிரமிக் கின்றன. அவரின் விதி இவற்றுடன் மோதி அது வெற்றிகொண்டு விட்டது. இன்னும் சிலகாலம் எம்முடன் வைத்திருக்க எடுத்த முயற்சிகள் தோற்கடிப்பட்டுவிட்டன. அவரின் ஆத்மா உரிய இடத்திற்கு செல்லத்தான் வேண்டியதாயிற்று. நாம் வாழ்த்துக்கள், நன்றிகள் கூறி வழியனுப்பியுள்ளோம். அவருடன் எமக்கிருந்த உறவுகள், கடந்த சம்பவங்கள் நிழலாடிக்கொண்டிருக்கும். அன்னாரின் ஆத்மா நித்தியசாந்தி அடைவதாக! அன்னாரின் உறவினர்கள் அறுதல் அடைவார்களாக !!

**கலாநிதி. க. தியாகராஜா**
**& மனைவி பிள்ளைகள்**

## அமரத்துவம் அடைந்த பண்டிதர் ஞானசிரோன்மணி கலாபூஷணம் சைவப்புலவர் இராசையா வடிவேல் ஆசிரியர்

"கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்ற ஆன்றோர் வாக்குக்கமைய ஈழத்தின் மீன் பாடும் நாடாம் மட்டுநகரில் உதித்து வரைகளுமகளோர் பாகமாய்ப் புணர்ந்த கோணேசப் பெருமான் வாழும் கோணமாமலையில் ஆசிரிய சேவை செய்து தமிழையும் சைவத்தையும் வளர்க்க அரும்பாடுபட்டு இறைவனடி சேர்ந்த சைவப்புலவர் பற்றி அறியதார் யாருளார்? அவர் பரப்பிய ஒளி எத்தகையது என்பதைக் கற்றோரும், மற்றோரும் அறிவர் பிறர் கூறவேண்டிய அவசியமே இல்லை. இருந்தும் மரபுபேணி அவர் பற்றிச் சில வார்த்தைகள்.

பண்டிதர் ஐயா அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த வேளை அவரைத் தனியாகவும் மற்றோருடனும் சென்று பார்த்துக் கலந்துரையாடியதுண்டு. அவ்வேளை அவர் நேரடியாகக் கூறாவிட்டாலும் அவரது வேணவாவாக இருந்தது பாயில் கிடவாமல் சென்று விடவேண்டும் என்பதேயாகும் என்பதை உணரக் கூடியதாக இருந்தது. அப்படியே இறைவனும் அவரை ஆட்கொண்டு விட்டான்.

அவர் எழுதிய நூல்கள் அவர்பற்றிக் கூறக்கூடியன. திருக்கோணமலை திருத்தலங்கள், திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும் சென்ற ஆண்டு வெளியிடப்பட்ட விஸ்வரூபதரிசனம் என்பன சிலவாகும்.

திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும் என்ற இவரது நூலுக்கு அணிந்துரை எழுதித் தரும்படி என்னிடம் கேட்டபோது, நான் திகைத்து உங்கள் நூலுக்கு நான் அணிந்துரை எழுதுவதா.................. ? என்ற என் தொடரை முடிக்குமுன் நீங்கள் எழுதவேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவு தூரம் வெயிலையும் பொருட்படுத்தாது நடந்து வந்து கேட்கிறேன். இது எப்போதோ என் மனதில் தீர்மானிக்கப்பட்டதென்றார்.

மறுவார்த்தையின்றி ஐயா ஒரு வாரத்துள் அணிந்துரையோடு உங்களிடம் வருவேன் என்றேன். இப்படியொரு பேறு எனக்கா என்று சிந்தித்தேன்.

அதன்பின் சென்ற வருடம் எனது நூல் ஒன்றுக்கு அவரிடம் ஒரு அணிந்துரை கேட்டேன். நான் இந்தியா சென்று நூலை அச்சடித்து அங்கேயே வெளியீடும் செய்ய இருந்தால் இரண்டொரு நாளில் தரும்படி கேட்டேன். அவர் சிரித்துவிட்டு கதையின் சாரத்தை சொல்லுங்கள் நாளைக்கே தருகிறேன் என்றார். அப்படியே நடந்தது. கதையைப் படித்து எழுதிய மாதிரி ஒரு புலமை தென்பட்டது.

இவர் 1993ம் ஆண்டு ஞானசிரோன்மணி விருதையும், 1999இல் வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் விருதையும், 2002இல் கலாபூசண விருதையும் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றியதில் நிறையப் பாராட்டுக்களும் பெற்றவர்.

கோணேஸ்வரப் பாடசாலை தனியாக இயங்கியபோது அதன் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்து பாடசாலையை முன்னேற்றியவர். திருக்கோணேசர் ஆலய பாரிபாலனசபையின் செயலாளராகவும் இன்னும் வேறு பல பதவிகளையும் வகித்தவர்.

ஐயா அவர்கள் மறைந்தாலும் அவர்புகழ் என்றும் மறையாது. அவர் எமக்கு அளித்திருக்கும் நூல்கள் அவரை என்றும் நிலைபெறச் செய்யும்.

ஆன்னாரின் ஆத்மா சாந்தியடைக !

தமிழ்மணி
**பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கன்**

# திருமலை தந்த திருவிளக்கு

தீராத துயரத்தில் எமை ஆழ்த்திவிட்ட பண்டிதர் வடிவேல் ஐயா ! எவ்விதம் மறப்போம் உங்கள் திருவுருவை. மூன்று மாதங்கட்கு முன்புதானே உங்களைக் கடைசி முறையாகக் கண்டேன். என் கரங்களைப் பிடித்து முத்தமிட்டபடி கலங்கிய குரலில் கூறினீர்கள் - " அடுத்தமுறை நீங்கள் திருக்கோணமலைக்கு வரும்போது நானிருக்கமாட்டேன். அன்று அவ்வார்த்தைகள் எனக்கு மிக கொடூரமாகப்பட்டது. அதனால் வேதனையுற்ற யான் " நீங்கள் எங்கள் மண்ணிற்கு என்றும் தேவையான அரிய் பொக்கிஷம் நீங்கள் இன்னும் நீண்ட காலம் வாழவேண்டும் என்றேன். தீர்க்கதரிசிபோல் கூறியபடி சென்று விட்டீர்கள்.

" நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே
நல்லாரோடு இணைந்திருப்பதுவும் நன்றே "

என்பதற்கிணங்க, பண்டிதர் இ. வடிவேல் ஐயா அவர்களின் சன்மார்க்கச் சொற்பொழிவுகளையும், காதாப்பிரசங்கங்களையும், ஐயா எழுதிய கோணேஸ்வரம் பற்றிய அரும்பெரும் ஆய்வு நூல்களையும் கேட்டும், படித்தும் இன்புறும் பாக்கியம் சிறுவயதிலிருந்தே எனக்குக் கிடைத்தது. என் அறிவுப் பசிக்குத் தீனிபோட்ட வடிவேல் மாஸ்டரை என்றும் மறவேன். பல சமய இலக்கியக் கூட்டங்களில் மாஸ்டர் அவர்களுடன் ஒன்றாக மேடைகளில் அமர்ந்து பேசக்கிடைத்தமை நான் செய்த தவப்பயனே. அப்போதெல்லாம் என்னைத் தட்டிக் கொடுத்து உட்சாகமூட்டியவர் இப்பெருந்தகையே.

அன்றொருநாள் கந்தசஷ்டிக் காலம் வில்லூன்றிக் கந்தன் கோயிலில் இருவரும் சமயச் சொற்பொழிவாற்றினோம். பண்டிதர் ஐயா பேசி முடித்தபின் கூறினார் - " கந்தப் பெருமானின் நாமத்தைக்கொண்ட இருவரில் ஆண் வடிவேல் பேசிவிட்டேன். இனி பேசவருவது பெண் வடிவேல் என்றதும் அங்கு கூடியிருந்த பக்தர்கள் சிரித்து மகிழ்ந்தனர்.

பண்டிதர் ஐயாவின் சுவையான, அர்த்தம் நிறைந்த சொற்பொழிவுகளைக் கேட்டு என் அறிவை தீட்டிக்கொண்டேன். மட்டுநகரின் மண்ணில் பிறந்தாலும் புகுந்த மண்ணான திருக்கோணமலை மண்ணிற்குப் புகழ்தேடித்தந்த பண்டிதர் ஐயாவை சைவத்தமிழ் நல்லுலகம் என்றும் மறப்பதற்கில்லை.

லண்டன் மாநகரில் வருடாவருடம் சிறப்பாக நடைபெறும் முத்தமிழ் விழாவில் (2002ம் ஆண்டு என நினைக்கின்றேன்) பண்டிதர் வடிவேல் அவர்களும் கௌரவிக்கப் பட்டார்கள். அவர்களை கௌரவித்துப் பேசும் சிறப்பு என்னிடம் ஒப்புவிக்கப்பட்டது. அவர்களது தமிழ் சமயத்தொண்டுகள், கோணேஸ்வர ஆலய வரலாறு பற்றிய ஆய்வு நூல்கள் மற்றும் ஐயாவினால் எழுதப்பட்ட சமய நூல்களின் சிறப்புக்களையும் நான் எடுத்துக்கூறியபோது பலர் வியப்புற்றனர். அன்று திரைநீக்கம் செய்யப்பட்ட ஐயாவின் புகைப்படம் இன்றும் முத்துமாரியம்மன் கோயில் சிவயோக மண்டபத்தை அலங்கரிக்கின்றது. ஈழத்தமிழர்கள் இழந்துவிடக்கூடாத ஓர் அரிய பொக்கிஷத்தை நாம் இழந்துவிட்டோம். ஐயாவின் ஆத்மா சாந்திபெற நாம் செய்ய வேண்டியவை அவரது ஒவ்வொரு படைப்புக்களையும் அழியவிடாது காப்பதுடன், உலகமெங்கும் பரந்துவாழும் தமிழர்கள் மட்டுமன்றி ஏனையோரும் படித்துப்பயன்பெற ஆவன செய்யவேண்டும். அத்தோடு ஐயாவின் இரு கண்களான தமிழையும் சமயத்தையும் மென்மேலும் வளர்க்க நாம் பாடுபட வேண்டும்.

தமிழுக்கும், சமயத்திற்கும் தமது வாழ்வையும், வளத்தையும் அர்ப்பணித்த கோணேஸ்வரக் குன்றின்மேல் ஒளிவிளக்காய் ஒளிவீசும் பண்டிதர் வடிவேல் ஐயாவின் திருப்பாதம் வணங்கி இறுதி வணக்கம் செலுத்துகின்றேன்.

ஓம் சாந்தி !

திருக்கோணமலை மண்ணின் மகள்
**செல்வி. செல்வமணி வடிவேல்**
**இலண்டன்**

# சமயப் பெரியார் தமிழறிஞர் சைவப்புலவர் பண்டிதர் வடிவேல் ஐயா

பிறப்புக்கும், இறப்புக்குமிடையே உள்ள காலம் பொன்னானது. அதைச் செம்மையாகப் பயன்படுத்தவே மனிதனுக்குப் புத்தி என்ற பகுத்தறியும் ஆற்றல் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆற்றலை அநேகர் சுயநலத்துக்காகவே பயன்படுத்துகின்றனர். வாழ்க்கையைத் தமக்கும், பிறருக்கும் பயனுள்ளதாக அமைத்துக் கொள்கின்றவர் ஒரு சிலரே. அந்த ஒரு சிலரில் ஒருவர் சைவப்புலவர் பண்டிதர் வடிவேல் ஐயா அவர்கள்.

சமயத் தொண்டுகள் செய்தும், மற்றவர்களை அத்தொண்டில் ஊக்கப்படுத்தியும் வந்தவர் அவர். அன்பர்தம் பணிக்குத் தம்மை ஆளாக்கி இன்பநிலை எய்துவதில் ஈடுபட்டவர். பண்ணென்ற இசைபாடும் அடியார்க்கு மண்ணும் விண்ணும் தரும் மணிகண்டனைப் பண்ணிசை பாடிப் பரவியவர்.

திருக்கோணமலை மாவட்ட ஆலய வரலாறுகளை ஆய்ந்து, அவை மறைந்தும், மறந்தும் போகுமுன் நூலுருவில் தந்தவர். திருக்கோணமலை மக்களாலும் ஏனையோராலும் ஒரு சமயப் பெரியாராக, தமிழ் அறிஞராக மதிக்கப்பட்டவர்.

இந்தப் புண்ணிய பூமி அவரை என்றும் மறவாது. அம்பலத்தாடுகின்ற ஐயன் அவருக்கு மீண்டும் பிறவாத பேறு நல்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

**T. குலவீரசிங்கம்**
**தலைவர்**
பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தி
திருக்கோணமலை.

# ஞானசிரோன்மணி
# பண்டிதர் வடிவேல் ஐயா

அமரர் உயர்திரு ஞானசிரோன்மணி பண்டிதர் வடிவேல் ஐயா, மீன்பாடும் தேன் நாட்டிலே அவதரித்து சிவபூமியென்றும் தெட்சண கைலாயமென்றும் புகழ்பெற்ற வரலாற்றுப் பெருமைமிக்க திருக்கோணமலை திருநகரிலே தனது அரும்பணிகளை நிறைவேற்றி இறைபதம் எய்தியுள்ளார்.

ஐயாவின் இழப்பு திருக்கோணமலையில் ஈடுசெய்ய முடியாத இடைவெளியை தந்துள்ளதெனக் குறிப்பிடலாம்.

மானிடராய் பிறப்பவரெல்லாம் மானிடசேவைக்குரியவர்களல்லர். சிறு தொகையினரே சேவைக்குரியவர்களாக அவதரிக்கின்றனர். இந்துதர்மம் கூறுவதுபோல் தமது பூர்வீக புண்ணியத்தினாலே இம்மையிலே இப்பிறவி அவர்களுக்குக் கிடைக்கின்றது. இவ்வாறான ஓர் புண்ணிய பயனால் பிறவி எடுத்து பல்கலையும் தேர்ந்த பண்டிதனாக ஆன்மீக சேவகனாக மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் எண்பதற்கு ஏற்ப வாழ்ந்து வழிகாட்டிச் சென்ற அந்த அன்பின் திருவுருவை நாம் என்றும் மறக்க முடியாது.

" என் கடன் பணிசெய்து கிடப்பதே " என்ற அப்பர் பெருமானின் கொள்கையைப் பின்பற்றி தனது இறுதிவரை ஆன்மீக சேவையில் மக்களின் உயர்வாழ்வுக்காக தன்னை அற்பணித்து பணியாற்றினார் வடிவேல் ஐயா.

தமிழர்களின் வரலாற்றுச்சான்றாக விளங்கும் கல்வெட்டுக்களையும், ஆவணங்களையும் வரலாற்றுப் பெருமை கொண்ட ஆலயங்களினதும் வரலாறுகளை ஆராய்ந்து நூல்வடிவில் எமக்கீந்த அந்த அறிவுச் சுடர் தேவாராப் பாடல்களை பண்ணோடு கற்றுணர்ந்து பண்ணிசையைப் பரவச் செய்த பாவலர் பண்டிதர் வடிவேல். திருக்கோணமலையிலே அறநெறிப்பாடசாலை ஆரம்பத்திற்கும் வளர்ச்சிக்கும், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் அறநெறிக் கல்வி அபிவிருத்திக்கும், பெரும் பங்காற்றிய பெருந்தகையாவார்.

திருக்கோணேஸ்வரரிடம் ஐயா மிகுந்த பக்தியுடையவர். அவ்வாறே காளி அம்பாள் மீதும் பக்தி கொண்டவர் அடிக்கடி கோணேசப்பெருமானையும், காளி அம்பிகையையும் உச்சரித்துக் கொள்வார்.

ஐயாவிடம் நாள்கோள் சாஸ்திரம் பற்றிக் கூறினால் ஐயா கூறும் ஒரு பொன்மொழி "ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே" என்ற தேவாரடியைக்கூறி இந்த நாள் கோள்களைப் பற்றி அலட்டிக்காதிங்க எப்பெருமான் துணைவேண்டி நில்லுங்கள் என்று கூறுவார்.

திருக்கோணமலை மாவட்டத்தில் பல ஆலயங்களில் ஐயாவால் இயற்றப்பட்ட ஊஞ்சல் பாடல்கள் பொன்னூஞ்சல் வைபவத்தின்போது பாடப்பட்டு வருகின்றன.

ஐயாவின் பாடல் ஓயவில்லை, இசை ஓயவில்லை அவரது கணீரென்ற குரல் ஓசை ஓயவில்லை. இன்றும் எமது காதிலே ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

கதாப்பிரசங்கங்கள் மூலம் எமக்கு அவரது ஞானத்தை வெளிப்படுத்தினார். கதாப்பிரசங்க வாருதி என்ற பட்டத்தினையும் பெற்றார். பல்துறை கலைஞனாக, ஆன்மீக ஞானியாக, தமிழ் வித்துவானாக வித்தியாகுருவாக தன்னை அலங்கரித்து அரும்பணியாற்றிய வடிவேல் ஐயா திருக்கோணமலை மக்களின் நினைவிலிருந்தும், மனதிலிருந்தும் நீங்கமாட்டார் என்பது உறுதி.

வடிவேல் ஐயா தனது கட்டுரை ஒன்றிலே இவ்வாறு குறிப்பிடுகின்றார். "எந்த நாட்டில் அறிஞர்களுக்கோ சான்றோர்களுக்கோ சரியான வரவேற்பும் கண்ணியமும் வழங்கப்படவில்லையோ அந்த நாட்டின் நாகரீகம், பண்பாடு வளர்ச்சியில் இச்செயலை ஒரு பெரிய ஓட்டையாகத்தான் கருதவேண்டும்"

"குடத்தில் ஓட்டை இருந்தால் குடத்துநீர் கொஞ்சம் கொஞ்மாக வெளியேறிவிடும். குளத்துக் கட்டில் அல்லது வயல் வரம்பில் உடை (ஓட்டை) இருந்தால் நீர் விணே விரயமாகிவிடும். ஒரு நாட்டின் அறிஞர்களின் வரலாற்றுப் பொக்கிஷம் பேணப்படாதிருந்தால் காலவோட்டத்தில் கவனிப்பாரற்றுக் கரைந்துவிடும்" என்று புலவர் அகிலேசபிள்ளை வரலாறு பற்றிய கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

தீர்கதரிசியான வடிவேல் ஐயா அறிஞர்களின் முக்கியத்தை இவ்வாறு எடுத்துக் கூறினார். திருக்கோணமலை தமிழ் மக்கள் மாத்திரமல்ல உலகுவாழ் தமிழ் மக்கள் அனைவரும் அறிந்துணரும் பெரியாராக, அறிஞராக அவர் விட்டுச் சென்ற பொக்கிஷங்கள் உயர்நிலைக்கு கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க்கையில் உண்மையான தத்துவத்தை உணர்ந்து வாழ்ந்து எமக்குப் புரியவைத்து இறைபதம் எய்திய ஐயாவை வணக்கத்துக்குரிய தெய்வமாக போற்றுவோமாக.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**சிவஞானம் மகேந்திரராஜா**
**மாவட்ட கலாசார உத்தியோகத்தர்**
**திருக்கோணமலை**

## மகா சிவராத்திரியின் மகத்துவம்

**" சிவம் என்பது உலகம் எல்லாவற்றையும் கடந்து தானே தனியாகத் தோன்றி தன்னிகரில்லாத தனிப்பெரும் சோதி பிரவமாகும். இந்த பரம் பொருளை வழிபடுபவர்களே சைவர்கள் எனப்படுவர். சிவம் என்னும் தனிப்பெரும் சக்தியை அடைய சைவம் என்றும் வழிவகுக்கிறது. இவ் இறைவனின் கருணை பெற்று ஆன்மா தூய்நிலை அடைவதற்கு அனுஷ்டானங்கள் உதவி புரிகின்றன. ஆகவேசிவராத்திரிவிரதம் விரதங்களில் மிகையானது என்று கூறல் சாலச்சிறந்ததாகும். "**

# சைவப்புலவர். பண்டிதர் இ. வடிவேல்

சமயத்தில் சைவமும், மொழியில் தமிழும் தொன்மை மிக்கதென்றால், இன்னும் துலங்குகின்றனவென்றால், அவர்தம் பெருமக்கள் ஆற்றிய சேவையினாலன்றோ. வடக்கே தமிழும், சைவமும் நலிவுற்ற போது அறிஞராம் ஆறுமுகநாவலர் அவதரித்து அருந்தொண்டாற்றியிருந்தார். கிழக்கில் மூவின மக்களும் செறிந்து வாழும் திருக்கோணமலைப்பதியில் சைவமும், தமிழும் இடர் கொண்டவேளை, அவற்றின் மேம்பாட்டிற்கு அரும் தொண்டாற்றிய பெரியோர் வரிசையில் இடம்பிடித்த பெரியார் சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேலு ஆசிரியர் அவர்கள்.

மட்டக்களப்பில் பிறந்த இம்மாமனிதரை திருக்கோணமலை தத்தெடுத்துக் கொண்டது. அவரும் வளர்ந்த மண்ணிற்கு வளம் பல அளித்து மறைந்திருக்கின்றார். ஆசிரியராகவும், தலைமை அதிபராகவும் அறிவு புகட்டிய அன்னாரின் மானாக்கர் இன்றும் அவர்தம் சேவையினை நினைவு கூறுவார்.

சமுதாயத்திற்கு வேண்டிய நல்லொழுக்கத்தினையும், நற்பண்புகளையும் பண்ணிசையோடு கூடிய கதாப்பிரசங்கம் மூலம் மக்களுக்கு எட்டச்செய்யலாம் என்னும் முயற்சியில் பெருவெற்றி கண்ட பெருமகன் அவராவர். அவர்தம் காலத்தே கதாப்பிரசங்கம் செய்வதில் பிரசித்தி பெற்றிருந்த மணிஐயர், சிவசம்பு முதலானோரிடமிருந்து சற்று வேறுபட்ட வடிவமாக உலக மக்கள் உய்வதற்கான உகந்த கருத்துக்களை உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்தியதன் மூலம் உன்னத இடத்தைப் பெற்றவர் வடிவேலு ஐயா அவர்கள். ஆலயங்களில் நவசந்தி பாடும் முறைமையை சிறப்புற கொணர்ந்ததோடு, பஞ்சபுராணம் பாடும் முறையில் ஒரு பாணியினை வளர்த்து, தனக்கு பிற்பாடும் அவை தொடர வேண்டும் என்னும் நல்லெண்ணத்தில் பல மாணாக்கரை உருவாக்கியது இன்னொரு சிறப்பாகும்.

பாடல்பெற்ற திருக்கோணேஸ்வர ஆலயத்தின் வளர்ச்சிக்கான தன் பங்கினை ஆற்றியதோடல்லாமல், அவ்விடயத்தில் பல ஆராய்ச்சி நூல்களை எழுதி, அவை பிரசுரமாகி, பிற்கால சந்ததியினரைச் சென்றடைய வைத்த பெருமை அவருடையது. " யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் " என்னும் கொள்கையினை இறுகப் பற்றிய இப்பெரியார் தன் புலமைகளை தம்மாணாக்கருக்கு அளித்ததோடல்லாமல் தம்வசமிருந்த அரும்பெரும் நூல்களை அனைவரும் எட்டும் வண்ணம் பகிர்ந்தளித்துச் சென்றுள்ளார்.

அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானத்திற்கும் அவருக்கும் சிறப்பான தொடர்புள்ளது. ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பினை பலரும் பங்குபற்றும் வண்ணம் உருவாக்கிய பெருமை அவருடையது. ஒரு மனிதனுடைய வாழ்வின் அளவு அவதர்மசேவையினை ஒட்டியதெனக் கொண்டால், இவர் பெரு வாழ்வு வாழ்ந்து முடித்துள்ளார் எனக் கொள்ளப்படவேண்டும். "திருக்கோணமலை திருத்தலங்கள்" போன்ற ஆராய்ச்சி நூல்கள் அன்னாரின் பெருமைதனை பேசிக் கொண்டே இருக்கும் இப்பெரியார்தம் இழப்பு சைவத்திற்கும், தமிழுக்கும் பேரிழப்பென்ற போதிலும், அவர்தம் சேவையை நினைவு கூர்ந்து போற்றுவோமாக. வாந்தவர் கோடி, மறைந்தவர் கோடியென்றாலும் நினைவில் நிற்கும் இப்பெருமகனார் பெருமை நீடித்து நிலைக்கட்டும்.

**து. தவசிலிங்கம்**
முகாமையாளர்
அருள்மிகு முத்துக்குமாரசுவாமி
தேவஸ்தானம்

**To: Pandit Vadivel**

***Thinking of you with a warm***
***wish that you're resiting in God's care***
***and feeling better every day.***

***Naru & Guru***

# சைவமும், தமிழும், இனிது ஓங்க தன்னலம் கருதாது சேவையாற்றிய உயர் பெரியோன் பண்டிதர் அமரர் வடிவேல் ஐயா

சிவபூமி என்று அழைக்கப்படுகின்ற திருக்கோணேஸ்வரப் பெருமான் விற்றிருந்து அருள்பாலிக்கும் திருக்கோணமலையை தன் பணியினைத் தொடர தன் வாழ்விடத்தை அமைத்துக் கொண்ட பெரியோன் ஞானசிரோன்மணி, பண்டிதர் அமரர். வடிவேல் ஐயா அவர்கள். இவர் கால்படாத கோயிலும் இல்லை, இவர் ஏறாத மேடையும் இல்லை. தமிழ்மொழி விழாவாக இருந்தாலும், சமய விழாவாக இருந்தாலும் பண்டிதர் வடிவேல் ஐயா அவர்கள் சமூகமளித்து இருப்பார்கள்.

எமது சபை அமைக்கப்பட்ட 1952ஆம் ஆண்டிலிருந்து சமய வளர்ச்சியில் எங்களுடன் இணைந்து கொண்டவர். ஞாயிறு சமய வகுப்பினை ஆரம்பித்து வைத்த பெரியார்களில் திரு. வடிவேல் ஐயாவும் ஒருவர். சபை நடாத்துகின்ற அனைத்து விழாக்களிலும் பங்கு கொண்டு ஆக்கமும், ஊக்கமும் அளித்தவர். திருவிழாக்காலங்களில் சமய அறிவுப் போட்டி, திருவாசக முற்றோதல், அருணாகிரி நாதர் குருபூசை ஆகியவற்றை நடாத்த ஆலோசனை நல்கிய பெரியோன்.

வில்லூன்றிக் கந்தன் மேல் தீராத பக்தி கொண்டு பாமாலை புனைந்த பாவலன். புதிய சித்திரத் தேர் அமைத்த பொழுது தேரடிசிந்து இயற்றி அவரே பாடி தொடர்ந்து நாம் பாட அனுமதி அளித்தவர். கிராமம் கிராமமாகச் சென்று ஏட்டுப் பிரதிகளையும், கல்வெட்டுக்களையும் ஆராய்ந்து உண்மை வரலாற்றினை வெளிக்கொணர்ந்து எதிர்கால சந்ததிக்கு ஒப்படைத்து விட்டுச் சென்ற பெரியவர்.

இவ்வரலாறுகள் அழியவிடாது பாதுகாப்பதே இந்து மக்கள் அவருக்கு செய்யும் கைமாறாகும். ஐயாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வில்லூன்றி கந்தன் திருவருளை வேண்டி பிராத்திக்கின்றோம்.

**ந. செல்வஜோதி.**
கௌரவசெயலாளர்,
ஸ்ரீ முருகன் தொண்டர் சபை,
வில்லூன்றி - திருக்கோணமலை

**பண்டிதர் இ.வடிவேல் அவர்கள் ஆக்கிய திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும் என்ற நூலிலிருந்து,**

# திருக்கோணமலை சிவபூமி

"இலங்கையின் கிழக்கே கடற்கரையோரமாக அமைந்துள்ள மலைத் தொடர்களையும், இயற்கைத் துறைமுகத்தையும் தன்னகத் தேயடக்கிய பிரதேசம் திருக்கோணமலை. இத்திருக்கோணமலையில் கடலினுள்ளே நீண்டு உயர்ந்து நிற்கும் குன்றில் வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடக்கம் இந்துக் கோயில்கள் மூன்று இருந்தன. அவைகள் உலக இந்துக்களின் வழிபாட்டுத்தலமாக விளங்கிய காரணத்தால் அக்குன்றம், அங்கிருந்த ஆலயங்களை உள்ளடக்கிய பிரதேசம் முழுவதும் புனித இந்து ஸ்தலமாகத் திருக்கோணேஸ்வரம் என்ற பெயரோடு விளங்கிப் பிரபல்யமடைந்திருந்தது. அது ஈழநாட்டின் சிவஸ்தலமாகவும் இருந்து வந்தது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் திருக்கோணேஸ்வரம் இலங்கை மக்களின் சிந்தனைக்கும் சர்ச்சைக்குமுரிய இடமாக்கப்பட்டது.பத்திரிகைச் செய்திகள் இந்துக்களின் உள்ளங்களைப் புண்படுத்திக் கலக்குகின்றன. பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய நாட்டின் தலைவர்கள் உண்மைகளை மறைக்கிறார்கள். அரசியல் தலையீடுகள் சத்தியத்தை அசத்தியமாக்குகின்றன. நேர்மையும், உண்மையும் நிறைந்த தலைவர்கள் கூட ஊமை கண்ட கனவு போல உண்மையை உரைக்கத் தயங்குகிறார்கள். கோணேஸ்வரத்தில் கோகர்ணவிகாரை, இராஜசிங்கக் கோட்டை என்ற மாயாஜாலப் படைப்புக்களால் எழுந்த புரளிகள் தான் இவை."

**தெட்சண கயிலாயமாம் திருக்கோணேஸ்வர புகழ் அகிலமெங்கும் பரவ வைத்த பண்டிதர் இ. வடிவேல் ஐயாவுக்கு எமது கண்ணீர் காணிக்கையாகிறது.**

**கனகசபை தேவகடாட்சம்**
ஸ்தாபகத்தலைவர்,
பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியம்
திருக்கோணமலை.

# அமரர். ஆர். வடிவேல் ஐயா அவர்களுக்கு

## இரங்கற் பா

மீன்பாடும் தேனாடாம்
மட்டுமா நகரினிலே
தமிழுக்கு ஒரு திங்களாய் - உதித்து
குரைகடல் ஓதும் நித்திலம் கொழிக்கும்
கோணமாமலையில் வாழ்ந்து
கனம் தரும் பூங்குழலால்
அபிராமி கடைக்கண்ணில் - வளர்ந்து

மண்விட்டு தன்னுயிர் விட்டு
பெருமானார் அடியேகி - இன்று
எம் கண்விட்டு
அகன்றாலும், அகலுமோ உங்கள் நினைவு

சொல் தந்து பொருள் தந்து
கோணைநாதர் பண் தந்து
மேலும் நூல் பல தந்து
போன உங்கள் அறிவுக்கு
அடிபணியார் யாருண்டு

தமிழுக்கும் தொன் பொருளுக்கும் இன்னும்
சிவ நெறிக்கும் தொண்டாற்றி
தமிழே மூச்சாய்
சிவமே வாழ்வாய்
அணைந்து போனது
இந்த தியாக தீபம்

இழப்பென்றால் என்னென்று
எமக்கெல்லாம் விளக்கி இங்கு
அழைப்பொன்று வந்ததென்று
சென்று விட்டீர்கள்
அழக்கூட வலுவற்று
அனாதையாய் நிற்கின்றோம்

அறிவாகி,
அரும் பொருளாகி - எம்
அனைவருக்கும் உறவாகி
இன்னும் எம் உயிராகி ஊனாகி
வாழ்ந்திங்கு
நீங்கள் பயணப்பட
காதலாகி கசிந்து
கண்ணீர் மல்கி
கதறி நிற்கின்றோம்

எம் வேண்டுதல் எல்லாம்
உங்களுக்கு பிறவாமை வேண்டும்
எமக்கு பிறப்புண்டேல்
உங்களை என்றும் மறவாமை வேண்டும்
இன்னும் வேண்டும் ஐயா
சிவமோடு சிவமாகி எமையெல்லாம்
காத்திடுங்கள் ஐயா !

நீங்காத நினைவுகளுடன்
**மாதுமை சிவசுப்பிரமணியம்**

# “திருக்குறள் திலகம்”

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்”

இப்புண்ணிய பூமியின் புனிதத்தைக் காப்பாற்ற தோன்றிய ஓர் பெரும் மகனே! வடிவேல் ஐயா. இவரை சொற்ப ஆண்டுகளுக்கு முன்னர் கிழக்கில் உதித்த சூரியன் என்று கொண்டாட கிடைத்தமை நாம் செய்த பாக்கியமே. அவரது வைரவிழாவை அவர் சேவையில் இருந்த பொழுதே கொண்டாடியமை அவரது சிறப்பை தெளிவுபடுத்துகின்றது.

அப்பெருந்தகை என்னளவில் பாரிய தொண்டாற்றியுள்ளார். 1992ல் இப்புனித மண்ணில் திருக்குறளை மாணவ மணிகளிடையே பிஞ்சு உள்ளங்களில் பதிப்பதற்கு நான் எடுத்த முயற்சிகள் அத்தனைக்கும் ஊன்று கோலாக நின்று கைகொடுத்தவர். 1996ம் ஆண்டு திருக்குறள் ஞானி திருமூலநாதன் என்ற பாலகனினால் ‘திருக்குறள் திலகம்’ என்ற பட்டத்தை சூட்டி தங்கப்பதக்கம் அணிவிக்க கிடைத்தமை நான் செய்த பாக்கியமே.

இவ்வறிவு பூர்வமான ஞானிக்கும் எனக்குமிடையில் பல கட்டங்களில் வாக்குவாதமும், அறிவுச் சண்டையும் ஏற்பட்டதுண்டு. ஆனாலும் அவர் அப்படியான நிகழ்வை ரசித்து வரவேற்றமை பெருமைக்குரியது. அறிவிலும், பழமையிலும் மிக உயர்ந்த நிலையில் இருந்திருந்தாலும் எனது புதுமைக் கருத்துக்களை வரவேற்று உள்ளுர ரசித்து மகிழ்ந்தமை அவரது அறிவின் உயர்ந்த நிலையைக் காட்டியது.

வாதத்தில் ஒன்றை சமூகத்தின் மத்தியில் வைக்க விரும்புகிறேன்.

“இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல் ஆற்றின் நின்ற துணை”

இதில் “இயல்புடைய மூவர்” என்பது எனது வாதம் தன்னைப் பெற்றவர்கள், தன்னை நம்பி வந்த மனைவி தான் பெற்ற பிள்ளைகள். ஐயா அவர்களுடைய வாதமோ பிரம்மச்சாரிகள், வானப்பிரஸ்தர்கள், சந்யாசிகள் என்பது. “இயல்பு” என்பது ஒத்த குணம். நல்லொரு வீட்டில் வாழுகின்ற தலைவனானவன் தனது மரபு வழியாக ஒத்த குணமுடைய இம் மூவர்க்கும் துணையாக இருக்க வேண்டியது அத்தியவசியம் இல்லையா ?

இன்னுமொரு குறளை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

" நல்லாறு எனினும் கொளல்தீது மேல் உலகம்
இல் எனினும் ஈதலே நன்று "

இதில் கொடுப்பவர்களுக்கு மேல் உலகம் இல்லை என்பது என்வாதம். ஏனெனில் இருப்பதனால்தானே கொடுக்க முடிகின்றது. அப்படிப் பற்றை துறக்காமல் இருப்பவர்கள் எப்படி மேல் உலகம் செல்ல முடியும் ? இதை ஐயா ஏற்க மறுத்துவிடுவார். ஆனால் மிக அறிவு பூர்வமாக ரசிப்பார்.

இப்படியான பற்பல கட்டங்களில் இருவருக்குமிடையே அறிவுப் பூர்வமான சண்டை ஏற்பட்டதுண்டு. அது சிலவேளைகளில் யுத்தமாகவும் மாறியதுண்டு. எனது பேச்சை விவரித்து பக்கம் பக்கமாக தன் வார்த்தைகளை எழுதி அனுப்புவார். ஆனால் அவ்யுத்தம் " சூரியனை கண்ட பனிபோல் " மறைந்து விடும்.

அப்பெருமகன் இப்புனித மண்ணின் இளம் சிறார்களின் பிஞ்சு உள்ளங்களில் திருக்குறளை பதிய வைப்பதற்கு தன்னாலான முழுப் பங்களிப்பையும் வழங்கியமை என்றும் மறந்தற்கரியது நன்றி நவிலக் கூடியது.

இறந்தும் இறவா வரம் பெற்றவர் என்றே கருதுகின்றேன்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். "

என்ற அருங்குறளுக்கு ஒப்பானவரே எமது ஐயா ! பண்டிதர் வடிவேல் ஐயா !!

நன்றியுடன்,

**குறளமுதம் விநாயகசோதி**

## வானசிரோன்மணி ஆகிவிட்ட
## ஞானசிரோன்மணி பண்டிதர் ஆர். வடிவேல் அவர்கள்

கிழக்கில் பூத்த இம்மலர்
உலகெங்கும் மணம் வீசிய பெருமை
திருக்கோணேஸ்வரப் பெருமானுக்கே உரியது
ஞானசிரோன்மணி பண்டிதர் வடிவேல்
வானசிரோன்மணி ஆகிவிட்டார்
வாழ்நாள் முழுவதும் இறைபணிக்கே
அர்ப்பணமாக வேண்டும் என்பதனால் போலும்
பிரம்மச்சரியம் அவருக்குச் சித்தித்தது
ஆயிரத்தில் ஒருவர், லட்சத்தில் ஒருவருக்கே
இப்பாக்கியம் சித்திக்கும் - ஐயா !
வாய்திறந்தாலே சைவத்தமிழ் மணம் வீசும்
பேனா பிடித்தால் பெரும் கருணைப்
பேரருளைப் பேசும் பெம்மானே !
இவ்வளவு சீக்கிரத்தில் எங்களைவிட்டு
நீங்கள் போகவேண்டுமா என்ன ?
ஆய்வுகள் எத்தனை, அரும்பெரும் நூல்கள் எத்தனை
திருப்பதிகங்கள் எத்தனை, திருவூஞ்சல்கள் எத்தனை
அத்தனையும் உங்கள் புகழ் பாடுமே
விருதுகள் எத்தனை கௌரவங்கள் எத்தனை
பட்டங்கள் எத்தனை பாராட்டுக்கள் எத்தனை
அத்தனையும் உங்களால் பெருமை பெற்றதே
அண்ணன் பண்ணிசை வேந்தர்
ஆர். குழந்தைவேல் உங்களை அழைத்தாரோ
அல்லது அந்தத் திருக்கோணேஸ்வரப் பெருமானே
உங்களை அழைத்தாரோ ? - எவ்வாறாயினும்
வானுலகில் நின்று எங்களை
இனியும் வழி நடத்துங்கள் ஐயா !

**மட்டக்களப்பு.** **அன்புமணி**

### அமரத்துவமடைந்த ஞானசிரோன்மணி

# ஆர். வடிவேல் ஐயா அவர்கட்கு சமர்ப்பணம்

திருமலை முதலாய் தரணி யெங்கும்
திருவருள் பெருக்கும் ஞானத் தமிழின்
அரும்பெரும் களஞ்சிய விதைதனை விதைத்து
பெருமைகொள் ஞானசிரோன் மணிவடி வேலையா
இருகரம் கூப்பி கண்மழை சொரிந்து
இருதயம் கசங்கிப் புலம்பு கிறேன்காண்

தமிழன்னை திருவடியில் ஞானம் பெருக்கும்
        தண்டமிழ் நூல் பலபடைத்தீர், படித்த அறிஞர்
அமிர்தமென்றும் தேனென்றும் சுவைத்துச் சுவைத்து
        ஞானியர் போலாகி ஞான்றும் உங்கள்
அமிழ்நினுமி னியமுகமின் சொல்லில் மயங்கி
        ஆனந்தக் கண்ணீர் பெருகினா என்றோ
இம்மௌனம றைந்திமைய வரானீ ரையாவே !
        எம்ஞானத் தந்தையே நின்னைகாண் பதெப்போ !

ஞான சிரோன்மணி யாகி
        ஞால மெல்லாம் போற்றும்
ஞான குருவாய் இருந்து
        ஞானத் தமிழினை வளர்த்தீர்
வானவர் விருந்துக் கழைக்க
        வேகமாய் எம்மை விட்டு
வானுலகம் சென்றது அங்கும்
        ஞானமழை பொழியவோ ஐயா

சைவமும் தமிழும் தேய்பிறை ஆகா
தவமிருந்து முத்தமிழ் பாடி - சிவபூசை
செய்தபின் ஞானத் தமிழ்த்தொண் டாற்றி
எய்தினாய் வானுல கம்

வானொலி முதலாய் திருக்கேதீச
சராலயம்கோ ணேச்சரால, யமெலாம்
தேனொழுகும் ஞானத்த மிழிசைபாடும்
ஞானசிரோன் மணிவடி வேலையா
பானுவும் மதியும் மயங்க
பாலரும் முதியோரும் மயங்க
வானுலகில் ஆத்மசாந்தி நீவீர்
பெற்றிடவே நாம்பிரார்த் திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !!

**புலவர் வீசுவாம்பா விசாலாட்சி மாதாஜீ**
**குப்பிளான்**

## ஒன்றே குலம் ஒருவனே தேவன்

**வாழ்க்கையை மனிதப் பண்புடன் வாழ்ந்து அனுசரித்து சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழக்கூடியவனையே சான்றோன் என்கின்றோம். கற்றவன் என்பதை புத்தக அறிவையோ அல்லது எழுத்தறிவையோ மட்டும் வைத்து நாம் பகர்வதில்லை. ஆனால் இவற்றோடு மற்றவரை மதித்து மாண்புடன் வாழ்பவனையே கற்றோன் என்கிறோம். ஒவ்வொரு மனிதனும் சமூகத்துடன் இணைந்து, தனது கடமைகளைச் செய்து சமூகத்தை முன்னிறுத்தி, அதிலிருந்து நாட்டின் வளர்ச்சிக்கு இடம் கொடுத்தலே சமூக இயல் எனப்படுகிறது. " ஒன்றே குலம் ஒன்றே தேவன் " என்ற எண்ணக்கருவை வளர்க்க அறிவுடையோர் முயற்சிக்கின்றனர்.**

# கிழக்கிலங்கைக்கு பெருமை சேர்த்த பெரியார்

ஈழத்தின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்புப் பகுதியில் பிறந்து திருக்கோணமலையில் வசித்த சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்களை இற்றைக்கு முப்பத்திரண்டு வருடங்களுக்கு முன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வில் சொற்பொழிவு ஆற்றும்போது சிறுவனாக இருந்து கேட்டேன். பின் வானொலியில் சைவ நற்சிந்தனை, சொற்பொழிவுகளை கேட்டயான் 1995ம் ஆண்டு திருக்கோணமலையில் நடைபெற்ற ஆறுமுகநாவலர் குருபூசை வைபவத்தில் அவருடன் தொடர்பு ஆரம்பித்தது. அந்த மாதம் திருவாசகம் மார்கழி மாதத்தில் ஆலயங்களில் ஓதுவது வழக்கம். அதில் பங்குகொள்ளுமாறு கூறி அழைத்துச் சென்றார். இந்து இளைஞர் பேரவையினால் (திருக்கோணமலை மாவட்டம்) நடாத்தப்படும் பன்னிருதிருமுறை முற்றோதலிலும் வசதியான நாட்களில் பங்குகொள்ளுமாறு ஊக்கப்படுத்தியதுடன் சிவநெறி, ஞானச்சுடர், அருள்ஒளி பத்திரிகைகளில் யான் எழுதும் ஆன்மிகக் கட்டுரைகளை வாசித்த அவர் இந்திய ஆன்மீக நூல்கட்கு சமனாக இங்கும் நூல் வெளிவருவது சிறப்பானதாகும். உங்கள் கட்டுரைகள் நல்லதாக இருக்கின்றன தொடர்ந்து எழுதுங்கள் என ஊக்கப்படுத்திய பெரியார் ஆவார். இவர் சைவத்தில் மட்டுமல்ல தமிழ் இலக்கியத் துறையிலும் ஈடுபாடு மிக்கவர் என்பதை வடகிழக்கு மாகாண கல்வியமைச்சு நடாத்திய இலக்கிய விழாவில் அவர் உரையாற்றும்போது தூணக்கூடியதாக இருந்தது.

இடம்பெயர்வின் பின் குடும்பத்துடன் திருக்கோணமலையில் வாழும் நிலை எனக்கு ஏற்பட்டன. திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை நடாத்தும் நிகழ்வுகளில் பண்டிதர் ஐயாவும் கலந்து கொள்வார். 2001, 2002ம் ஆண்டு திருமுறை முற்றோதலில் இறைவன் திருவருளால் நடைபெற்ற சகல நாட்களிலும் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தன. 2002ம் ஆண்டு திருமுறை முற்றோதல் பூர்த்தி நாள் சித்திரை சதயத்தில் பண்டிதர் ஐயா கலந்துகொள்ள உடல்நிலை சீராக இருக்கவில்லை.

ஆரம்பித்தவர் அவரே பூர்த்தியும் அவர் தலைமையில் நடப்பது வழமை. மேற்படி ஆண்டில் ஒரு கிழமைக்கு முன்னரே பேரவையினிடம் சிவசங்கரநாதன் ஒழுங்காக நேரத்துக்கு வந்து படிப்பவர் அவரையே ! இம்முறை பூர்த்தி நாளில் ஆரம்பித்து பங்குகொண்டோரின் படிப்புடன் நிகழ்வை நிறைவுசெய்யுமாறு கூறியதாக பேரவை செயலாளர் சொன்னார். வயதில் சிறுவராக இருந்த என்னை அன்போடு ஊக்கப்படுத்தியவர் பண்டிதர் ஐயாவேயாகும்.

திருக்கோணமலை மாவட்டத்தின் வரலாறுகளை நூல் வடிவில் கொண்டு வந்தவர். இவர் மறைந்தாலும் இவர் நூல்கள் நினைவு கூறும். அவர் விட்ட பணிகளை, செய்த பணிகளை செய்வதன் மூலமே அவர் ஆத்மா சாந்தியுறும். அன்னாருடைய ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**க. சிவசங்கரநாதன்**
**சமாதான நீதிபதி**
தலைவர் சரசாலை நுணுவில் சிதம்பரவிநாயகர்
ஆலய பரிபாலனசபை.

**" கடவுள் வழிபாட்டில் காரண, காரியங்கள் இரண்டும் இரட்டைக் குழந்தைகள். வளர்ந்துவரும் விஞ்ஞான உலகம் ஏன் ? எப்படி ? என்ற அடிப்படைத் தூண்டுதலினால் வளர்ந்து முன்னேறி வருகின்றது. ஆத்மீக உலகம் பரிபூரண வஸ்துவில் நிறைவு பெற்றிருக்கின்ற போதிலும், அந்த நிறைவுக்குரிய காரணம் என்ன ? காரியம் எது ? என்பதை அறிந்திருக்க வேண்டியது இன்றியமை யாததாகும். "**

**- பண்டிதர் இ. வடிவேல் -**

# கிழக்கிலங்கை தந்த சைவத்தமிழ் பெரியார்

பண்டிதர் வடிவேலனார் அவர்கள்

இந்துக்களுக்கு சைவமும்,தமிழும் இரு கண்கள் போன்றன.அதே போல கனம் ஐயா அவர்களுக்கும் சைவமும்,தமிழும் தான் உயிராக இருந்தது. அதனால் தான் தேன் சொரியும் மட்டு நகரில் பிறந்த ஞானசிரோன்மணி அவர்கள் சைவம் தழைக்கும் திருக்கோணேஸ்வரம் வந்து சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்ற வேண்டும் என்பதே கோணநாயகரின் திருவருளாக இருந்திருக்கலாம்.

ஆசிரியராகப் பணியேற்று திருக்கோணமலைக்கு சேவை செய்ய வந்தார் என்பதைவிட கோணேஸ்வரப் பெருமானால் அழைக்கப்பட்டார் என்று கூறலாம். எந்தெந்த ஆலயங்களில் திருவிழாக்கள் விசேஷ பூசைகள் நடைபெறுகின்றனவோ அங்கங்கெல்லாம் ஐயா அவர்களைக் காணலாம். அன்னாரது தேவாரப் பாராயணம் ஒலிபெருக்கியில் ஒலித்துக்கொண்டே இருக்கும். தேவார திருவாசகங்கள் ஐயாவுக்கு தண்ணீர்பட்ட பாடம். எவருக்கும் தமிழிலோ, சைவத்திலோ சந்தேகம் ஏற்பட்டால் அவர்கள் ஐயாவிடம்தான் ஓடிச்செல்வார்கள் பதினைந்து அண்டுகளுக்கு முன் இலங்கை வானொலியில் வெள்ளிக்கிழமைதோறும் பண்டிதர் அவர்களின் தேவார, திருவாசகங்கள் அல்லது கதாப் பிரசங்கம் நடைபெறாத நாள் இல்லை என்று சொல்லலாம்.

திருக்கோணமலை கோணேஸ்வரா வித்தியாலயத்தின் ஆசிரியராகவும் அதிபராகவும் பணிபுரிந்த இவர் அங்கிருந்தே ஓய்வும் பெற்றார். ஓய்வுக்குப் பின்னும் இப்பெருந்தகை சும்மா இருக்கவில்லை. ஆலயம்தோறும் திருவாசகம் பாடுவதிலும் திருவெம்பாவையை அடுத்து திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சியிலும் பங்குகொண்டு இளைஞர்களுக்கு ஒருவழிகாட்டியாக இருந்தார். சிவயோக சமாஜம் திருக்ணேஸ்வர ஆலயம் போன்றவற்றின் பரிபாலன சபைகளில் இவர் முக்கிய பதவிகளை வகித்தவர்.

இவருக்கு 2002ம் ஆண்டு இந்துக்கலாசார அமைச்சினால் கலாபூஷண விருதும் வழங்கப்பட்டது. திருக்கோணேஸ்வரம் பற்றி பல அரிய பெரிய கருத்துக்களை வெளிக்கொணர்ந்தார். இவை இந்துக் கலாசார அமைச்சியினால் நூலுருப்பெற்றன.

இவற்றிக்கு நல்ல வரவேற்பும் கிடைத்தன. இவர் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர். இவர் சங்கீதத் துறையிலும் சோரம் போனவர் அல்ல. இளம்

வயதில் இருந்தே ஆன்மீகத்துறை இவரை ஆட்கொண்டதால் இவர் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்து இறைபதம் அடைந்தார்.

1996ஆம் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து திருக்கோணமலைக்கு நான் வந்தபோது ஏற்கனவே இவரது பெருமைகளை அறிந்தபடியால் இவரை சந்திக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் உந்தப்பெற்று இவரைப் பார்க்கச்சென்றேன். என்னைப்பற்றி நான் கூறியபோது இம்முகத்துடன் அவர் என்னை வரவேற்று பல நாள் என்னுடன் பழகியவர்போல் அளவளாவி பேசியதை எனக்கு என்றும் மறக்கவே முடியாது. அதன் பின் எனது மனைவியையும் மக்களையும் அழைத்துச்சென்று அவரது ஆசிபெறவைத்தேன்.

ஐயா அவர்கள் என்னிடம் வைத்த அன்பும் பரிவும் நம்பிக்கையும் அவரை எனக்கு சில நூல்களை அன்பளிப்பாக செய்யவைத்தது. அவற்றோடு அவர் தனது பாடசாலைப் பருவத்தில் எழுதிய குறிப்புக் கொப்பிகள் பலவற்றையும் எனக்குத் தந்தார். அவற்றை இன்னும் நான் பெரிய பொக்கிஷமாக பேணிப்பாதுகாத்து வருகின்றேன்.

எனது குழந்தைகள்மீது அவர் வைத்த அன்பும், பற்றும், பாசமும் காரணமாக அவர்கள் கல்விமீது கரிசனை செலுத்தி, பிள்ளைகள் திருக்கோணமலையில் தரமான கல்லூரியில் கல்வி கற்பதற்கு தானேமுயன்று தன்னால் இயன்ற உதவிகளை செய்ததையும் எம்மால் என்றும் மறக்கமுடியாது.

வடிவேலு ஐயா அவர்கள் எனது உள்ளத்தில் நிலையான ஒரு இடத்தைப் பிடித்துவிட்டார். மறைந்தாலும், இவருடைய புகழும் இவர் ஆற்றிய சேவைகளும் என்றும் மறையாது, நீடூழி நிலைக்கும்.

அவருடைய ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.
அவருடைய மறைவால் மீளாத் துயரில் மூழ்கி இருக்கும் அன்பன்.

சைவப்புலவர் பண்டிதர்
**வை. பாலகிருஷ்ணன். B. A.**
கமத்தொழிற் சேவை பெரும்பாக
உத்தியோகத்தர் - நிலாவெளி.

# இலக்கிய வித்தகர் பண்டிதர் வடிவேல் அவர்கள்.

வடிவேல் ஐயாவின் இலக்கியப் பணிகளையும் சமயப் பணிகளையும் இலங்கைத் தமிழகம் முழுவதும் தெரிந்திருக்கும். எங்கள் குடும்பத்துக்கும் வடிவேல் ஐயா குடும்பத்துக்கும் நெருங்கிய அறிமுகமும் தொடர்பும் நெடுங்காலமாக இருந்து வருகிறது.

இலக்கியம், சமயம் மாத்திரமல்ல, பொதுவிடயங்களிலும் சமூக சேவைகளிலும் அவரது ஆற்றல் மக்களுக்கு பெரிதும் பயன்பட்டது. "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்றபடி சாதி சமய வேறுபாடின்றி எல்லோரும் ஐயாவை அணுகி ஆலோசனை கேட்பார்கள்.

இராமகிருஷ்ணமிஷனுடன் முழுக்கமுழுக்கத் தொடர்புடையவர். கோணேஸ்வர மகா வித்தியாலயத்தில் பல காலம் அதிபராக இருந்தார். இத் தொடர்புகள் ஐயாவை சமய சமரச வாதியாக ஆக்கிவிட்டது எனலாம். எல்லா மதத் தலைவர்களையும் அவர்களது போதனைகளையும் பற்றி ஆராய்ந்துள்ளார். அவர்களது நற்சிந்தனைகளைத் தொகுத்தும் எழுதியுள்ளார்.

பழந்தமிழ் இலக்கியங்களை நன்கு கற்றதனால் பல இலக்கியக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இலக்கியப் பிரசங்கங்களை ஆற்றியுள்ளார். இலங்கை வானொலியில் கதாப்பிரசங்கங்கள் மூலம் தமிழையும் இலக்கியத்தையும் சமயத்தையும் வளர்த்துள்ளார்.

படித்தார். பட்டங்கள் பல பெற்றார். படிப்பையும் பட்டங்களையும் மக்கள் சேவைக்காக பயன்படுத்தினார். பல ஆராய்ச்சி நூல்களை எழுதினார்.

" தோன்றின் புகழொடு தோன்றுக அஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமைநன்று "

என்ற திருக்குறளுக்கேற்ப பேரோடும் புகழோடும் வாழ்ந்தார்.

ஐயாவின் பிரிவு மக்கட் சமூதாயத்திற்குப் பேரிழப்பாகும். ஐயாவின் நூல்களைப் படிப்போம். ஐயாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

**உ. மு. இஸ்மாயில்**
சட்டத்தரணி

உ

# திருக்கோணமலை
# ஸ்ரீ பத்திகாளி அம்பாள் திருப்பள்ளியெழுச்சி

ஆதவன் இந்திரத் திசையி லெழுந்தனன்
அலையெறி பரவையில் அவிரொளி படர்ந்தது
வேதியர் மாதவர் விண்ணவ ரோதிடும்
வேதமுழக்கொலி விண்ணி லெழுந்தது
ஆதி பராபரை ஆன மெய்ப் பொருளே
அன்னையே யுன்னருட் கண்மல ரரும்பி
தீதகலத் திருக் கோணையம் பதிவாழ்
தேவிபத்ர காளியே பள்ளி யெழுந்தருளெ.

விண்ணகத் தாரகைகள் விலகி மறைந்தன
விடிவெள்ளி யெழுந்து குடதிசை போயது
எண்ணருங் கதிரொளி எங்கணும் பரவி
இரவியு மெழுந்தனன் இருளு மகன்றது
மண்ணகத்தே மக்கள் மலர்கொடு வந்து
மாமறை ஓதியே மகிழ்ந்து நிற்கின்றார்
கண்ணகத்தே அருள் கனிந்திடுங் காளியே
கண்மலர்ந்தே பள்ளி எழுந்தருளாயே.

வந்தனை செய்திட அடியவர் வந்தனர்
வையக மெங்கணும் புள்ளின மார்த்தன
சுந்தர வனிதையர் தூமலர் தூவியே
சிந்தை மகிழ்ந்துனைச் சேவித்து நின்றனர்
இந்திரன் முதலாம் எண்டிசைத் தேவரும்
வந்துனை வாழ்த்தி வணங்கி நிற்கின்றார்
ஐந்தொழில் புரிந்திட அருள்புரி அன்னையே
ஆதிபத்ர காளியே பள்ளி யெழுந்தருளே.

அரியயன் முதலாம் ஐவரும் உந்தன்
அடியினை பரவியே அருள்பெற நின்றார்
திரிபுர சுந்தரி ஆகிய தேவியே
திருவருள் தந்தெமைக் காத்திடுத் தாயே
பரிபுரை நாயகி பலபல வன்னத்தி
பத்தருக் கருள்புரி பத்திர காளியே
திருவிழிகள் மலர்ந்து திசையெலாம் மகிழ
அருள்புரிவாய் பள்ளி எழுந்தருளாயே.

பராசக்தியாய் நின்று பாரெலாந் தாங்கி
உராசக்தியாய் நின்று ஊழிகள் தோறும்
தராசக்தியாய் உயிர்த் தத்துவமு மாகிப்
புராசக்தியாய் அருள் புரிந்திடும் அம்மையே
அராவொடு மதியமும் அவிர்சடை சூடிய
பிரானொரு பாதியாய் நின்ற பிராட்டியே
தராதலத் துயர்திருக் கோணையம் பதிவாழ்
பத்ரகாளித் தாயே பள்ளி யெழுந்தருளே.

கொம்பனை யாளே குவிமுலை மங்கையே
அம்புவி போற்றிடும் அம்பிகைத் தாயே
வம்பவிழ் கோதைகள் வளர்திரு முடியும்
செம்பவ ளம்போல் திகழ்திரு மேனியும்
அம்புய மனையநின் அடியினை யழகும்
அங்கையிற் தாங்கிய அணிமணிச் சூலமும்
பங்கைய வதனமுங் கண்டுனை வணங்க
பத்ரகாளித் தாயே பள்ளி யெழுந்தருளே.

ஆதார சக்தியென அகிலமெலாம் புரக்கும்
அபிராம வல்லியே அங்கயற் கண்ணியே
பாதார விந்தமதைப் பணிந்திடப் பார்மகளும்
வேதாவும் பாரதியும் மாதவனும் திருமகளும்
கேதார கௌரியோடு கிளர்ஞான போதகியாம்
மாதாவெனும் துர்க்கா மங்கலையும் வந்தார்
நீதானெம் துணையம்மா நிமலையே திருமலைவாழ்
பத்ரகாளித் தாயே பள்ளி யெழுந்தருளே.

பூதங்க ளைந்தையும் புணர்ப்பவள் நீயே
புவனங்க ளனைத்தையும் புரப்பவள் நீயே
வேதங்க ளோதிடும் விமலையும் நீயே
விளங்குமா மந்திரசொருபியும் நீயே
நாதங்களும் நாத கீதமும் நீயே
நாதாந்த மாகிய நாயகி நீயே
கோதிலாத திருக் கோணையம் பதியமர்
ஆதிபத்ர காளியே பள்ளி யெழுந்தருளே.

ஓங்காரத் துள்ளே உதிப்பவள் நீயே
ஓங்காரப் பொருளை உரைப்பவள் நீயே
இரீங்காரத் துள்ளே இனிப்பவள் நீயே
இரீங்கார பீஜமாய் இருப்பவள் நீயே
ஆங்காரி யாகியே ஐந்தொழில் புரிந்திட
அதிகார சக்தியை அருள்பவள் நீயே
பாங்காக உன்னடியைப் பணிந்திட வந்தோம்
பத்ரகாளித் தாயே பள்ளி யெழுந்தருளே.

பனிமதி பணியோடு பைந்தழை முடியிடை
அணிபெறச் சூடிய ஆதிபரா பரனைக்
கனியோடு சுவையெனக் கலந்திடும் தேவியே
கருணையோ டுயிர்களைக் காத்திடும் தாயே
அணிபெறு கோணையம் பதியில் அமர்ந்த
அன்னையே அருள்பொழி அமிர்த வல்லியே
பனிமலர் தூவியுன் பதமலர் தொழுவோம்
பத்ரகாளித் தாயே பள்ளி யெழுந்தருளே.

ஆக்கம்
**பண்டிதர் இ. வடிவேல்**

உ

# திருக்கோணமலை ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கோயில் ஸ்ரீ சண்முகப் பெருமான் திருவூஞ்சல்

### ஆக்கியோன் சைவப்புலவர், பண்டிதர் இ. வடிவேல் அவர்கள்

## காப்பு

சித்திதரும் புத்திதரும் சிக்கல் மலமறுத்து
முத்திதரும் முன்னை வினைமுடிக்கும் - நித்தநித்தம்
அத்திமுக வைந்துகரத் தண்ணல் அடியிணையில்
பக்தியுடனே பணியு மவர்க்கு.

அங்கமொடு வேதவொலி யதிருங் கோயில்
அணிமணி மண்டபத்திடையே அடியார் சூழ
சங்கொலியும் மங்கல நல் லிசையு மோங்கச்
சரவணபவா வென மந் திரமுமோதி
திங்களொடு கங்கை முடி சேருஞ் சென்னிச்
சிவனார்தம் விழியிலுதித் துலகமுய்ய
அங்கையினில் வேலேந்தி மயூரமேறிக்
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

நீபமலர் மாலை நிறை மார்பன் நெஞ்சில்
நீங்காத அழகுடைய தாள்கள் காட்டித்
தீபமென ஆறிரண்டு விழிகளோடு
திகழ்கின்ற பன்னிருகை தன்னில் வேலும்
தாபதர்கள் வலியழிக்கும் படைகள் தாங்கி
தன்னிகரில்லாத பெரு வடிவங்காட்டி
மாபதகச் சூரனுடல் கூறு செய்து
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

இந்திரனுஞ் சந்திரனு மிமையோர் தாமும்
ஏடவிழுங் கந்தமலர் சிந்தி வாழ்த்த
மந்திர நால் வேதமொடு கீதமோதி
மாதவரும் மாலொடுநான் முகனும் வாழ்த்த
அந்தர துந்துபி முழங்க அமரர் வாழ்த்த
அரம்பையர்கள் கூடி நடமாடி வாழ்த்தக்
கந்தருவர் கானமகிழ் கார்த்திகேயா
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

அண்டமொரு வாயிரத்தெட் டதனை யாண்ட
அதிதீர சூரனொடு சிங்கனென்னும்
மண்டலங்கள் நடுங்கவமர் செய்யும் மாய
மாவீரர் சேனைபல மடியச் செய்து
விண்டுவொடு இந்திரனும் விரிஞ்சன் தானும்
வேதியரும் மாதவரும் விண்ணோரெல்லாம்
கொண்ட பெருஞ் சிறைமீட்ட குமரவேளே
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

கூர்வேலெறிந்து சூர் உரமுங் கீண்டிக்
கொற்றமொடு வீரவடி வேலுந்தாங்கிப்
போர்வேகம் அழியவருஞ் சூரன்தன்னைப்
பொன்மயிலுஞ் சேவலுமா யேற்று நல்ல
கார்மேகக் குழற்றெய்வ யானையோடுங்
கனிமொழியாள் வள்ளி கடிமணமுங் காட்டிச்
சீர்மேவு மடியவருக் கருளும் செவ்வேள்
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

வேதநெறி தழைத்தோங்க வித்தையோங்க
வேள்வியொடு விழவு நல் வினையுமோங்க
மாதவத்தோர் மனமோங்க மறையோரோங்க
மைந்தர்களும் மங்கையரும் மகிழ்ந்து பொங்கப்
பூதலத்திற் பொன்னோங்கப் பொருளுமோங்கப்
புனிதமுறு சைவநெறி பொலிந்து பொங்க
ஏதமிலா அருளோங்க இன்பமோங்கக்
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

கந்த மலியுங் கடப்ப மாலையாடக்
கன்னியர்க ளிருமருங்குங் கவின்பெற்றாடச்
சுந்தரஞ்சேர் வைரமணிப் பூணுமாடச்
சொல்லரிய பொற்கலைகள் துளங்கியாடச்
சந்தனமுங் குங்குமமும் தரித்த மேனி
தங்கமணி யணிகளொடு தழைந்தேயாடச்
செந்தமிழும் சிவநெறியும் சீர்பெற்றாடக்
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

பரங்குன்றி லுறைபவரே யாடீரூஞ்சல்
பார்வதியாள் பாலகரே யாடீரூஞ்சல்
தரங்கமெறி செந்தூரும் தணிகைவெற்பும்
தண்மதிதோய் ஏரகமும் பழனிக் குன்றும்
அரங்கமென ஆடிவரும் அழகுவேலா
அச்சுதனின் மருகோனே ஆடீரூஞ்சல்
கரங்கூப்பித் தொழுமடியார்க் கருளுங் கந்தா
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

ஆதி பராபரப் பொருளே ஆடீரூஞ்சல்
அஞ்சலென அருள்தருவோய் ஆடீரூஞ்சல்
சோதி வடிவானவரே ஆடீரூஞ்சல்
சுருதி முடிவானவரே ஆடீரூஞ்சல்
வேதியர்க்கோர் வேதியனே ஆடீரூஞ்சல்
வினைதீர்க்கும் வித்தகனே ஆடீரூஞ்சல்
கோதிலாக் குணக்குன்றே ஆடீரூஞ்சல்
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

ஆறெழுத்து மந்திரமும் அறமும் வாழி
அஞ்சலென அருள்புரியும் வேலும் வாழி
கூறு புகழ்க் குக்குடமும் மயிலும் வாழி
குஞ்சரநற் கோதையொடு வள்ளி வாழி
மாறுபடா ஆறுமுக வள்ளல் வாழி
மழைவாழி மனிதகுல மனைத்தும் வாழி
பேறுதரும் அந்தணரும் ஆவும் வாழி
கோணையமர் சண்முகரே வாழி வாழி.

# வில்லூன்றிக் கந்தன்
# தேர்ச் சிந்து

01. வில்லூன்றிக் கந்தனவன் சிங்காரத் தேரிலே
விதி வலம் வருகிறார் - தேரிலே
வீதி வலம் வருகிறார்.
வேதியர் மாதவர் விஞ்சையர் நாரதர்
கீதமிசைத்திடும் நாதம் ஒலித்திட (வில்)

02. ஆனை முகத்தவரும் ஐந்து முகத்தவரும்
அன்னையும் காண வருகிறார் - ஆறு முகன்
அன்னையும் காண வருகிறார்
இந்திரன் சந்திரன் சூரியன் நாரனன்
மந்திர நாயகன் வந்து வணங்கிட (வில்)

03. வள்ளிதெய் வானையுடன் வானோர் துதித்திட
புள்ளி மயில் அமர்ந்தவன் - சண்முகன்
புள்ளி மயில் அமர்ந்தவன்
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல்ல வீர வடிவேலன் (வில்)

04. கங்கை அணிந்த சிவன் கண்ணில் பிறந்தவன்
கார்த்திகைப் பாலமுருகன் - வேலவன்
கார்த்திகைப் பாலமுருகன்
மூவரும் தேவரும் யாவரும் போற்றிடும்
தேவர் சிறைமீட்ட தெய்வக் குருபரன் (வில்)

05. திருக்கோண மாமலையில் திருவேர கத்திருந்து
விருப்போடு வந்தமர்ந்தவன் - வில்லூன்றியில்
விருப்போடு வந்தமர்ந்தவன்
சேவற் கொடியுடன் சித்திரத் தேரிலே
பாலவர் போற்றிடப் பக்தர்கள் சூழ்ந்திட (வில்)

06. தொல்லை இரும்பிறவிச் சூழும் தளையறுத்து
நல்லோரைக் காக்க வருகிறான் - அறுமுகன்
நல்லோரைக் காக்க வருகிறான்
மண்ணவர் துன்பங்கள் மாய்ந்து மடிந்திட
விண்ணவர் போற்றிடும் புண்ணிய மூர்த்தியாய் (வில்)

ஆக்கம்
ஞானசிரோன்மணி
சைவப்புலவர் - பண்டிதர்
**இ. வடிவேல் அவர்கள்**



# “சமூகம் ஒரு நல்ல தொண்டரை இழந்து விட்டது”

ஞானசிரோன்மணி பண்டிதர் வடிவேல் அவர்கள் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், திருக்கோணமலையை வதிவிடமாகவும் கொண்டு அளப்பெரும் சமூகத் தொண்டுகள் புரிந்த பெருமகனாவார். அன்னாரது மறைவு குறித்து கவலையுறுவோர் மிகப் பலர். “பண்டிதர் அவர்கள் கல்வி சான்ற குணசீலர்“

“அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பில்லாதவர் ”.

எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய பண்புச் செல்வம் நிறைந்த சீலராய் செவ்விய வாழ்வு வாழ்ந்தார். அவ்வாசிரியப் பெருந்தகை தான் கற்ற கல்வியினாலும், சமூக மதிப்பினாலும், இறுமாப்புக் கொள்ளாமல் முற்றிப் பழுத்த நெற்கதிர் போல் தலை சாய்த்து பணிவுடையின் சின்னமாக வாழ்ந்தவர் என்று கூறினால் மிகையாகாது.

மட்டக்களப்பு களுதாவளை ஸ்ரீராமகிருஷ்ண மிசன் பாடசாலை, திருக்கோணமலை மிசன் பாடசாலை, திருக்கோணமலை இந்துக் கல்லூரி, ஆகியவற்றில் பண்டிதர் அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றி சைவமும், தமிழும் தழைத்தோங்கச் செய்தமையை யாவரும் அறிவர். சுவாமி நடராஜானந்தர் மீது பெரும் மதிப்புக்கொண்டிருந்தவர். சுவாமிகளின் அனுக்கத் தொண்டராகவும், ஸ்ரீராமகிருஷ்ண மிசனின் கல்விப் பணிகளிலும், சமய கலாசாரப் பணிகளிலும், தன்னை ஈடுபடுத்திச் செயற்பட்டவர். அன்று கோணேஸ்வர வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு மனம் கோணாது உழைத்தவர். 2 வது உலக மகாயுத்ததின் பின்னர் திருக்கோணமலை இந்துக் கல்லூரியினை புனருத்தாரணம் செய்யும் பணியில் சுவாமி நடராஜானந்தஜீ அவர்களுடன் தோளோடு தோள் நின்று உழைத்த பெரும்தகை. அக்கால கட்டத்தில் ஏற்பட்ட பல இன்னல்களிலும், சுவாமிக்கு உளமார்ந்த உதவிகளை அளித்து உறுதுணையாக நின்று உழைத்தவர்.

பண்டிதர் அவர்கள் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், பண்ணிசை வேந்தர், அவர் நூற்றுக்கணக்கான ஆலயங்களைத் தரிசித்து நிறைய சமயச் சொற்பொழிவுகள் ஆற்றி ஆன்மீகப்பணி புரிந்தவர். திருக்கோணேஸ்வரம்பற்றி பல நூல்களை எழுதியவர். அன்னாரது சேவையைப் பாராட்டி நன்றி மறவாத் திருக்கோணமலை மக்கள் " கிழக்கில் உதித்த ஞான மலர் " என்ற பெயரில் ஒரு நன்றி மலரை வெளியிட்டு மனநிறைவு கண்டமை ஈண்டு இங்கு குறிப்பிடத்தக்கது.

"ஜீவ சேவையே சிவ சேவை" என்ற சுவாமி விவேகானந்தரின் கோட்பாட்டில் ஊன்றிக் கால் பதித்து நின்று சமூகசேவை ஆற்றிப் போந்த சைவப் புலவர், பண்டிதர் வடிவேல் அவர்களின் ஆத்மா பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் திருப்பாதக் கமலங்களின்கீழ் நித்தியானந்தத்தை பெற்றுஉய்ய பிரார்த்தித்து இதனைப் பூர்த்தி செய்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் பணியில்**
**சுவாமி ஜீவனானந்தா**
**இராமகிருஷ்ண மிசன்**
**மட்டக்களப்பு**

# ஆசானே! அறிவுச்சுடரே
# என்றென்றும் ஒளிர்கவே!

மண்ணில் நல்லவண்ணம் மணவர்கள் வாழ்வதற்கு
மாண்புமிகு ஆசனாய் அதிபராய்ச் சேவைசெய்தீர்
வண்ணமுற சைவந்தமிழ் வளர்க்கவகை வகையாய்
வாஞ்சையுடன் வழங்கியவை வையமும் மறந்திடுமோ?
எண்ணியீங்கு ஏடுகளும் கல்வெட்டுகளும் ஆய்ந்தறிந்து
ஏற்றம்பெறு இன்தமிழர் பண்டுபுகழ் பரப்பினீரே
பண்டிதர் சைவப்புலவர் ஞானசிரோன்மணி கலாபூஷணமென
பாரளித்த பட்டங்களாற் பாருக்கே பணிபுரிந்தீர்
தண்ணளிசேர் திருமலையின் திருக்கோவிற் சிறப்பெல்லாம்
தானுரைத்தீர் "திருக்கோணமலைத் திருத்தலங்கள் எனுந்நூலில்
பண்ணிசைப் பதிகங்களை பக்தியுடன் கோவில்தோறும்
பாடினீர்; பண்ணிசை ஆய்வுநூலும் எமக்களித்தீர்
சண்முகா சரணம்" தினசரிபாரா யணஞ்செய்ய
சான்றோய் நீரளித்த பஞ்சபுராணத் திரட்டாம்
எண்ணியெண்ணி இந்நகர்த் திருக்கோவில்கள் பலவற்றுக்கும்
ஏராளமாக திருவூஞ்சல் தேர்ச்சிந்து இயற்றினீரே
கண்ணீர்மல்க சதுர்வேத நாயகற்கும் நாயகிக்கும்
காதலுடன் திருவூஞ்சல் எச்சரிக்கை இறுதிமுயற்சியாய்
எண்ணமினிக்க, இயலாமை பாராது எழுதியபூரிப்பில்
ஏதுக்கினி இருப்பதென எண்ணியோ இகம்நீத்து
அண்ணலவன் அடியிணையை அகமகிழ்வுடன் அணைந்தீர்
ஆசானே! அறிவுச்சுடரே! என்றென்றும் ஒளிர்கவே!

*சுபம்*

**செல்வி மணிமேகலாதேவி கார்த்திகேசு**
ஒய்வுபெற்ற ஆசிரியை
திருக்கோணமலை.

# பண்டிதரின் நுண்மான் நுழைபுலம்

பண்டிதர் வடிவேலு ஐயாவின் இழப்பு அவரது குடும்பத்திற்கு மாத்திரமல்ல தமிழ் கூறும் நல்லுலகத்திற்கே ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும்.

பண்டிதர் மட்டக்களப்பில் பிறந்திருந்தாலும் அவர் வாழ்ந்து, பணிசெய்து, மேன்மைபெற்றது திருக்கோணமலை மண்ணில்தான். சமயம், மொழி, இசை, இலக்கியம், வரலாறு போன்ற துறைகளில் பண்டிதர் காட்டிய அதீத ஈடுபாடு காரணமாக, அவரது மேன்மையான பணி காரணமாக திருக்கோணமலை பெருமை கொள்கின்றது என்றால் அது மிகையாகாது.

திருக்கோணமலை இ.கி.ச. இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும், இ.கி.ச. கோணேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபராகவும் பண்டிதர் அவர்கள் கடமையாற்றிய காலத்தில் உயர்வான கல்விப் பணியை அவர் வழங்கினார். அரச சேவை ஓய்வுக்குப் பின்னருங் கூட எமக்கெல்லாம் ஒரு மூத்த ஆசானாக விளங்கி சமயம், மொழி, வரலாறு பற்றிய ஒரு நேரான தடத்தில் நாங்கள் செல்வதற்கு வழிகாட்டியாக இருந்தவர் பண்டிதர் அவர்கள்.

பண்டிதருக்கு பல்வேறு பரிமாணங்கள் இருந்த போதிலும் வரலாற்று ஆய்வு தொடர்பாக அவருக்கிருந்த ஆழ்ந்த நோக்குத்தான் அவரை ஒரு உயர்ந்த புலமையாளராக தமிழ் கூறும் நல்லுலகிற்கு காட்டிற்று என்பது எனது அபிப்பிராயமாகும்.

திருக்கோணமலை மாவட்டத்தில் கோவில்கள் தொடர்பாக மறைந்து கிடந்த பல்வேறு அரிய தகவல்களை "திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள்" என்ற தனது நூலினூடாக வெளிக்கொணர்ந்தவர் பண்டிதர் அவர்கள். நுண்மான் நுழைபுலம் மிக்கவரான எமது பண்டிதர் கோணேஸ்வரம் பற்றிய தொன்மையான விடயங்களை தனது ஆய்வுகளூடாக வன்மையாகத் தொட்டுக் காட்டியவர் ஆவார்.

எம்மவரில் சிலராவது பண்டிதர் ஐயாவின் ஆய்வுத் தடத்தை பற்றிக் கொள்ள வேண்டும். அதுதான் பண்டிதர் ஐயாவிற்கு நாம் செய்யும் காணிக்கையாகவும், எமது சமயம், மொழி, இனம் என்பவற்றின் இருப்புக்குரிய பெரும் பணியாகவும் அமையும்.

**சி.தண்டாயுதபாணி**
வலயக் கல்விப் பணிப்பாளர்
வவுனியா வடக்கு.

# வடிவேலனார் நாமம் வாழ்க!

மின்பாடும் தேனாட்டில் அவதரித்து
பண்ணோடு இசைபாட வரமெடுத்து
திருக்கோணமலை தனிலே குடிலமைத்து
சைவத் தமிழ் வளர்த்த வடிவேலனே!

ஆலயந்தோறும் உந்தன் ஊஞ்சல் பாட்டு
ஆடிவரும் தெய்வங்கள் அதனைக் கேட்டு
நாடிடும் பத்தர்கட்கோ எல்லை இல்லை
பெற்றிடும் வரங்களோ கோடாகோடி

நகர்வலம் வந்திடும் கோணநாதர்
வீதி உலா வந்திடும் ஆலடி விநாயகர்
அள்ளிவரம் தந்தருளும் அன்னை பத்திரகாளி
வள்ளி மணாளன் முத்துக்குமாரசுவாமி
உந்தன் பண்ணிசையில் மயங்கிநிற்பர் திருமலைதன்னில்.

அன்னை பத்திரகாளி அவள் அனைவருக்கும் தேவி
அண்டிவரும் அடியார்க்கு வரம் ஈந்தருளும் காளி
ஆண்டுதோறும் தேரில் அவள் பவனிவரும் வேளை
வேண்டும் வரம் அருளும் அன்னை பத்திரகாளி
அருட்கடாட்சம் பெற்ற வடிவேலனே! நாமம் வாழ்க!!

தங்கள் மாணவன்
**பாலா இராமலிங்கம்**
இலண்டன்

*கொழும்பு தமிழ்ச் சங்கம்*

## வர வை (நினை விரங்கல்)

01. திருமலைக்கோர் வடிவேலாய், செந்தமிழ்க்கோர் பண்டிதராய்ச்,
சிந்தை அள்ளி
வருமிசைக்கோர் 'வாரிய' ராய், வளர் இந்துப் பேரவையின்
வளர்ச்சிக்கான
தரு சைவ 'நாவல' ராய், தளராத தொண்டினுக்கோர்
சான்றாய் வாழ்ந்து
பெருநன்றிக் குரியோராய்ப் பிறப்பெடுத்து வந்தாரின்
பின் செல்வோமே!

02. எமது மலை மாவட்ட இந்திளைஞர் பேரவையின்
'இதயம்' போன்றார்!
தமது நலம் பாராமல் சைவநலம் பார்ப்பதிலே
தம்நாள் தந்தார்!
அமர்ந்தோதும் திருமுறையும், அரிய திருவாசகமும்
அவர் பேர் சொல்லும்!
நமது பணி அவர் தொண்டை நம்நெஞ்சிலே கொண்டு
நடப்பதொன்றே!

03. பண்ணிசையில் தேவாரம் பாடுங்கால் வாய்பிளந்து
பார்த்து நின்றோம்!
எண்திசையும் எதிரொலிக்க ஏழிசையும் பாடியதால்
இறைவன் பார்த்தே
விண்ணுலகிற் கழைத்தானோ? வீழ்ந்துவிட எண்ணினனோ
வீரப் பண்ணில்?
மண்ணிதிலே தேவார மகிழிசையைச் செவியில் இனி
மடுப்ப தெங்கே?

04. பேரவைக்கு மட்டுமல்ல, பிறசைவ அமைப்புக்கள்
பெரியோர் - மற்றும்
ஆரெவர்கள் வந்தாலும் அருஞ்சைவ - இந்துநெறி
அறியும் வண்ணம்
சீருரைகள் ஆற்றிடுவார், சிறந்த பல பரிசின் நூல்
செய்'சித்தாந்' தர்!
வாரிசு நாம், இறைகேட்போம் வடிவேலை மீண்டுமிவண்
'வரவை' என்றே!

**" தாமரைத்தீவான் "**

# என்றும் எங்கள் வழிகாட்டி
# ஆசான் பண்டிதர் இ. வடிவேல்

சைவத்தையும், தமிழையும் நேசிக்கின்றவர்கள் அறத்தை விரும்புகின்றவர்கள், அன்புடன் பழக ஆசைப்படுபவர்கள், அறிந்ததை பகிர்ந்துகொள்ள ஆதங்கப்படுபவர்கள், களங்கமற்ற கல்விச் சேவையை கைக்கொள்ள விரும்புபவர்கள், காலம் கடந்தவற்றைக் கண்ணாடிமுன் காட்டுவது போல் ஆய்வுகளை மேற்கொள்வதில் ஆசை கொண்டவர்கள். அந்தவகையில் அனைத்து உள்ளங்களிலும் நீங்கா இடம் பிடித்து நித்தம் வழிகாட்டிக் கொண்டிருப்பவர்தான் எங்கள் மூத்த ஆசான் பண்டிதர் வடிவேல் ஐயா அவர்கள்.

மட்டக்களப்பினை பிறப்பிடமாக கொண்டிருந்த எம் ஆசான் தம் இளம் பாரயத்திலேயே திருக்கோணமலையை தன் வதிவிடமாக்கிக் கொண்டு சைவத்திற்கும் தமிழுக்கும் கல்விக்குமான பணியினை ஆரம்பித்தார். தி/இ.கி.ச. இந்துக்கல்லூரியில் அவர் ஆசிரிய பணியாற்றிய போதும் தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலத்தில் அதிபராக பணியாற்றிய போதும் அவரால் வழிநடத்தப்பட்டவர்களே இன்று பல்வேறு நிறுவனங்களில் நிர்வாகிகளாகவும், உயர்தொழில் புரிபவர்களாகவும் மிளிர்ந்து கொண்டிருக்கின்றனர்.

முன்மாதிரியான ஆசிரியராகவும், அதிபராகவும் சேவையை ஆற்றும் காலத்திலேயே சைவத்திற்கும் தமிழுக்கும் அவர் அரும்பணியாற்றத் தொடங்கினார். தனக்கே உரித்தான பாணியில் கதாப்பிரசங்கத்தின் மூலம் புராண இதிகாசங்களை சுவைபட மக்கள் மனதில் பதிப்பதில் நிகரற்றவராக விளங்கினார். ஆலயங்களிலும் பல்வேறு நிகழ்வுகளிலும், கிரியைகளின் போதும் உரிய முறையில் உரிய பாடல்களையும், திருமுறைகளையும் பண்ணுடன் பாடி எதிர்கால சந்ததிக்கு வழிகாட்டினார்.

கல்வித்துறையிலிருந்து உத்தியோக ரீதியாக 1976 ஆண்டு ஓய்வுபெற்ற போதும் பல்வேறு கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் தனது அறிவாலும் அனுபவத்தாலும் வழிகாட்டலை இறுதிவரை தொடர்ந்து மேற்கொண்டார். எமது ஆசான் திருக்கோணமலையில் சைவத்தின் தொன்மையையும் தமிழர் இருப்பையும் வெளிக்கொணரும் ஆய்வுப் பணியில் ஓய்வுகாலத்தை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். இதன்பேறாக

திருக்கோணமலை திருத்தலங்கள் தொடர்பான ஆய்வுகள் நூல்வடிவில் எம்மால் பெற்றுக்கொள்ள முடிந்தது. இவரது ஆய்வு முறையும் சமர்ப்பிக்கும் விதமும் எதிர்கால ஆய்வாளர்களுக்கு ஆதாரமாகவும் வழிகாட்டலாகவும் அமைந்துள்ளது.

சிவயோக சமாஜம், திருக்கோணேஸ்வர பரிபாலன சபை ஆகிய அமைப்புக்களில் சிறந்த பங்களிப்பை வழங்கி, சமயப் பணியாற்றுவோருக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்.

நித்திய பிரமச்சாரியாகவே இருந்து தனது வாழ்வை ஆலயங்களுடன் இணைத்து சைவத்திற்கும், தமிழுக்கும், சமூகத்திற்கும் பணியாற்றிய எம் ஆசான் தனது சொத்தாக பேணிவைத்திருந்த புத்தகங்களையும் எதிர்கால சந்ததியினர் பயன்பெறும் நோக்கில் அதன் பெரும்பகுதியை தி/ இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துகல்லூரியின் நூலகத்திற்கும் மீதியை சமூக நிறுவனங்களிற்கும் தனது அன்புக்குரியவர்களுக்கும் பகிர்ந்தளித்தார். தனக்கென ஒருசொத்தையும் தேடிக்கொள்ளாது மக்கள் மனங்களில் குடிகொண்டுவிட்டார். இவ்வாறு எம் சமூகத்தில் எல்லா வழிகளிலும் வழிகாட்டிக் கொண்டிருந்த ஒரு அனுபவ பொக்கிஷத்தை நாம் இழந்திருக்கிறோம். 'நியதியை மாற்ற முடியாது' என தேறிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இத்தருணத்தில் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும், அவரது அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பண்டிதர் வடிவேல் ஐயா அவர்கள் இயற்கை எய்தி விட்டாலும் அவரது குரலும் கருத்தும் வானொலி தொலைக்காட்சி புத்தகங்கள் என்ற வடிவில் உலகை வலம் வந்து கொண்டேயிருக்கும். எம்மையேல்லாம் வழிநாடாத்திக் கொண்டேயிருக்கும் என்பது உண்மை.

அவரது ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் பிராத்திப்பதுடன் அவர் விட்ட பணிகளைத் தொடர எம்மால் இயன்றவரை முயல்வோமாக.

**நன்றி.**

**மா. இராசரெத்தினம் (அதிபர்)**
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி,
திருக்கோணமலை

# திருக்கோணேசர் திருவூஞ்சற் பதிகம்

ஆக்கியோன். சைவப்புலவர்
**பண்டிதர் இ. வடிவேல் அவர்கள்**

### காப்பு

வேழ முகத்தவனே வினாயகனே நின்னடியில்
ஏழையேன் வீழ்ந்து இறைஞ்சுகின்றேன்- ஆளுடைய
பிள்ளைக் கவியமுதைப் பெற்று திருக்கோணேச
வள்ளல்தனக் கூஞ்சல் வழக்கு.

### நூல்

சீர்தேவு மாமறைகள் கால்களாகச்
செய்ய திரு ஆகமங்கள் விட்டமாக
பார்மேவு பைந்தமிழ்சேர் பண்களோடு
பகரரிய திருமுறைகள் வடமதாக
ஏர்மேவும் ஓங்காரப் பீடமீதில்
ஏழிசையின் மலர்தூவி இனிது போற்றக்
கார்மேவு தென்கைலைக் கோடு தன்னில்
மாதுமைசேர் கோணேசா ஆடீரூஞ்சல்.

தண்மதியின் ஒளிதவழும் கோணக் குன்றில்
தவயோக முனிவர்களின் தேசுதங்க
விண்ணவர்கள் சூழ்ந்திருந்து வேதமோத
விஞ்சையர்கள் வேதமொடு கீதம் பாட
இன்னிசை நாரதர் வீணைதன்னிற் கூட்ட
எழிலுடனே நந்தி மத்தளமுங்கொட்ட
மண்ணிலுயர் கோணைநகர் தன்னில் மேவும்
மாதுமைசேர் கோணேசா ஆடீரூஞ்சல்.

திருமகளும் கலைமகளும் வடந்தொட்டாட்ட
செய்ய புவிமகள் கவரி வீசி நிற்க
கருமேக வண்ணனொடு வருணன் வாயு
கணநாதர் இந்திரன் கைகூப்பி நிற்க
அருள்மேவும் அரமகளிர் பரதமாட
ஆதிசேடனு மருகே அமர்ந்து நோக்க
திருமேவும் தெக்காரும் மாகோணத்தில்
திகழ் கோணை நாதரே ஆடீரூஞ்சல்.

அருக்கனொளி ஆழ்கடலின் மீதெழுந்து
அருட்கோணை நாதரடி தழுவி யோங்கச்
செருக்குடைய இராவணன் தென்கைலை தன்னைச்
சினங்கொண்டு வாளோச்சி எடுக்கும் போது
வெருக்கொடுமை தனைக்கரத்தா லணைத்துக்காலின்
விரலதனால் அடர்த்தவனுக் கருள்புரிந்த
மறக்கருணைத் திருக்கோணைநாதரே நீர்
மாதுமையோ டினிதிருந்து ஆடீரூஞ்சல்.

சினகரமும் கோபுரமும் தேரூர் வீதி
செய்யதிரு மண்டபமும் மதிலும்கட்டி
கணபதிக்கும் கந்தனுக்கும் கோவில் கொண்டு
கருவாய வல்வினைகள் அறுக்கவல்ல
பவநாசம் செய்யுமுயர் பாவநாசத்
தீர்த்தமுடன் திருப்பணிகள் பலவும் செய்து
சிவநேயக் குளக்கோட்டன் கோயில் மேவும்
செய்யதிருக் கோணேசா ஆடீரூஞ்சல்.

அகத்தியரும் அருணகிரிநாதர் ஞான
சம்பந்தர் துதித்த அருட்கோணை நாதா
இகத்திலுனை இதயத்தில் இருந்து வோர்க்கு
இகரபோகம் அருளும் ஈசா அன்பர்
பவத்தொடக்கை அறமாற்றும் பாவ நாசா
பரஞ்சுடரே பதமுத்தி தன்னையீந்து
சிவத்துவத்தில் சேர்த்தெம்மை ஆளுங் கோணைத்
தேவாதி தேவரே நீர் ஆடீரூஞ்சல்.

ஆழிபுடைசூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
அரியதிருக் கோணமலை நாதர் தன்னைக்
காழிவளர் பிள்ளைமனம் கசிந்து பாடக்
கஜபாகு மன்னனங் கரித்து வந்து
ஊழ்வினையால் இருகண்ணும் இழந்து மீண்டும்
உயர்திரு வெண்ணீறணிந்து உய்திபெற்றான்
சோழனோடு பாண்டிய மல்லவரும் போற்றும்
கோணைநகர்க் கரசேநீர் ஆடீரூஞ்சல்.

சைவநெறி தழைத்தோங்கத் தமிழுமோங்கத்
தவமுனிவருள மோங்கத் தர்ம மோங்கத்
தெய்வ மணந் திகழ்ந்தோங்கத் திருவுமோங்கத்
தேவார இசையோங்க வேத மோங்க
உய்யுநெறி கொண்டு குளக் கோட்டு மன்னன்
உளமோங்க எடுத்ததிருக் கோயில் தன்னை
பொய்மாயப் போத்துக்கீ சர்செய் தீதைப்
புன்னகையால் ஏற்றவரே ஆடீரூஞ்சல்.

மன்றில் வளர் மாமணியே ஆடீரூஞ்சல்
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகிக்
குன்றில் வளர் குருமணியே ஆடீரூஞ்சல்
குனனையருள் குலமணியே ஆடீரூஞ்சல
துன்றுபிடி யன்னநடை மாதுமையாம்
அம்சகமனாம்பிகை யோடாடீரூஞ்சல்
இன்றெமக்கும் இருள்கடிந்து அருள்செய்கின்ற
இறையவரே கோணேசா ஆடீரூஞ்சல்.

திங்களொடு கங்கை வளர்சடையு மாடத்
திகழ்ந்தோங்கு சர்ப்போப வீதமாடி
நங்கை மாதுமையாட நயனமாட
நவமணிக் குண்டலமாடக் குழையுமாட
அங்கமெலாங் குழைந்தபய வரமாட
அடியிணையிற் சிலம்பாடக் கழலுமாட
எங்கள்மனம் களித்தாட இரங்கும் கோணை
இறையவரே கோணேசா ஆடீரூஞ்சல்.

## வாழி

அஞ்செழுத்து மந்திரமும் நீறும் வாழி
அரனடியார் அந்தணர்கள் ஆவும் வாழி
பிஞ்செழுத்தாம் சிவப்பழமாம் பொருளே வாழி
பிரபஞ்ச மனைத்துமருள் பெற்று வாழி
மஞ்சுதவழ் மாமலையில் மழையும் வாழி
மன்னரொடு மக்கள்நலம் பெற்று வாழி
எஞ்சலிலாத் தமிழ்வாழி சைவம்வாழி
இறைவனடியா ரெல்லாம் வாழி வாழி.

## எச்சரிக்கை

திருவார் கோணைப் பதிமேனிய தேவா எச்சரிக்கை
தேவிமாதுமையாளோடு வருவாய் எச்சரிக்கை
மருவார் கொன்றை மதிசூடிய மகிபா எச்சரிக்கை
அரனே திருக்கோணேஸ்வர நாதா எச்சரிக்கை

மானோடொரு மழுவேந்திய கையாய் எச்சரிக்கை
மதியோடுயர் நதிதங்கிய சடையாய் எச்சரிக்கை
வானோர்முடி தவழும்திரு அடியாய் எச்சரிக்கை
கோனார் தசமுகனாக்கருள் கோவே எச்சரிக்கை

உமைமா தொடு உயர் கோணையில் உறைவாய் எச்சரிக்கை
உருவாய் அருவுருவாய் நிறைதிருவே எச்சரிக்கை
எமையாண்டருள் கோணாசல ஈசா எச்சரிக்கை
எங்கள் உயிர்க்குயிராய் வரு குருவே எச்சரிக்கை

## லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
ஆலமுண்ட நீலண்ட லாலி லாலி

கோணமலை மேவியமர் கோவே லாலி
கொண்டல்வண்ண மாதுமை சேர் தேவே லாலி (லாலி)

தத்துவங் கடந்தவரே லாலி லாலி
முத்திதரும் வித்தகரே லாலி லாலி (லாலி)

சோதி வடிவாளவரே லாலி லாலி
ஆதிக்கேதணை நாயகரே லாலி லாலி (லாலி)

## பராக்கு

அரியயனும் அறியாத ஆதிபராக்கு
ஆதியந்தமில்லாத அரனே பராக்கு
திரிபுர மெரித்தருளும் தேலே பராக்கு
தென்திசைக் கோனைவளர் சிவமே பராக்கு

திருமுறைகள் வேதமும் ஆனாய் பராக்கு
திகழ்ந்தவை ஆகமத்துறைவாய் பராக்கு
அருள்புரிந்தடியாரை ஆய்வாய் பராக்கு
அகிலான்டநயயத்தனே பராக்கு

காலனைக் காலற் கடிந்தாய் பராக்கு
கண்ணப்பனுக் கருள் வட்வுள் பராக்கு
ஆலமுண்டமரருக்கஜள்வாய் பராக்கு
அடியர் துயர் தீர்தென்றுமாள்வாய் பராக்கு

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் - ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்னளம்

ஆதியந்தமில்லாத மாதுமையாள் பாகருக்கும்
ஐங்கரக்கடவுளுக்கும் ஆறுமுகவள்ளலுக்கும்

சுத்தபரி பூரணர்க்கும் சோதி வடிவானவர்க்கும்
நித்திலங் கொளிக்கும் திருக்கோணமலை நாதருக்கும்

தொண்டருக்கும் தாசருக்கும் தோத்திரம் செய் நேசருக்கும்
அண்டருக்கருளுமண்ணல் கோணமலை வள்ளலுக்கும்

# யான் அறிந்த பெரியார்

திருநிறைச்செல்வர், சைவப்புலவர், பண்டிதர் வடிவேலு ஐயாவின் மரணச்செய்திகேட்டு ஒருகணம் என்மனம் நினைவிழந்தாற் போல் வெறுமையுற்றிருந்தது குறித்து எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

ஐயா அவர்களை நான் சென்றமாதம் நேரில் தரிசித்து உரையாடினேன்.அன்று அவர் பரிபூரண அறிவாற்றலுடன் இருந்தபோதும் தேகநிலையில் மிகவும் ஹுன நிலையில் இருந்தது கண்டு வருந்தினேன். அப்பொழுது அவர் அதிககாலம் நீடித்து இருக்கப் போவதில்லையென்பதை நான் நன்கு உணர்ந்துகொண்டேன். எனினும் இப்போ அவர் இங்கு இல்லையென்பதை நான் நன்கு அறிந்தவுடன் மனதில் பட்டென்று இருட்டடித்தாற்போல் இருக்கிறது. சென்ற ஏழுவருடங்களாக நான் ஐயாவை அவர்க்கு வசதியான நேரங்களில் அணுகி அவருடன் சைவசித்தாந்த விளக்கங்களையும் அவற்றிலுள்ள சில நுணுக்கங்களையும் உரையாடி ஓரளவு தெளிவு பெற்றேன்.

சைவசித்தாந்த உட்பொருளை அறிய நான் கொண்டிருந்த வேணவாவை நன்குணர்ந்த ஐயா என்னிடம் பெரும் கருணைகொண்டு தத்துவார்த்தீபம் என்னும் உரையுடன் கூடிய கைவல்ய நவநீதம் என்னும் அரும்பெரும் நூலை வழங்கி எனக்கு இந்நூல் பெரிதும் உபயோகமாக இருக்கும் என்று ஆசீர்வதித்தார். அந்த நாள் என் வாழ்வில் ஒரு பொன்னாள். உடன் நான் ஐயா அவர்களின் பாதம் பணிந்து அந்நூலை ஒரு வரப்பிரசாதமாக ஏற்றுக்கொண்டு நாளும்பொழுதும் கற்றதன் பயனாக ஓரணுவளவாதல் ஆத்மீக தாகம் தணியப்பெற்றேன் என்று உணரக்கூடியதாக இருக்கிறது. இஃது இறைவன் திருவருள் இருந்தவாறு.

அமரர் அவர்கள் ஈழத்துச் சிவனடியார்கள் வரிசையில் முன்னணியில் திகழ்ந்தவர். இவர்நாளும் பொழுதும் திருமுறைகளைச் சிந்தை மகிழப்பொருளுணர்ந்து பக்தியுடன் பண்ணிசையோடு தம்பூசை அறையிலும் மற்றும் திருமலைத்தலங்கள் தோறும் பாடிப் பாடிப் பரவசப்படுவதுண்டு. இவரின் பிரமச்சாரியம் இவரது ஆன்மீக வாழ்க்கைக்கு மூலதனமாக இருந்து இங்கு நோக்கற்பாலது.

திருக்கோணமலையின் தாற்பரியம், பாரம்பரியம் ஆங்குள்ள திருத்தலங்களின் சரித்திர வரலாறுகள் அவ்வத்தலங்களில் எழுந்தருளிய மூர்த்தங்களின் பிள்ளைத்தமிழ், ஊஞ்சற்பாக்கள் என இன்னோரன்ன நூல்கள் பல இயற்றி எம்மவர்க்கு வழங்கியுள்ளார்.

இந்தப்பூமி இருக்கும்வரை திருக்கோணமலையும் இருக்கும். திருக்கோணமலை இருக்கும்வரை அடியார் அவர்கள் எம்மனோர்க்கு அளித்த இந்நூல்களும் நிலைத்திருக்கும். அற்றை நாள்வரை அன்னாரின் நாமமும் திருமலைவாசிகளின் நாவில் இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

ஆண்டு 1997ல் திருமலையில் வாழ்வின் இறுதிக்காலம் வரை நிரந்தரமாக நிலைகொள்ளும் நோக்கத்துடன் யாம் அடியெடுத்து வைத்த போது அன்பர் ஒருவரை அணுகி ஆங்கு சைவப்பெரியார்கள் யார் யார் உளர் என்பது பற்றி வினவினோம். அப்பொழுது அவர் சொல்லியது."இங்கு கோணேசர்மலை ஈஸ்வரன் எழுந்தருளும் அசையா மலை. இந்தமலைக்கு பணிபுரியும் நடமாடும் இருமலைகள் இங்கு உள. ஒன்று அன்புப்பரவசமலை-காந்தி ஐயா அவர்கள். மற்றொன்று அறிவுப்பரவசமலை- பண்டிதர் வடிவேலு ஐயா அவர்கள்!"

இன்று அறிவுப்பரவசமலை சாய்ந்துவிட்டது. எனினும் அதன் நிழல் நம்மை நின்று காக்கும் என்பது உறுதி.

அமரர் பண்டிதர் ஐயா அவர்களின் ஆத்மா 'பல்லோரும் ஏற்றப் பணிந்து' அருள் மலைமேல் வீற்றிருக்கும் திருவருளாம் சிவனடிக்கீழ் சேருமாறு நாம் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து நேருவோமாக!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
வணக்கம்

**சோதிடர். ச. அழகரத்தினம்**
(ஓய்வுபெற்ற சுங்கஇலாகா பிரதியட்சகர்)
திருக்கோணமலை.

# ஈடுசெய்யமுடியாத இழப்பு

திருமலை தமிழறிஞர் சைவப் புலவர் வடிவேல் மறைவு, தமிழ் இலக்கிய உலகுக்கும் சைவ உலகுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். தனது தமிழ் பணிக்கும் சைவப்பணிக்குமாக இவர் பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்றுள்ளார். ஆனால் விருதுகளால் இவர் பெருமையடைந்தார் என்பதைவிட இவரால் அவ்விருதுகள் பெருமையடைந்தன என்பதே பொருத்தமானது. ஆய்வு நோக்கில் இவர் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள் என்னும் நூல் முக்கியமானது. இந்து சமயகலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்நூல் வெளிவந்தது.

இதைவிட திருக்கோணேஸ்வர திருத்தலம் தொடர்பாக இவர்மிகுந்த ஈடுபாட்டுடன் வாழ்நாள் முழுக்க அரும்பாடுபட்டார். பல ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதினார். பல சிறப்பு மலர்களைத் தொகுத்து வெளியிட்டார்.

நான் கலாசார உத்தியோகத்தராகப் பணிபுரிந்த காலத்தில் ஒரு தடவை இந்து சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பின் பேரில் மூன்று மாதங்கள் திருமலையில் தங்கியிருந்து சில திணைக்களப் பணிகளை ஆற்றினேன். அப்போது நாங்கள் அடிக்கடி சந்தித்து திருமலை, திருக்கோணேஸ்வரம், தம்பலகாமம் சிவன் கோயில், கந்தளாய் சதுர்வேதி மங்கலம் முதலிய பல விடயங்கள் பற்றி நீண்ட கலந்துரையாடல்கள் நடத்தினோம். அவை இன்னும் என் மனதில் பசுமையாக உள்ளன. வாழ்நாள் முழுக்க நைஷ்டிகப் பிரமச்சாரியாக வாழ்ந்து அர்ப்பணிப்பான தமிழ், சைவப்பணிகளை ஆற்றிய இவருக்கு **“கிழக்கில் பூத்த மலர்”** என்னும் சிறப்பு மலர் மூலம் திருமலை மக்கள் தமது நன்றிக்கடனை பதிவு செய்துள்ளனர். இவரது சகோதரர் பண்ணிசை வேந்தர் அமரர் குழந்தைவேல் அவர்களும் இவரும் சைவத்தின் இருகண்கள் எனலாம்.

இவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினர், அன்பர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்னாருடைய ஆத்மா சாந்தியடையும் திருக்கோணேஸ்வரப் பெருமானின் திருவடி நிழலில் பேரின்பப் பெருவாழ்வு பெறவும் பிரார்த்திக்கிறேன்.

**செல்வி. க. தங்கேஸ்வரி**
மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்.

# அழியாச் சேவை செய்த அன்னாரின் ஆன்மா முத்தி பெற வேண்டும்

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுப்படி விளங்கிய முன்னாள் அதிபரும் சைவப்புலவரும் கலாபூஷணமுமாகிய ஞானசிரோன்மணி பண்டிதர் இ. வடிவேல் ஐயா அவர்கள் எனக்குப் பாடசாலையில் பாடம் சொல்லித்தந்த ஆசனாவார். எனது பாட்டனார் காலம் தொட்டு எங்களது குடும்பத்தினருடன் நெருங்கிய தொடர்புடைய அவர்கள் எமது ஆலயத்தில் இடம்பெறும் விஷேச நிகழ்வுகளில் கலந்து கொண்டு பண்ணிசையை முறைப்படி ஓதிப் பணியாற்றுவதோடு அல்லாமல் ஆலய வரலாறு தொடக்கம் தேரடிச் சிந்து உட்பட பல பாடல்களையும் படைத்துத் தந்துள்ளார்.

அன்னாரின் இழப்பு தமிழ் கூறும் சைவ உலகுக்குப் பேரிழப்பாகும். சைவமும் தமிழும் தன்னுயிராய் பேணி வளர்த்த மாமேதை இன்று எம்மத்தியில் இல்லாமல் விட்டாலும் எமக்களித்த ஆக்கங்கள் மூலம் எம்மோடு வாழ்ந்து கொண்டு இருப்பார் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. அழியாச் சேவை செய்த அன்னாரின் ஆன்மா முத்தி பெற வில்லூன்றிக் கந்தனை வேண்டிக் கொள்வதோடு அவரிழப்பால் கலங்கி நிற்கும் அனைத்து உறவினர்களுக்கும் எங்களுடைய தேவஸ்தானம் சார்பாகவும் எனது குடும்பத்தினர் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வண்ணம்
வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில்
தேவஸ்தான ஆதீனகர்த்தா பிரதமகுரு
பிரம்மஸ்ரீ **சிவ.சுரானந்தேஸ்வர சர்மா**

## கிழக்கில் உதித்த சூரியன்

என் ஆசான் பண்டிதர் வடிவேல் ஐயாவின் சிவபதம் அடைந்த செய்தியைக் கேள்வி உற்று மிக ஆழ்ந்த கவலையுற்றேன். எனக்கு எழுத்துக்கள் ஊட்டிய எனது ஆசானும் குருவும் அவரே. பண்டிதர் வடிவேல் ஐயா தமிழ் ஊற்று. இவ்வுலகை விட்டு சென்றாலும் அவர்களின் சேவைகள் என்றும் அழிவதில்லை. அவர் "கிழக்கில் உதித்த சூரியன்" மீண்டும் இந்த கோணேசர் பூமியில் உதிக்கவேண்டும் என்பதே எங்கள் அவா. அவர்களின் ஆத்மா சாந்தி அடைய, எல்லாம் வல்ல முருகப் பெருமானை பாதங்களில் போற்றி வழிபடுவோமாக.

இவ்வண்ணம்

ஸ்ரீ தெய்வானை அம்மன் கோயில், கதிர்காமம்

பிரம்மஸ்ரீ **ந.சிவகுமார் சர்மா**

---

## திருமலைக்கு வடிவமைத்த இ. வடிவேல் அவர்கள்

இலங்கு திருக்கோணமலை கோணேஸ்வரப் பெருமான், சிவயோக சமாஜ ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜி, திவ்விய ஜீவன தபோவன அருட்பிராட்டி மாதாஜி, தன் பிரதம குருவான மட்டக்களப்பு சைவப்புலவர் அருணாசலதேசிகரான அன்றுளோர்க்கும் இன்றுளோரான இளைஞர் அருள் நெறி மன்ற தொண்டர். இ. சண்முகராசா ஐயா, பொன்போல் போற்றப்படும் காந்தி ஐயாவான கந்தையா ஆசிரியர் அவர்களுக்கும் திருகோணமலைப் பேருளாளர் யாவருக்கும் மக்களுக்கும் என்னை அறிமுகமாக்கினீர்கள். அதுமட்டுமா இலங்கு சைவத்தாலும், இதழ்நிறை தமிழாலும், கதாகலாட்ஷேப கலாநிதியாய் உங்கள் புகழை வையமெலாம் துலங்க வைத்தீர்கள். அதற்கு மெருகூட்ட எனது முக்கலையையும் ஆத்மீக தெளிவையும் மிருதங்க இசையாய் 1960ம் ஆண்டுமுதல் 1975ம் ஆண்டுவரை இசைக்கலை திகழுமிடமெல்லாம் புகழ்பரப்பிய ஆத்ம நண்பரான உங்களை எப்படி மறப்பேன். 06 - 11 - 2004 இல் இலங்கை வானொலி மூலம் உங்கள் சிவ அத்துவிதச் செய்திகேட்டு சிவஞானத்தில் ஆழ்ந்து விட்டேன். பின் சற்று உணர்வு பெற்று தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு கோணநாதப் பெருமான் அருளால் தேறுதலும் கூறுகிறேன்.

**கவிஞர். சு.கணபதிப்பிள்ளை**

போஷகர் முள்ளியவளை சாயி ஆச்சிரமம்

முள்ளியவளை நுண்கலைக் கல்லூரி

# அன்னாருக்கு ஓர் அஞ்சலி

எனதன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய எனதாசிரியர்
எம்மைவிட்டுப் பிரிந்ததோர் ஈடில்லா இழப்பு
சைவத்தமிழ் உலகிற்கே பெரியதோர் இழப்பு
அன்னாரின் உறவினர்க் கென்அனுதாப அஞ்சலி.

அவர் வாயசைத்தால் தேன்தோற்கும் இசையமுதம்
கை அசைத்தால் அர்தமுள்ள நூலாகும்
ஊர் அசைந்தது அன்றுஅவர் முற்றுமோதலில்
வான் அசைந்தது இன்றெம்மக்கள் உணர்வலைகளில்

திருமலைத் தலங்களெல்லாம் விலாசமற்ற வேளையிலே
நூல் விளக்கேற்றி சைவவுணர்வூட்டிய வித்தகன்
சொற்சுவை பொருட்சுவை நகைச்சுவை புனைந்து
அந்நாளில் அவராற்றிய அருளுரைகள் இனிக்கின்றது இன்றும்

திருமலையில் தலைசிறந்த சமூக நேசன்
தமிழுலகில் தலைசிறந்த பண்டித மணி
சைவநெறியில் தலைசிறந்த சைவப் புலவர்
எமதுள்ளத்தில் தலைசிறந்த இடத்தைப் பெற்றார்

வந்தவர் செல்வது வையத்து வழிமுறை
வந்தவர் நிலைப்பது அவரவர் செயல்முறை
வந்தவர் செல்கையில் எடுப்பதற்கு ஒன்றுண்டு
வந்தவர் உள்ளே உள்ளதோர் அரும்பொருள்தான்

**ச.பாலச்சந்திரனும் விஜயேஸ்வரியும்**
திருக்கோணமலை.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

பண்டிதர் இரா. வடிவேலு குடும்ப அங்கத்தவர்களுக்கு,

## மௌனாஞ்சலி

**14.11.2004 அன்று நடைபெற்ற கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழுக் கூட்டத்தில் பண்டிதர் "இயற்றமிழ் வித்தகர்" இராசையா வடிவேலு அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்ததோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இரண்டு நிமிட மௌனாஞ்சலியும் செலுத்தப்பட்டது.**

**இவ் அனுதாபத் தீர்மானத்தை அன்னாரின் குடும்பத்துக்கு அனுப்பிவைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.**

**ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி**
பொதுச்செயலாளர்.
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# நின்நாமம் என்றும் நிலைத்திட வேண்டுவமே

வாவி உடன் கடல் வளன்
எழில் கொஞ்சும்
தேவி அருள் நிறை மணிவண்ண
மீனினம் கீதம்பாட
மட்டுநகர் ஈன்ற எங்கள் மேதை
அயனும் வடிவேல் வித்தகன்
தேடி ஓடி தமிழ் வாழ்க்கை இன்புற
கூடி விளையாடி நின்றான்

மாடிகளும் மன்றன் அருள் புராதன
கோணாமணி கண்டன் அருள்
தேடித் தமிழ் வடித்த வங்கவாரி
ஆழமென அருள்வள்ளல்
மானிலத்தை மகிழ்வில் ஆழ்த்தும்
கீழைப்புறச் சூரியனெனச் சூடுகண்டே
நாடி உலகின் முடுக்குத்தோறும்
கூடிவிடையானானே குஞ்ஜித பாதம்காண
மானியென மறைகள் போற்றும்
வடிவேல் வள்ளன் எனும் விடிவெள்ளி.

கீழை வானின் சுடர் சுக்கிரதூமகேது
அக்கிரமம் நிறை செக்கர்வானின்
,க்கர் நின்ற ஞான பானு தக்கதோர்
தொழும்பாலே திக்கனைத்தும் புகழுடனே
மக்கர் அடித்த மாகாண மனோதலயத்தை
உக்கிரமாக்கி உயர்த்தி விட்டே
உண்மை எலாம் எமக்கு உதவி விட்டார்
தெய்வானுக்கிரகம் தன்னால்
மெஞ்ஞான சிரோன்மணியாகி நின்றே
நாட்டின் அஞ்ஞான இருளை அகற்றி
ஆத்மீக ஞானம் ஓங்கி வளர்த்திடவே
விரைந்தானே விண்காண வடிவேலன்

**- கோணாபுத்திரன்**

# Vetern Tamil Scholar

Mr. Vadivelu who was born in Batticaloa on 9th December 1919 permanently shifted his residence to Trincomalee in 1946. He began his teaching career in Batticaloa and served in Trincomalee for about 35 years. He served as principal of Trincomalee Koneswara School for about 25 years. Though he retired from teaching career in 1976 he continued his Writing, religious and social activities.

Late Mr. Vadivelu is the author of serveral literary and research works on the history of Tamils of Trincomalee. The masterpiece of his research works is "Thirukonamalai Mavatta Thiruthalangal" (Trincomalee District Holy Places). He wrote this book on the assignment by then Hindu Cultural Ministry in 1980s. Mr. Vadivelu visited every Hindu temple in each village in the district by foot from the down south Verugal to Thennamaravady in the north of the Trincomalee district and collected materials from manuscripts and stone scriptures found in temples.

"Thirukonamalai Mavatta Thiruthalangal"(Trincomalee District Holy Places) is considered by eminent educationists as a reference for research on Trincomalee history.

Sources said his other research works included "Thirukonesar Stone Scriptures," and "Thirukonamalai Anthathy"

The Government of Sri Lanka and leading Saiva Institutions in Tamilnadu in India had conferred on him with several honorary titles including Vidwasironmani, Thirumuraichelvar and Kalabooshanam. He held the posts of the Secretary of Trincomalee Koneswaram Temple Society, Trincomalee Sivajoga Samajam and Trincomalee District Young Men Hindu Association.

**- S. Gurunathan**

# Vadivel Chinnaiya

Vadivel chinnaiya is the man who had formally done the initiation " Vidhyarambham" for me, when I was 4 years old. There are hundreds of others like me in Trinco, who were formerly initated into this Hindu holy rite in the educational process, I am sure.

About two months ago, Swami Omkarananda (from Chennai) was here in New Zealand, for giving a series of lectures in Vedanta. After the lectures , I went to meet him privately at where he was staying .As soon as I told him that we are from a place called Trincomalee in Sri Lanka, he said there is a man called Vadivelu master, who spends the whole day with me whenever I went to Trincomalee and he spoke very highly of Vadivel Chinnaiya!

The day after the funeral took place in Trincomalee, Tamilnet carried the news as well as published funeral photographs. I could not control my tears in front of the computer, when I enlarged the photograph. His body surrounded with all the beautiful flowers, 2 medals for whatever reasons he was awared placed around neck, his face looking exactly the same as I saw him 21 years ago for a last time, when I left Ceylon. He was such a nice man, dedicated his entire life for a serving the Trincomalee people, Tamil langueage, Hindu religion and the Sanyasis.

In the Vadanta studies, when I come across the qualities they suggest one should have for self realization, he had it all.

Like living a life of Karma yaga. Brahmacharya, not having too many desires, living a simple & pure life, vegetarianism, etc I can go on adding.......!
All these I saw in Vadivel Chinnaiya's life.

In fact, I used to wonder whether my meeting Swami Gangadharanandaji in my early days, may be I was 10 or 11 years old then, was instrumental in the search for the truth in my later life. Deep in my heart , I sincerely thank Chainnaiya for bringing spiratualism to Trincomalee and for his efforts in establishing the Sivayoya Samajam.

He touched so many people's lives, yet he did not expect anything from anybody in return.A true Karma Yogi he was ,living the life as Krishana Bhagavan taught in the Bhagavad- Gita!

One's separation from the physical body is not the end of the Atma. Lets us be thankful to the Lord for the gift of Vadivel Chainnaiya. Lets us rejoice in our hearts for that fine and precious gift! Coming in contact with him has enriched all our lives in varios ways, to me specially spiritually. Our being at place will give shanthi to Channaiya's Atma.

Thought he was born in Batticaloa, he dedicated his entire life for serving the Trincomalee Tamil people. Trincomalee has lost a true son of its soil.

According to the elecronic media, the Trincomalee Member of Parliament, Mr. R. Sampanthar was quoted as suggesting in his funeral epiloque, a suitable Memorial should be set up for this remarkable man. Should this proposal eventuate, I am sure the Trincomalee Tamil Diaspora will be very supportive.

Thank you for giving me this privilege of sharing my reflections. My sincere thanks go to the Webmaster of Tamilnet, for their prompt reporting. Aum Tat Sat.

**Sundaramahesan Jeyakurar**
Auckland, New Zealand.

# PUNDIT R. SELVATHURAI

(Vadivelu Master)
Sage & Savent

The passing away of Pundit R Selvathurai, known affectionately by one and all as Vadivelu Master, has taken away from the religious, literary and social scence in Sri Lanka. one who towered amongst men with his erudition, devotion to duty and adherence to the tenets of Hinduism, the sanatana dharma.He was a man of principles, one of which was, "It is not who is right that is of greatest importance but what is right."

What struck any person who met Vadivelu Master for the first time was his rectitude. Its is not often that one meets people, especially in Sri Lanka, of whom the outstanding characteristic is rectitude. Some how Vadivelu Master was able to convey the impression of absolute integrity within the shortest possible time by the way he bore himself, always straight, the way he spoke and the way he acted.One very quickly knew that here was a person in whom there was no deceit.He had the greatest respect for the truth unlike the politicians of Sri Lanka who will promise to build a bridge even where there is no river!

When we are mourning the sudden and unexpeceted loss of one who was near and dear to all of us, it is but the fitting to reflect on those qualities and actions of this great man that made him a legend in him time. For these reflections I draw on my personal knowledge of Vadivelu master. It is our duty and responsibility to enshrine and immortalise the vision and the ideals that were the mark and symbols especially dear to Vadivelu Master 's heart. Let us pause and join him in spirit in the great beyond and listen as he softly cries: "Search for the what is right and not who is right!" and perpetuate the ideas he strove for.

Vadivelu Master was a scholar par excellence whose life was a closely kint tapestry of many hues in which supreme intellect was interwoven with spectacular achievements in the field of education where his grest strength, apart from his prodigious memory , lay in his distinctive administrative ability and leadership.At the Ramakrishna Mission Hindu Vidyalam in Trincomalee he welded his group of tearchers into a closely knot team and succeeded in raising the school to the status of one of the leading educational institutions in the District of Trincomalee.

Vadivelu Master was indefatigable in his quest for knowledge and was continuosly opening windows for both our youth and their teachers to the fast-growing modern world of knowledge anchored to a traditional Tamil Hindu Foundation. His work was ample demonstration of the fact that the school was not merely an institution concerned with distributing doses of prescribed learning but rather that it was the motivational force towards creating an awareness of the ever-expanding human horizon in the world of today.

Vadivelu Master wanted the most for the youth to be placed under his tutelage, particularly because he truly belived that the eventual eradication of the problem of unemployment could be achieved only through enhanced education and the narrowing of the gap in educational facilities. Through the provision of a dynamic educational system complete with Tamil Language and Hinduism as cementing froces, he was confident that we could equip our young men and women with the requisite enthusiasm and zeal to serve their mother land in the best way possible.

His foremost principal was ahimsa or non - violence for the Hindu views all living forms as sacred.To him non-violence was linked to truth in the search for peace.As Mahatma Ganghi said: The way of peace is the way of truth....Thuthfuleness is even more importent than peace fulness.Indeed lying is the mother of violence.A truthful man can not long remain violent.He will perceive in the course of his research that he has no need to be violent, and he will further discover than so long as there is the slightest trace of violence in him, he will fail to find the truth he is searching for

His second principle was that as Hindus, we should live in tune Nature and not plunder Nature to the point of destruction in order to enrich ourselves.His view reminded me of the words of Wordsworth, the English poet, who wrote:

> One impulse from a vernal wood
> Can teach you more of man
> Of moral evil and of good
> Than all the sages can

His third principle was the Unity of Mankind.Hinduism goes further than biblical injunction " Love thy neighbour as thyself ", and exhours as consider our neighbour as bar of ourserves and that, if we hurt our neighbour, we hurt ourselves in the process.

AUM NAMASIVAYA

SHANTHI ! SHANTHI !! SHANTHI !!!

**K.Sivapalan**
Former Principal
Ramakrishna Mission Hindu College
Trincomalee, Sri Lanka.

77 Cannon Grove
Fetchan, Leatherhead
Surrey KT 22 9 LP
United Kingdom.

# PANDITH R.VADIVELU.

It was a terrific shock to me, when I read the obituary Notice of pandit R. Vadivelu, Retired principal my most respcted gentleman. Pandit R. Vadivelu's recital of HINDU RELIGOIOUS THOUGHT over radio was a regular feature from 1950 to 1965.

Going down memory lane glimpses of his past life flash acress my mind, a perfect gentleman is no more.

Pandit walked in the corridors or power yet he kept his head. He was humble in his deeply religious achievement.

Pandit took defeat and success in life in a humble manner.

With his death ,Eeastren Provice has lost a veteran Religious Leader.

Our heartfelt sympathies to his beloved brother Subramaniam and his wife and other members of his family.

May Pathirakail Amman his chosen deity bless his soul with peace and eternal bliss.

OM SHANTHI !

**V.Gnanesampanthen**
Trincomalee

# a loss of a great Literary and spiritual scholar

Agreat 'pandit' dearly known as Vadivel master to the people in Trincomalee left his mortal coil and attained eternal bliss on November 05-2004 at the age of 85. " Service to man is service to God " - Baba His Service to Tamil community and Hinduism is monumental.

To me he was known as "Sinniyah." Althouth I was not fortunate enough to be in his presence throughout my life, I never missed his satsang whenerver I visited Trinco. He is very dear to our family, especially to my sister at home since my mother passed away in April 2002, His caring visits became more frequent. his affection for my sisters was so great that it was by mere intuition my sister Chandra rushed to his home to be near his bedside at the time his atma left his mortal body.

Our beloved swami, Bhagwan Sri Sathya Sai Baba has prescribed that "Naamasmarana" is the easiest way to win the Divine Grace to liberate from worldly bondage. Sinnaiyah was gifted to sing to glory of the Divine and he had composed holy songs, poems and lyrics and delivered divinely discourses on many different occasions and places. He was blessed to be in constant communion with God by his consistent divinely words, thoughts and deeds.

when I last visited him,I had an inner feeling that it may probably be my last visit to sinniyah I know that I will miss his satsang in future but I should not be selfish. Let us Pray together for his sole to rest in Peace at the lotus feet of Our beloved Lord Sai. May Swami give courage and strength to all the members of his family to bear the loss of a great personality who devoted his life for the advancement of our Religion and language.

**" Loka samasta SukinoBhavantu "**
**Aom shanthi ! Shanthi !! Shanthi !!!**

**Susi Muttucumaru**
(London. U.K)

# சொந்தங்களின்
# நினைவலைகள்

# எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு

எங்கள் அன்புச் சகோதரர் திரு. வடிவேல் அண்ணா அவர்கள், சிறந்த கல்விமானாகவும் சங்கீத விற்பன்னராகவும் கதாப்பிரசங்கியாகவும் தமிழ் அறிஞராகவும் பக்திமானாகவும், கோணேஸ்வராக் கல்லூரி ஆசிரியராகிப் பின் அதிபராகி எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்தார்.

எங்கள் பெற்றோர்களாகிய வட்டவிதானை இராசையா, கற்பகம் தம்பதியினர் ஈன்றெடுத்தது ஐந்து ஆண்களும் ஒரு பெண்ணும். மூத்தவர் காலஞ்சென்ற தில்லைநாயகம், கிருபைநாயகம், செல்வநாயகி, குழந்தைவேல், ஐந்தாவது வடிவேல் அண்ணா அவர்கள். இவர் சகலருக்கும் கற்பகத்தருவாக ஏழை எளியவரென்ற பாகுபாடின்றி அறிவை விருத்தி செய்யவும், சங்கீதம் கற்கவும் சந்தேகத்தை தீர்க்கவும் உதவினார்.

இளமையிலேயே பெற்றோரை இழந்த எமக்கு எம் மூத்த சகோதரர் தில்லைநாயகமும் அண்ணி பாக்கியலட்சுமியும் சகல விதத்திலும் எங்கள் முன்னேற்றத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து உதவினர். குடும்ப ஒற்றுமை குலையாதிருக்க அண்ணியின் சகோதரி சௌந்தரலட்சுமியை வடிவேலண்ணாவே முன்னின்று எனக்கு மணமுடித்து வைத்தார்.

எந்த வித வேறுபாடுமின்றி எல்லாப் பிள்ளைகளையும் தன் பிள்ளைகள் போல் அன்பு காட்டி அரவணைத்து அவர்களின் கல்வி முன்னேற்றத்தைக் கண்டு களிப்புறுவார். அவர் வித்தியாரம்பம் செய்து வைத்த நூற்றுக் கணக்கான சிறார்கள் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் கல்வி கேள்விகளில் சிறப்புற்று பட்டம் பதவியோடு வாழ்கிறார்கள்.

இவர் பல புத்தகங்களையும் சரித்திர முக்கியத்துவம் பெற்ற ஆராய்ச்சி கட்டுரைகளையும் எழுதி உள்ளார். இவரது நூல்களை இந்துக் கலாசார அமைச்சும் பல நிறுவனங்களும் வெளியிட்டுக் கௌரவித்து பலபட்டங்களை வழங்கியுள்ளன.

அண்ணாவின் சமய அறிவையும் தமிழ் ஆர்வத்தையும் வளர்க்க உறுதுணையாக இருந்தவர் எங்கள் சித்தப்பா அருணாசல தேசிகர் அவர்களாவர்.

சுவாமி விபுலானந்தர், நடராஜானந்தர், ஜீவானானந்தா, இன்னும் பல சமயப் பெரியார்களுடைய தொடர்பும் அன்பும் ஆசியும் இவருக்குண்டு.

மட்டக்களப்பில் பிறந்தாலும் பாடல் பெற்ற திருத்தலமான கோணேசரின் அருட்பேறும், பத்திரகாளி அம்பாளின் கருணாகடாட்சமும் இவரைத் திருக்கோணமலைக்கே சொந்தமாக்கிக் கொண்டது. இவர் ஏற்றி வைத்த ஞான தீபம் பல்லாயிரம் சுடர் விளக்குகளாக ஒளி வீசிப் பிரகாசிக்கும் என்பது உறுதி.

மற்றைய எனது சகோதரர்கள் காலமானபின் தான் அவர்களின் இறுதிச் சடங்குகளில் என்னால் கலந்து கொள்ள முடிந்தது. ஆனால் அண்ணன் அவர்களின் பக்கத்தில் இருந்து அவர் கடைசி மூச்சு விடும்போது தாங்க முடியாத துன்பம் என்னை ஆட்கொண்டுவிட்டது. அவர் என்றும் எங்கள் உள்ளங்களில் ஒளிவிளக்காகப் பிரகாசித்துக் கொண்டே இருப்பார். அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கோணநாதரைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புச் சகோதரன்
**இ. சுப்பிரமணியம்**

---

# Vadivel Annan

Vadivel Annan was always dear and near to me and my family. He was so loving, gentle and always wished others should do well in life. It was this attitude of his, that we liked him very much.

I had known him for the last 6 decades or more, ever since he came into Trincomalee, after his eldest brother {another beloved annan to me} married my cousin packiyaletchumy who was also dear to me. He will always come and see me, whenever I go home. We talk and laugh and he keeps up his sence of hornour, which should also be appreciated. A lovable man who can never be forgotten. The thoughts that he is no more, makes me sad and tears fill my eyes, because he was like a brother to me.

**Manon**

# எம் சின்னையா பரணி போற்றும் திருவேலன்

'சின்னையா' என்று எங்களால் அன்புடன் அழைக்கப்பட்டு நேசித்து வந்த பண்டிதர், சைவப்புலவர் வடிவேல் ஐயா அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்த போதும், அவர் ஆற்றிய பணிகள் யாவும் எம்மை பெருமையடைய செய்துள்ளன. தனி ஒரு மனிதனாக நின்று வியக்கத்தகு சாதனைகளை அடக்கத்துடன், 'பணிபுரி பலனை எதிர்பாராதே' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நிதர்சனமாகச் செயலாற்றினார்.

எங்களுக்கெல்லாம் ஏடு தொடக்கி வைத்து எழுத்தறிவித்த ஆசான். கோயில் வழிபாட்டுடன் விரதங்கள் மேற்கொள்ள சைவநெறியை இளமைக் காலத்திலிருந்தே எமக்குப் போதித்து வந்தார். எமது கல்வியின் முன்னேற்றத்திற்காகத் துணை நின்றார். எமது திருமணங்களை முன்நின்று மகிழ்ச்சிப் பெருக்குடன் நடாத்தி வைத்தார். அந்த நன்றியை எம்மால் என்றும் மறக்க முடியாது நினைவு கூர்ந்து நிற்கின்றோம்.

சைவத்தையும், தழிழையும் இரு கண்களெனப் போற்றிய செம்மல். தனக்கென வாழா தகைசான்ற பெரியோன். சொல்லில் உறுதி எழுத்தில் நிதானம். துணிந்து தன் எண்ணங்களை இயம்பிடும் மேலாளன். வடிவேலன் அவன் பரணிபோற்றும் திருவேலன். வாழ்ந்த காலத்திலும் பெருமையுடன் வாழ்ந்து மறைந்தும் மாறப்புகழுடன் தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

*வாழ்க அவர் நாமம் என்றும் !*

**சசிதேவி சிவனேசன்**
**சாந்திதேவி சிவலிங்கம்**
**ராதாதேவி சிவசுப்பிரமணியம்**

# என்நன்றி கொன்றார்கும்......

ஏடுதொடக்கி, எழுத்தறிவித்து, அம்புலிகாட்டி, தூக்கித்திந்து சோறும் ஊட்டிய சின்னையா என்றும் விட்டகலா ஜோதியாக என்மனத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். எமது இனபந்தத்தில் முதல் பிறந்த ஆண்பிள்ளை என்ற காரணத்தினால் என்னவோ எல்லோரும் சின்னவயதில் என்னில் பெரு அன்புகாட்டினார்கள். சின்னையாவும் என்னில் மிகுந்த அக்கறை கொண்டு, நான் கேட்பதெல்லாம் வாங்கித்தந்து பெரும் பாசத்துடன் இருந்தார்.

என் ஆரம்பக்கல்வி ஆசானாக இருந்து வழிகாட்டினார்.தேவாரங்களை முறையாகக் கற்றுத்தந்து, பாடசாலையில் காலையில் அவற்றைப் படிப்பதற்கு ஊக்கம் தந்து உதவினார். அந்த ஊக்கமே கொழும்பு இந்துக்கல்லூரியில் கல்வி கற்கும் காலம் முழுவதும் தேவாரம் படிக்கும் சந்தற்பத்தைக் கொடுத்தது. அதுமட்டுமல்லாமல் கதாபிரசங்கங்கள் செய்யும் இடங்களுக்கு என்னைக் கூட்டிச் சென்று தனது உதவியாளராக என்னை அவற்றின்பால் ஈடுபாடுகாட்ட உதவி பலவிடயங்களை எனக்கு அறியவும் தந்தார். உதைப்பந்தாட்டத்தில் ஆர்வம் உள்ளவராக இருந்தமையால் என்னை மைதானத்திற்குக் கூட்டிச்சென்றுநான் விளையாடுமட்டும் என்னுடன் இருந்து பார்த்து என்னை ஊக்கப்படுத்தினார். இப்படி பல அனுபவங்களை நான்பெற காரணகர்த்தாவாக இருந்து செயற்பட்டார். அவற்றையெல்லாம் இச் சந்தற்பத்தில் நினைவு கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**"என்நன்றி கொன்றார்கு முய்வுண்டா முய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகற்கு"**

எந்ற வள்ளுவப் பெருமானின் வாக்குக்கமைய இனபந்துக்கள் மட்டுமல்ல, அளப்பரிய பணிகள் புரிந்த செம்மலாக தமிழ் சைவ உலகம் போற்றி நன்றியுடன் மதித்து நின்று கலங்கி நின்றகாட்சியை அவரது இறுதி யாத்திரையிலே கண்டு கண் கலங்கினேன். அதை என்றுமே மறக்கமுடியாது.

வடிவேல் ஐயா அவர்கள் கோணேசப்பெருமான் மேல் அளவற்ற பக்தி கொண்டவர்.அரும்பாடுபட்டு பல ஆராய்ச்சிகள் செய்து கோணேசப்பெருமானின் தொன்மை வரலாற்றை உயிரேவியமாக்கினார். சைவசமயம் சம்பந்தமான பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டு மகிழ்ந்தார். அன்னாரின் நாமம் நிலைத்து நிற்கும்படி அவருக்கு ஒரு மணிமண்டபம் அமைக்க சைவ உலகம் உறுதிபூண்டுள்ள செய்தி அறிந்து நாமும் அப்பெரும்பணியில் உதவி புரிய காத்திருக்கின்றோம் என்று அவர் குடும்பத்தவர்கள் சார்பில் கூறிக்கொள்கின்றேன்.

***வணக்கம்***

த பினான்ஸ் கொம்பனி,
திருக்கோணமலை.

**சு.ஜெயசங்கர்.**

## சிவ வழிபாடு

**செந்தமிழ் நாட்டில் முன் நாளில் எல்லோரும் சிவனையே வழிபட்டனர். அதனால் சைவர் என்ற ஒரு குலமே இருந்தது. தொழில் பற்றிய குலங்கள் பல இருந்தபோதிலும் வழிபாட்டுக் குலம் ஒன்றுதான் இருந்தது அது சைவர் என்ற குலமே இதனால் "ஒன்றேகுலம் ஒருவனே தேவன்" என்று இம் மறை மொழி எழுவதாயிற்று அது போல சிவபெருமானையே செந்தமிழ் முழுவதற்கும் தெய்வமாகக் கொண்டு வணங்கினார்கள் .எனவே இறைவழிபாடு செய்வோர் தெய்வ பேதம், மூர்த்தி பேதம், குறித்து மாறுபட்டு மலையாது நிலையான அன்பினால் சிவனைக் குறித்து வழிபடவேண்டும்.**

**- பண்டிதர் இ.வடிவேல் -**

# சின்னையாவின்
# அழியாத நினைவுகள்

எனது தந்தையின் அண்ணா ஆனாலும் எல்லோரும் ‘சின்னையா’ என்றே அன்புடன் அழைப்போம். நானும் எனது அண்ணா சங்கரும் அப்பாவின் அண்ணன் தில்லைநாயகம் வீட்டில் சின்னையாவுடன் இருந்தோம். ஆரம்பக் கல்வியை சின்னையா ஏடு தொடக்கி வைக்கத் திருக்கோணமலையில் தொடங்கினோம். இவர் கோணேஸ்வராக் கல்லூரியில் அதிபராக இருந்தார். பொதுநல சேவை கோயில்களில் ஈடுபாடு கொண்டு தொண்டுகள் செய்வார்.

சிவயோக சமாஜத்தில் சுவாமி கெங்காதரானந்தாவின் சீடராக பஜனைகள் தேவார வகுப்புகள் நடாத்தினர். சமாஜத்தில் பல சிறுவர்கள் தங்கியிருந்து கல்வி கற்றனர். எங்கள் எல்லோரையும் சமாஜத்துக்கு அழைத்துச் சென்று பஜனை பிரார்த்தனை இவைகளில் ஈடுபட வைத்தார். இதைவிட யோகாசனம் தேவார வகுப்புக்களிலும் ஈடுபட வைத்தார். இந்தியாவிலிருந்து பல பெரியார்கள் வந்து சொற்பொழிவு பிரசங்கம் ஆற்றுவதைக் கேட்கவும் பக்தன் முருகதாஸ் போன்றவர்களின் பாடல்களைக் கேட்கவும் பண்ணிசையாளரைக் காணவும் வழி காட்டினார். இவர் வருடா வருடம் திருக்கேதீஸ்வரம் சென்று கொடியேற்றம், திருவிழாக் காலங்களில் கலந்து கதாப்பிரசங்கம் செய்வது வழக்கம். இவருடன் நாங்களும் போவோம். அவருக்கு சுருதி போட அனுமதிப்பார். இப்படி எத்தனையோ வாய்ப்புக்களைத் தந்த சின்னையாவுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். அவரின் தேவார திருவாசகங்கள் காதுக்கு இனிமையும் மனச்சாந்தியையும் தரவல்லது. குரல் வளமும் சொல் ஆற்றலும் மிக்கவர். கோயில் வரலாறுகள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எனப்பல்வேறு விஷயங்களை எழுதிக் கொண்டே இருப்பார். இவருக்குக் கிடைத்த பட்டங்கள் பரிசுகள் பொன்னாடைகள் என எண்ணிலடங்கா. இலங்கை இந்தியா ஆதீன சபை, இராமகிருஷ்ண மடங்களின் தலைவர்களால் பாராட்டப்பட்டுள்ளார்.

இன்ரநெற்றில் வந்த இவரது படங்களையும் பார்த்தேன். மலர் மாலைகளால் மூடப்பட்ட உடலும், பாராட்டிப் பேசியவர்களைக் கொண்டும் இவரது நற்சேவையை உணரக்கூடியதாக இருந்தது. அவரைத் தெரிந்தவர்கள் யாவரும் கண்ணீர் மல்க அக்காட்சியைப் பார்த்தனர்.

என் இளமை வாழ்க்கையில் அனுபவித்தவை நாற்பது வருடங்களுக்குப் பிறகும் அவரின் வழியில் என்னால் முடிந்த அளவு பொதுஜன சேவையும் ஆன்மீக வழியில் சில சேவைகளும் செய்ய முடிகிறது. அவரை பின்பற்றிப் பாடமுடிகிறது. இதனால் மனதுக்கு நிம்மதி. இவர் சிறுவர்களுக்கு வித்தியாரம்பம் செய்து வைப்பார். என் பிள்ளைகளுக்கும் இவர் ஏடு தொடக்கி வைத்தார் அவர்கள் இதனால் பயன் பெற்றுள்ளார்கள். எங்கள் குடும்பம் இலங்கை வந்தபோது கசெற்றில் பதியப்பட்ட தேவாரம் கோணேசர் பதிகம் திருவெம்பா கதாபிரசங்கம் அவரின் சில வெளியீட்டுப் புத்தகங்களும் தந்தார். என் கணவர் ஆனந்தனுக்கும் சிறு வயதில் படிக்கும் பொது படிப்பதற்கு உதவியுள்ளார். அவர் கல்விச் செல்வத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து பலருக்கு உதவியுள்ளார். அவர் செய்த சேவைகளுக்கு நன்றி கூறி ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

கனடாவிலிருந்து **ஆனந்தன் பாரதி**

## மனித எச்சங்கள்

**உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒருவகையில்இந்தஉலகத்திற்குப் பயன்பட்டிருக்கிறான். நல்ல பாங்கிலோ, தீய பாங்கிலோ செயற்பட்டு மனிதன் எச்சத்தை விட்டுச் சென்றிருக்கிறான். அந்த எச்சத்தை மதிப்பீடு செய்யத் தக்கவர்கள் யார்? தகாதவர்கள் யார்? என்று கணக்கிட்டுக் கொள்ளலாம் அல்லவா? ஒருவன் விட்டுச் சென்ற பிள்ளைகள், புகழ்ச்சி, இகழ்ச்சி, பொருட்செல்வம், அறிவுச்செல்வம் என்பன எச்சத்தின் பாற்படும்.**

**- பண்டிதர் இ. வடிவேல் -**

# அன்பு செலுத்திய எங்கள் சின்னையா

வடிவேல் சின்னையா பண்டிதர் சைவப்புலவர் தமிழறிவும் சங்கீத ஞானமும் நிறைந்தவர். கோயில்களில் தேவார திருவாசகம் பாடுவதில் ஈடுபாடுடையவர். எங்கள் தந்தையார் குழந்தைவேலுவும் பண்ணிசையில் ஈடுபாடு கொண்டவர். திருக்கேதீஸ்வரம் கதிர்காமம் போனால் அநேகமாக வடிவேல் சின்னையாவும் அங்கு வந்திருப்பார். இருவரும் சேர்ந்து பக்திப் பாடல்களைப் பாடி பக்தர்களைப் பரவசத்தில் ஆழ்த்துவர். மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷனில் நடக்கும் விஷேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்படி சின்னையாவுக்கும் அழைப்பு அனுப்பும் போது அவர் அவசியம் வந்து கலந்து எங்கள் தந்தையாருடன் சேர்ந்து இசைவிருந்து பாடுவதில் எங்கள் தகப்பனாருக்கும் மகிழ்ச்சி. அண்மையில் மட்டக்களப்பிலிருந்து குழந்தைவேல் அவர்களுக்கும் திருகோணமலையிலிருந்து வடிவேல் அவர்களுக்கும் கலாபூஷண விருது வழங்கப்பட்டது யாவரும் அறிந்ததே. எங்களையெல்லாம் அரவணைத்து அன்பு செலுத்திய சின்னையாவின் பிரிவு தாங்கமுடியாத கவலை அவர் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**நகுலி, பவன், பிரியா**

## கோணேசர் கோயில் வரலாறு

**வரலாறு என்பது முடிவில்லாமற் தொடர்ந்து செல்லும் சம்பவங்களின் கோவைத் தொகுப்பு. தேவாரப் பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்தின் வரலாறுகள் வரலாற்றாசிரியர்களின் கண்ணோட்டத்திற்கேற்ப எழுதப்பட்டு வருகின்றன. இவைகளைப் படித்த போது கோணேஸ்வரத்தின் ஆதி வரலாறுகளையும், தற்போதுள்ள கோணேசர் கோயிலின் அமைப்பையும், இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்திகளின் விளக்கங்களையும் சுருக்கமாக எழுதும் எண்ணம் உதயமானது, அதுவே "கோணேசர் கோயில் வரலாறு" என்ற நூலை எழுத வைத்தது.**

**- பண்டிதர் இ. வடிவேல் -**

# REMEMBERING VIDYARAMABAM BY CHINNIAH

I can still vaguely remember chinniah carrying out the alphabet initiation (aedu thodackam) when I ws a child, and he must have done this for lot of others in the family and friends. At least Tamara had the opportunity to have this carried out by him when we were in Sri Lanka.I am sure he will be remembered by the younger members of the family too.

**Dr. Umashankar U.K**

---

# எங்கள் துருவ நட்சத்திரம்

நாங்கள் அன்பாக 'சின்னையா' என அழைக்கும் எங்கள் தாத்தா பண்டிதர் சைவப்புலவர் வடிவேல் ஐயா அவர்கள் நாங்கள் பிறந்தது முதல் எங்களுக்கு பலவகையிலும் உதவியாக இருந்தார். வித்தியாரம்பம் செய்தது தொடக்கம் எமது கல்வியின் முன்னேற்றத்திற்கும், மற்றும் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சிபெற கலங்கரை விளக்காக விளங்கினார்.

எங்கள் வாழ்வின் முன்னேற்றம் அனைத்திலும் தாத்தாவின் பங்களிப்பு நிறைய உண்டு. **'அவர் எங்கள் துருவ நட்சத்திரம்.'** அன்னாரின் பாதங்களுக்கு எங்கள் உள்ளங்கள் சமர்ப்பணம்.

***வாழ்க அவர் புகழ் என்றும்***

**- பிரணா, தயா -**

# Remembering Our Chinniyah

The world has lost a Famous poet and a scholar, but we have lost a grand father for every one he was Vadivel master but for all of us he was "chinniah" In my ease I did not gain any of his capacity for poetry or prose from him but he taught me some very valuable lessons in the early stages of my life which have made a great impact on me. One of my most memorable moments of him is of something I learnt when I was six years old. It was my Birthday and I was in Trinco for the holidays and happy to celebrate it there. I was at Accachi's house at vidyalayam lane. I woke up and went about each room gathering the wishes from my parents, aunts, uncles, cousins and grand parents who were in the house. Everyone said the usual "Happy Birthday" and gave me a hug. when I went into Chinniya's room he said "Ah saeyorn! Pirantha thina valthukal" and blessed me. Mind you, at that age my Tamil vocabulary was very limited and I could not comprehend that what he said meant the very same as what everyone else said. So I left his room feeling quite dejected thinking that he had forgotten my birthday and had blessed me as just another day. My sulky looks and complaints got his attention when he walked past me. He took me a side and inquired as to what was wrong. I answered saying that I was not happy since he forgot to wish me for my birthday.

Understanding that I had not understood the purely Tamil wishes he had given me he said "Even though you did not understand the words that I said you did see my expression and hear the tone of my voice. Did they not convene to you that what I was saying was something special and nice?" I agreed. Then he said, "There are two things for you to be learnt here. One, if you do not expect anything, anything you gain from others is additional and will be happy to gain something. Two, if you do not understand something try to understand it by asking someone. Knowledge has to be sought to be gained "If anyone else had tried to teach me such logic at that age, I would have just walked away bitter and resentful but somehow at that time I took his words for granted and walked away after he gave me a "Happy Birthday" wish Those words did not work their magic on me overnight but they did over time. The mindset it has created on me has been an asset for me over the years till this day and I am sure for many more years to come. Chinniah as your words live in our minds you will live in our hearts forever. I dedicate this to our beloved chinniah along with my brother Sarangan. Your loving grand children

**Sarangan Sivanesan.**
**Saeyorn Sivanesan**

## Remembering Chinniah Appappa

Chinniah appappa is my grandfather's brother. When I first met chinniah apappa in 1994 when I visited sri Lanka, he sat drown to tell me many religious stories. They were different from most religious stories that I have heard. Eevery year, around Tamil New year, he sent my fimily a letter with some advice for each of us. Before leaving sri Lanka during my second visit in 2001, my entire family was blassed by him and we touched his feet - treating him like a priest and as the head of the family.

Before I left for college at cornell University,he kindly offered me kind words of advice. The key idea behind the words he left me was that education is a life long journey that must be pursued at all time.

**Guru Sundar**
from Canada

## திருப்பணியும் அழிவும்

**"முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே - மன்னாகேள்
பூணைக்கண் செங்கண் புகைக் கண்ணணாண்ட பின்
மானே வடுகாய் விடும்."**

கோட்டைவாயிற் கற்தூணில் பொறிக்கப்பட்டிருக்கும் மேலே கூறப்பட்ட பாடல் குளக்கோட்டு மன்னனுடைய திருப்பணிகளையும் அதன் அழிவையும் கூறுகின்றது.

**- பண்டிதரின் கோணேசர் கோவில் வரலாறு நூலிலிருந்து -**

# நன்றி நவிலல்

- நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் அவரை அக்கறையுடன் கவனித்த மருத்துவர்களுக்கும்,

- மரணச்செய்தி அறிந்து உடனும்வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், உதவிநல்கியவர்களுக்கும்,

- இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டு எல்லாவகைகளிலும் உதவி புரிந்த நல்லுள்ளங்களுக்கும், உணவு வழங்கிய வள்ளல்களுக்கும்,

- இரங்கலுரைகள் வழங்கிய அறிவுசார் பெரியவர்களுக்கும், தேவார திருவாசங்கள் பாடிய பண்பாளர்களுக்கும்,

- மலர்வளையங்கள், மலர்மாலைகள், எழுத்துருவமான கண்ணீர் அஞ்சலிகள் வழங்கிய நிறுவனங்கள், பாடசாலைகள், மற்றும் அன்பு உள்ளங்களுக்கும்,

- செய்திகளைப் பிரசுரித்த தமிழ் இணையம், மற்றும் தினக்குரல், வீரகேசரி, சுடர்ஒளி, உதயன் ஆகிய பத்திரிகை நிறுவனங்களுக்கும், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், சக்தி, சூரியன் ஆகிய ஒலிபரப்பு நிறுவனங்களுக்கும்,

- அன்னாரின் மறைவுகேட்டு தொலைபேசிமூலமும், தந்திகள், கடிதங்கள் வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கும்,

- ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு உயர்திரு பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்கள் அவர்கள் வழங்கிய நல் உதவிகளுக்கும்,

- குடும்பவைத்தியராக இருந்து தன்மேலான சேவையை வழங்கிய டாக்டர். G. K. கிருஷ்ணதாசன் அவர்களுக்கும்,

- இந்நினைவுமலருக்கு ஆக்கங்கள் வழங்கிய பெருந்தகைகளுக்கும்,
- சிறப்பான முறையில் இம்மலரைப்பதிப்பித்துத் தந்த ஸ்ரீ கணேச அச்சகத்தாருக்கும், அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கும், பதிப்பகத்தாருக்கும்,
- இன்றைய ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குகொள்ள வருகை தந்த அன்பார்ந்தவர்களுக்கும்,
- மற்றும் எல்லாவகையிலும் உதவி நல்கிய நல்லுள்ளங்களுக்கும்,

**எங்கள் மனம்நிறைந்த**

**நன்றிகளை**

**பணிவுடன் நல்கின்றோம்.**

**வணக்கம்**

இவ்வண்ணம்
**குடும்பத்தினர்**

'பாக்கியபதி'
15, வித்தியாலயம் ஒழுங்கை
திருக்கோணமலை

- வாழ்க்கையிலும்சரி வேலையிலும்சரி, ஆன்மிக அனுபவத்திலும்சரி... நம்பிக்கை, துணிவு இவைதான் எப்போதும் இருக்கவேண்டிய மனோபாவங்கள்.

- ஒன்றில் பூரண கவனத்தைச் செலுத்தக்கூடியவர்கள் எல்லா முயர்ச்சிகளிலும் வெற்றி பெறுவார்கள். வேகமாக முன்னேறுவார்கள்.

- மனிதன் தன் விருப்பத்திற்கும் அறிவுக்கும் பயிற்சி அளித்தால் அவன் அடைய முடியாதது எதுவும் இல்லை.

- உனது நம்பிக்கையின் மூலமே சர்வ வல்லமையுள்ள பரம்பொருளின் பாதுகாப்பு உனக்குக் கிடைக்கிறது.


- எவன் உண்மையை நாடுகிறானோ, விசுவாசமும் நம்பிக்கையும் உடையவனாக இருக்கிறானோ, அவன் எதற்கும் பயப்படத்தேவையில்லை. ஆயிரம் தடைகள் எதிர்ப்பட்ட போதிலும் அவன் அவற்றை வெல்வான். இறுதியில் அவனுடைய சாதனையின் லட்சியத்தை அடைந்தே தீருவான்.

ஸ்ரீ அரவிந்தர்

## பூரண வாழ்வு

ஞானக் கண் என்பது நமது உணர்வு நிலையில் ஒருமாற்றம், புத்தியின் விழிப்பு. இறைவனின் இன்பகரமான மகிமைகளைத் தியானிப்பதால் புத்தி விழிப்படைகின்றது. அதுவே ஞானக்கண். அந்தக் கண்ணைக் கொண்டு இவ்வுலகைக் காணும் போது துன்பமும், தீமையும் நிறைந்த வாழ்க்கையின் மறுபக்கம் தெரிகின்றது. துன்ப துயரங்களிலிருந்து விலகி ஓடாமல் அவற்றையும் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான படிக்கல்லாகப் பயன்படுத்திக் கொள்வதே பூரண வாழ்வு.

- பண்டிதர் இ. வடிவேல் -



வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.